CICTArchives

# செம்மொழி

செய்தி மடல் ।

திருவள்ளுவர் ஆண்டு 2037 மாசி - 2039 சித்திரை 2006 மார்ச்சு - 2008 மே



CICTArchives

## பொருள் நிரல்

செம்மொழித் தகுதி ........ 1
ஆசிரியர் உரை ........ 2
செம்மொழித் தமிழ் வளர்ச்சித் திட்டங்கள்
- பேராசிரியர் உதய நாராயண சிங் ........ 3
முற்காலக் கல்வெட்டுக்கள் ........ 5
தமிழ் மொழி மேம்பாட்டு வாரியம் ........ 6
தமிழ் மொழி மேம்பாட்டு வாரியக் கூட்டங்கள் ........ 8
முதன்மைத் திட்டப்பணிகள் ........ 11
நிகழ்வுகள் ........ 15
தொல்காப்பியர் காலம்
- பேராசிரியர் க. வெள்ளைவாரணன் ........ 18
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்-தொடக்க விழா ........ 23
பயிலரங்குகள் ........ 24
பன்னாட்டுக் கருத்தரங்குகள் ........ 34
தேசியக் கருத்தரங்குகள் ........ 41
டாக்டர் உ. வே. சா. பிறந்த நாள் விழா ........ 50
ஆய்வு உதவித் தொகை ........ 52
விருதுகள்; நெறிமுறைகள் ........ 53
குறுகிய காலத் திட்டப்பணிகளுக்கு நிதி உதவி ........ 54

# செம்மொழி

செய்தி மடல் 1

ஆசிரியர்
பேராசிரியர் க. இராமசாமி

இணையாசிரியர்கள்
பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி
முனைவர் இரெ. குமரன்
முனைவர் ந. அரணமுறுவல்

**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**
6, காமராசர் சாலை, சேப்பாக்கம், சென்னை 600 005. தொலைபேசி : 044- 28443222
மின்னஞ்சல்: info@cict.in, director@cict.in, இணையத்தளம் : www.cict.in

CICTArchives

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

*குறள் - 975*





# செந்தமிழுக்குச் செம்மொழி என்னும் சிறப்புத் தகுதி

தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட வேண்டியதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் முடிந்துவிட்டன என்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் உள்ள ஒவ்வொரு கட்சியும் செய்த சாதனை. ஆனாலும், குறிப்பாக, இந்தப் பெருமை எல்லாம் உங்களையும் உங்கள் கட்சியையுமே சாரும்.

- திருமதி சோனியா காந்தி

(மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்திலிருந்து)

தமிழ் பல வழிகளிலும் சிறப்புமிக்க ஒரு மொழி; அதன் மாபெரும் வலிமை அது வாழும் செம்மொழியாக இருப்பதே.

- திரு அர்ஜூன் சிங்

இந்த அறிவிப்பு தமிழர்களின் ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட கனவை நனவாக்கியிருக்கிறது. தமிழக மக்களின் சார்பாகவும் உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் சார்பாகவும் மாண்புமிகு இந்தியத் தலைமையமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கும் திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும் இந்த உள்ளங்கவர் அருஞ்செயலுக்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உலகமெங்கணுமுள்ள தமிழர்கள் மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு அர்ஜூன் சிங் அவர்களுக்கும் தம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

- டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி




**மா**ண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் மதிநுட்பத்துடனும் வினைத்திட்பத்துடனும் இடையறாது மேற்கொண்ட பெருமுயற்சிகளின் பயனாக இந்திய அரசு 17.09.2004 அன்று தமிழுக்குச் செம்மொழி என்னும் தகுதியை வழங்குவதாக அறிவித்து இதற்கான அரசாணையை 12.10.2004 அன்று வெளியிட்டது. ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்பு **பரிதிமாற்கலைஞர்** கண்ட கனவைக **கலைஞர்** நனவாக்கியிருப்பது தமிழ் வரலாற்றுப் பொன்னேட்டில் வைர எழுத்துக்களால் பொறிக்கத்தக்கதாகும்.

செம்மொழித் தமிழ் குறித்த திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மைசூரில் அமைந்துள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்திடம் 2005ஆம் ஆண்டு சூலைத் திங்கள் ஒப்படைக்கப்பட்டது.

தமிழ் மொழி மேம்பாட்டு வாரியத் தலைவர், உறுப்பினர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அழைக்கப்பெற்ற பல்துறை வல்லுநர்கள் ஆகியோருடன் கலந்தாய்வுசெய்து செயல் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. இச்செயல் திட்டத்தின் கீழ்த் தமிழின் பொற்காலமெனக் கருதப்படும் செவ்வியல் காலத் (கி.பி.6ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட) தமிழ் இலக்கியம், இலக்கணம், இசை, கல்வெட்டுக்கள், நாணயங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பல்துறை ஆய்வுப் பணிகளை மேற்கொள்வதென முடிவுசெய்யப்பட்டது.

செம்மொழித் திட்டத்தின் முதன்மைப் பிரிவான செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் 2006 மார்ச்சுத் திங்களில் ஆய்வறிஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், நிருவாகப் பணியாளர்கள் ஆகியோரைக்கொண்டு தொடங்கப்பட்டது. செயல் திட்டத்தில் அடங்கியுள்ள பத்து முதன்மைத் திட்டப்பணிகளும் தொடங்கப்பெற்றுள்ளன.

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநரின் வழிகாட்டுதலின்கீழ்த் திட்டப் பணிகளுக்கு ஒருங்கிணைப்பாளர்களும் அறிவுரைக் குழு உறுப்பினர்களும் அடையாளங்காணப்பட்டுத் துறைசார்ந்த வல்லுநர்களின் உதவியோடு திட்டப்பணிகளை நிறைவேற்றத் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டுப் பணியரங்குகள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள் நடத்தப்பெறுகின்றன.

தகுதியுள்ள இளம் ஆய்வாளர்களை ஊக்குவிக்கும் வகையில் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் முனைவர் பட்ட மேலாய்வு மேற்கொள்பவர்களுக்கும் உதவித்தொகை வழங்கும் திட்டத்தின்கீழ்ச் செம்மொழித் தமிழ் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ள இளம் ஆய்வாளர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது. தகுதி வாய்ந்த அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

உலகெங்கும் செம்மொழித் தமிழாய்வுப் பணியில் ஈடுபட்டுள்ளவர்களோடு தொடர்புகொண்டு அவர்களின் முழு ஒத்துழைப்புடன் பணி நடைபெற்றுக்கொண்டுள்ளது. செம்மொழித் திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்து நடவடிக்கைகள் பற்றியும் அறிந்துகொள்ள இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

செம்மொழித் திட்டம் பெரியதொரு நிறுவனமாக மலர உலகெங்கணுமுள்ள ஆய்வாளர்களிடமிருந்து கருத்துரைகளை எதிர்பார்க்கிறோம்.

செம்மொழித் தமிழ் உயராய்வு மையத்தின் செய்திமடலான **செம்மொழி** முதல் இதழைத் தமிழ் ஆர்வலர்களுக்கிடையே தவழவிடுவதில் பெருமகிழ்வெய்துகிறோம்.

ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வுக் குறிப்புக்கள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புக்கள் போன்றவற்றை அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

– ஆசிரியர்

CICTArchives

# செம்மொழித் தமிழ் வளர்ச்சித் திட்டங்கள்

பேராசிரியர் **உதய நாராயண சிங்**

இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

செம்மொழித் தமிழின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காக இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் பலதுறை சார்ந்த அறிஞர்களின் கலந்தாய்வுக் கூட்டத்தை நடத்தியது. இக்கூட்டத்திற்குப் பேராசிரியர் உதய நாராயண சிங் தலைமைவகித்து உரையாற்றினார்.

உலகத் தமிழர்தம் உள்ளம் எல்லாம் மகிழ இந்திய அரசு தமிழுக்குச் செம்மொழி என்னும் சிறப்புத் தகுதியை வழங்கியுள்ளது. ஒரு மொழி செம்மொழி என்னும் சிறப்பைப் பெறுவதற்கு அம்மொழியின் தொன்மையும் தனித்தன்மையும் சிறப்புத் தகுதிகளாக விளங்குகின்றன. இந்திய மொழி மற்றும் பண்பாட்டு வரலாற்றில் தமிழுக்குத் தனித்ததோர் இடம் உண்டு. ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இயற்கைச் சீரழிவுகளையும் போர்களால் விளைந்த சீர்கேடுகளையும் வென்று தமிழ் மொழியும் இலக்கியமும் பண்பாடும் இன்றும் உயிர்ப்புடன் இருப்பதற்குக் காரணம் இயற்கையாகவே தமிழுக்கு வாய்க்கப்பெற்ற தனித்த ஆற்றல்தான்.

பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழும் சமஸ்கிருதமும் இந்திய நாட்டை உருவாக்குவதிலும் ஒருங்கிணைப்பதிலும் பெரும் பங்காற்றியுள்ளன. இந்திய இலக்கிய வரலாற்றில் தமிழும் சமஸ்கிருதமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல விளங்குகின்றன. இன்று தமிழ் உலகெங்கும் பரவி ஓர் உலக மொழியாக உயர்ந்துள்ளது. எனவே, செம்மொழித் தமிழ் ஆய்வுப் பணிகள் உலக அளவில் மேற்கொள்ளப்பட வேண்டும்.



செம்மொழிக்குரிய அனைத்துத் தகுதிகளையும் தமிழ் பெற்றிருக்கிறது. இந்திய அரசால் செம்மொழி என முதலில் ஏற்பளிக்கப்பட்ட மொழி தமிழேயாகும். இந்திய அரசு செம்மொழிக்குரியனவாகப் பின்வரும் தகுதிகளை வரையறுத்துள்ளது.

- ஒரு மொழி தனக்கே உரித்தான தொன்மையான இலக்கண இலக்கியங்களைக் கொண்டிருக்க வேண்டும்.
- இலக்கண இலக்கியங்கள் கடன் வாங்கப்பட்டவையாக இல்லாமல் அம்மொழிக்கே உரியனவாக இருக்க வேண்டும்.

CICTArchives

- இலக்கிய வரலாறு தொடர்ச்சியற்றதாக

இருப்பினும் காலப் பழைமை கருத்தில் கொள்ளப்படும்.

### செம்மொழித் தமிழ் வளர்ச்சித் திட்டங்கள்

தமிழைச் செம்மொழி என இந்திய அரசு அறிவித்த பிறகு செம்மொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்த மனித வள மேம்பாட்டு அமைச்சகம் முனைந்து செயலாற்றியது. செம்மொழித் தமிழ் வளர்ச்சிக்காகத் தமிழ் மொழி மேம்பாட்டு வாரியம் அமைக்கவும் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் தொடங்கவும் செம்மொழி விருதுகள், ஆய்வு உதவித்தொகைகள் வழங்கவும் அரசு ஒப்புதல் அளித்தது.

செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தின் ஓர் உறுப்பாக இருந்து செயலாற்றும். இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் தமிழ் மொழி மேம்பாட்டிற்காகப் பல திட்டங்களை வகுத்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

செம்மொழித் தமிழ்த் திட்டப்பணிகளின் வளர்ச்சிக்கு நிதி ஒரு தடையாக இருக்காது. செம்மொழித் தமிழ் ஆய்வுப் பணிகளுக்கு நடுவண் அரசு போதுமான நிதி நல்கி வருகிறது. எனவே, ஆய்வுத் திட்டங்களை வகுத்து முனைந்து செயலாற்ற வேண்டியது தமிழறிஞர்தம் கடமையாகும்.

செம்மொழித் தமிழ் வளர்ச்சிக்கான ஆய்வுக் களங்களைக் கண்டறிந்து திட்டப்பணிகளை வரையறுப்பது மிகவும் இன்றியமையாததாகும். அவ்வகையில்,

- பல்துறை சார்ந்த அறிஞர்களை ஒருங்கிணைத்துத் தமிழின் தொன்மை குறித்து ஆய்வுசெய்தல்
- தமிழ் பிற திராவிட மொழிகள் மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்து விரிவாக ஆராய்தல்
- பண்டைத் தமிழ் தொடர்பான செய்திகளை, ஆய்வுகளை ஆவணப்படுத்துதல்
- பண்டைத் தமிழின் இலக்கணம், இலக்கியம், தொல்லியல் சார்ந்த செய்திகளைக் குறும்படங்களாக உருவாக்குதல்
- இணையவழிச் செம்மொழித் தமிழ் கற்பித்தல்
- தொல்திராவிடம் (பழந்தமிழ்) தொடர்பான சான்றுகளை வரலாறு, அகழாய்வு, கலைகள் வழி ஆராய்தல்
- திராவிட மொழிகள் வரலாற்று ஒப்பாய்வும் தமிழ் வழக்காறுகள் குறித்த ஆய்வும் மேற்கொள்ளல்
- பழந்தமிழாய்வில் ஈடுபட வல்லுநர்களை வளர்த்தெடுத்தல்
- உலக அளவில் ஆய்வுக் களங்களை உருவாக்கிப் பன்னாட்டு அறிஞர்களை ஆய்வில் ஈடுபடுத்தல்

இவை போன்று இன்னும் பல செம்மொழித் தமிழ் வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். திட்டப்பணிகளை மதிப்பீடு செய்வது, அரசுக்கு அறிக்கை அளிப்பது ஆகிய பணிகளை நடுவண் நிறுவனம் மேற்கொள்ளும். செம்மொழித் தமிழின் ஆக்கபூர்வமான வளர்ச்சிக்கு அறிஞர்களும் ஆர்வலர்களும் வழங்கும் கருத்துகளுக்கு ஏற்பத் திட்டப்பணிகளில் தேவையான மாற்றங்கள் செய்யப்படும். செம்மொழித் தமிழின் சீரிய வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு தமிழ் மொழி மேம்பாட்டு வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது. பழந்தமிழ் ஆய்வில் ஈடுபட்டுள்ள தமிழ் அறிஞர்களையும் தகுதிவாய்ந்த இளைஞர்களையும் ஊக்கப்படுத்தும் நோக்கில் விருதுகளும் ஆய்வு உதவித்தொகைகளும் வழங்கப்படும்.

செம்மொழித் தமிழ்த் திட்டப்பணிகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவையாக அமைய வேண்டும். செம்மொழித் தமிழ் உயராய்வு மையத்தின் முன்னுள்ள பணி மிகப் பெரிது. இப்போதுதான் முதலடியை எடுத்து வைத்திருக்கிறோம். நாம் ஒன்றுபட்டு உழைத்துத் தமிழின் பெருமையை மேலும் உயர்த்தப் பாடுபட வேண்டும்.

CICTArchives

# முற்காலக் கல்வெட்டுக்கள்

கி.மு. 4ஆம் நூற்றாண்டு முதல்
கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரை

• கா. ராஜன்



புலிமான்கோம்பை நடுகல் கல்வெட்டு



தாதப்பட்டி நடுகல் கல்வெட்டு

தமிழகத்தில் கிடைத்துள்ள மிகத் தொன்மையான கல்வெட்டுக்கள் தமிழ் பிராமி வரிவடிவத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் ஆகும். இக்கல்வெட்டுக்கள் இயற்கையாக அமைந்த குகைத் தளங்களின் முகப்புக்களிலும் செம்மைப்படுத்தப்பட்ட கற்படுக்கைகளிலும் நெடுநிலை நடுகல்லிலும் (menhir). நடுகல்லிலும் (herostones) காணக்கிடைக்கின்றன. அண்மையில் கிடைத்த தமிழ் பிராமி நடுகல்லையும் கணக்கில் எடுத்துக்கொண்டால் இத்தகைய தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்புடைய 94 கல்வெட்டுக்கள் 32 இடங்களிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (Mahadevan 2003 : 314-447). இக்கல்வெட்டுக்கள் பெரும்பாலும் சமணத் துறவிகளுக்காக அளித்த கொடைகளைக் குறிப்பனவாகும். தமிழகத்தில் இதுவரை கிடைத்த கல்வெட்டுக்கள் அனைத்தும் சமணத்தோடு தொடர்புடையனவாக இருப்பதால் தமிழகத்தில் கல்வெட்டுக்களை அறிமுகப்படுத்தி எழுத்தறிவையும் புகுத்தியவர்கள் சமணர்கள் என்ற கருத்து நிலவியது. இக்கல்வெட்டுக்களில் காலத்தால் முந்தியதாக மாங்குளம் கல்வெட்டு கருதப்பட்டு வந்தது. ஆனால் தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி வட்டத்தில் வைகை ஆற்றங்கரையில் அமைந்துள்ள புலிமான்கோம்பை என்ற இடத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட மூன்று நடுகற்கள் தமிழக வரலாறு தொடர்பாகவும் எழுத்தறிவு தொடர்பாகவும் கொண்டிருந்த பல்வேறு அறிஞர்களின் கருத்தை மாற்றத்திற்கு உள்ளாக்கியுள்ளன (ராஜன் 2006:15). சமயம் சாராத கல்வெட்டுக்களாக இவை அமைவதுடன் சங்க இலக்கியங்களில் காணப்படும் நடுகற்கள் தொடர்பான செய்திகளுக்கு வலுச்சேர்ப்பனவாகவும் உள்ளன. இந்நடுகற்களில் காணப்படும் தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்புக்கள் மாங்குளம் கல்வெட்டுக்களின் காலத்தைவிட முந்தியதாகக் கருதப்படுவதால் தமிழகத்தில் கிடைத்த கல்வெட்டுக்களில் காலத்தால் முந்திய கல்வெட்டுக்களாக இவை தற்பொழுது கருதப்படுகின்றன. புலிமான்கோம்பையில் கிடைத்த நடுகல்லைப் போன்று அண்மையில் தாதப்பட்டி என்ற சிற்றூரிலும் நெடுநிலை நடுகல்லில் இத்தகைய தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்புடைய கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன.

*- கல்வெட்டியல். 2006. ப. 88-90*

CICTArchives

# தமிழ் மொழி மேம்பாட்டு வாரியம்



**பேராசிரியர் வா. செ. குழந்தைசாமி, தலைவர்**

சிறந்த அறிவியல் அறிஞர். குலோத்துங்கன் என்னும் புனைபெயர் கொண்ட கவிஞர். சிந்தனை வளம் செறிந்த பல ஆய்வு நூல்களின் ஆசிரியர். தமிழ் இணையப் பல்கலைக் கழகத் தலைவர். மதுரை காமராசர் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம், இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மேனாள் துணைவேந்தர். பத்மஸ்ரீ விருது (1992), சாகித்திய அகாதெமி விருது (1998), பத்மபூஷன் விருது (2002) போன்ற பல உயரிய விருதுகளைப் பெற்றவர். ஏழு பல்கலைக்கழகங்களால் டி.எஸ்.சி., டி.லிட்., மதிப்பியல் பட்டங்கள் வழங்கப்பட்ட சிறப்புடையவர். பன்னாட்டு நீரியல் திட்டத்தில் யுனெஸ்கோவின் திட்டக்குழு (1978) உறுப்பினராகப் பணியாற்றியவர். இலங்கை மொரட்டுவாப் பல்கலைக்கழகத்தில் நீர்விசைத் துறையின் யுனெஸ்கோ அறிவுரைஞராகப் (1978-81) பணிபுரிந்தவர்.

## உறுப்பினர்கள்

**முனைவர் மா. நன்னன்**

தமிழ்ப் பெரும்புலவர்; தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மேனாள் இயக்குநர். 17 ஆண்டுக் காலம் சென்னைத் தொலைக்காட்சி வழியே பாமரருக்கும் தமிழ் கற்பித்தவர். சிறந்த சொற்பொழிவாளர். 60 நாடகங்கள், 30 அரிய ஆய்வு நூல்கள் படைத்துள்ளார். 'ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர்' என அழைக்கப் பெறும் சிறப்புக்குரியவர்.

**முனைவர் சு. செல்லப்பன்**

"சிலம்பொலி செல்லப்பன்" சிலப்பதிகாரச் சுவைஞர். தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர், தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் எனப் பல நிலைகளில் பணியாற்றியவர். தமிழக அரசின் கலைமாமணி விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது ஆகிய சிறப்புக்களைப் பெற்றவர்.

**முனைவர் அப்துல் ரகுமான்**

கவிக்கோ அப்துல் ரகுமான் உலகத் தமிழ் மக்களால் நன்கு அறியப்பெற்றவர். வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியில் 30 ஆண்டுக் காலம் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். 8 கவிதைத் தொகுதிகள், 16 கட்டுரை நூல்கள், இரண்டு ஆய்வுத் தொகுதிகள் ஆகியவற்றின் ஆசிரியர். சாகித்திய அகாதெமி விருது, தமிழக அரசின் பாவேந்தர் விருது, கலைமாமணி விருது ஆகிய சிறப்புக்களைப் பெற்றவர்.

**முனைவர் மணவை முஸ்தஃபா**

தமிழக அரசின் அறிவியல் தமிழ் மன்றத் தலைவர். 1975 முதல் யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழின் நிருவாக ஆசிரியர். தென்னிந்திய மொழிகளின் புத்தக அறக்கட்டளைக்காக 120 நூல்களை எழுதி வெளியிட்டவர். தமிழக அரசின் கலைமாமணி விருது, திரு.வி.க. விருது, சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருது, குறள்பீடம் விருது ஆகிய சிறப்புக்களைப் பெற்றவர்.

**முனைவர் ஔவை நடராசன்**

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் மேனாள் செயலாளர். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முன்னைத் துணைவேந்தர். தமிழின் செழுமையையும் சீர்மையையும் அழகுற எடுத்தியம்பும் பேருரையாளர்.

**பேராசிரியர் சாலமன் பாப்பையா**

மக்களின் மனங்கவர்ந்த சொற்பொழிவாளர். மதுரை அமெரிக்கன் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைப் பேராசிரியர்-தலைவர். பல ஆய்வு நூல்களின் ஆசிரியர். தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.


மா. நன்னன்


சு. செல்லப்பன்


அப்துல் ரகுமான்


மணவை முஸ்தஃபா


ஔவை நடராசன்


சாலமன் பாப்பையா


ஈரோடு தமிழன்பன்


வா. மு. சேதுராமன்


மு. பி. பாலசுப்பிரமணியன்


ஐராவதம் மகாதேவன்

### முனைவர் ஈரோடு தமிழன்பன்

நாடறிந்த நற்றமிழ்க் கவிஞர்; தமிழ்ப் பேராசிரியர். சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தில் 15 ஆண்டுகள் செய்தி அறிக்கை படிப்பவராகப் பணிபுரிந்தவர். 29 கவிதைத் தொகுதிகள் உட்பட 50 நூல்களின் ஆசிரியர். சாகித்திய அகாதெமி விருது, தமிழக அரசின் கலைமாமணி விருது, குறள்பீடம் விருது ஆகிய சிறப்புக்களைப் பெற்றவர்.

### முனைவர் வா. மு. சேதுராமன்

'பெருங்கவிக்கோ' வா. மு. சேதுராமன் பன்னாட்டுத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் பாவலர். 30 கவிதைத் தொகுதிகள், 7 குறுங்காப்பியங்கள், 5 காப்பியங்கள், 9 பயண நூல்கள், 3 மொழிபெயர்ப்பு நூல்கள் ஆகியவற்றைப் படைத்துப் பெருமைபெற்றவர். தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றவர்.

### முனைவர் மு. பி. பாலசுப்பிரமணியன்

இதழியல் களத்தில் செம்மொழித் தமிழுக்கு மதிப்புமிகு பங்களிப்பைச் செய்துவரும் தகைசால் கல்வியாளர். காஞ்சிபுரம் பச்சையப்பன் (ஆடவர்) கல்லூரியில் 30 ஆண்டுக் காலம் பணிபுரிந்த தமிழ்ப் பேராசிரியர் - கல்லூரி முதல்வர். தமிழக அரசின் பாவேந்தர் விருது பெற்ற சிறப்பிற்குரியவர்.

### முனைவர் ஐராவதம் மகாதேவன்

இந்தியக் கல்வெட்டுத்துறையில் தனி முத்திரை பதித்த அறிஞர். சிந்துவெளி எழுத்து, பிராமி எழுத்து ஆகியவற்றில் ஆய்வு செய்துகொண்டிருப்பவர். 1970இல் 'ஜவஹர்லால் நேரு ஆய்வறிஞர்' பணி வழங்கப்பெற்றவர். 2003இல் அமெரிக்க ஹார்வார்டு பல்கலைக்கழகமும் க்ரியா பதிப்பகமும் இணைந்து வெளியிட்ட "பழந்தமிழ்க் கல்வெட்டு: பழங்காலம் முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை" என்னும் ஆய்வு நூலின் ஆசிரியர்.

## அலுவல்சார் உறுப்பினர்கள்

**இணைச் செயலாளர் (மொழி)**
மனித வள மேம்பாட்டு அமைச்சகம்,
இந்திய அரசு, புதுதில்லி

**இணைச் செயலாளர்**
பண்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு, புதுதில்லி

**நிதி ஆலோசகர்**
மனித வள மேம்பாட்டு அமைச்சகம்,
இந்திய அரசு, புதுதில்லி

**இயக்குநர் (மொழி)**
மனித வள மேம்பாட்டு அமைச்சகம்,
இந்திய அரசு, புதுதில்லி

**இயக்குநர்**
நேஷனல் புக் ட்ரஸ்ட், புதுதில்லி

**இயக்குநர்**
சாகித்திய அகாதெமி, புதுதில்லி

**இயக்குநர்**
தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை

**உறுப்பினர் - செயலாளர்**
பேராசிரியர் உதய நாராயண சிங்
இயக்குநர்
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

**ஒருங்கிணைப்பாளர்**
பேராசிரியர் க. இராமசாமி
தலைவர்
செம்மொழித் தமிழ் உயராய்வு மையம், மைசூர்

CICTArchives

# தமிழ் மொழி மேம்பாட்டு வாரியக் கூட்டங்கள்

தமிழ் மொழி மேம்பாட்டு வாரியம் இதுவரை நான்கு முறை கூடியுள்ளது.

சென்னையில் நடைபெற்ற இரண்டு கலந்தாய்வுக் கூட்டங்களில் (18.19-11-2005. 10.11-01-2006) அறிஞர்கள் தெரிவித்த கருத்துக்களைத் தமிழ் மொழி மேம்பாட்டு வாரியம் ஆழ்ந்து சிந்தித்துச் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் மேற்கொள்ள வேண்டிய திட்டப்பணிகளை வகுத்தளித்தது.

## முதற் கூட்டம்

தமிழ் மொழி மேம்பாட்டு வாரியத்தின் முதற் கூட்டம் 10-12-2005 அன்று சென்னை அடையாறறிலுள்ள நடுவண் தோல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் தமிழ் மொழி மேம்பாட்டு வாரியத்தின் தலைவர் பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி தலைமைதாங்கினார்.

மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் திருமதி பேலா பேனர்ஜி வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடக்கவுரை ஆற்றிய இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர் பேராசிரியர் உதய நாராயண சிங் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் மேற்கொண்டுள்ள தமிழாய்வுத் திட்டப்பணிகள் குறித்து எடுத்துரைத்தார்.

வாரியத் தலைவர் தமது தலைமையுரையில் செம்மொழித் தமிழ்த் திட்டம் உருவெடுப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கும் பெரிதும் துணைபுரிந்த திருமதி பேலா பேனர்ஜி. பேராசிரியர் உதய நாராயணசிங். நடுவண் அரசின் நிதித் துறை இயக்குநர் திரு எஸ். மோகன் ஆகியோருக்குப் பாராட்டும் நன்றியும் தெரிவித்துக்கொண்டார்.

'இந்திய அரசு தமிழுக்குச் செம்மொழித் தகுதியை அளித்திருப்பது. இந்தியப் பண்பாட்டுப் பாரம்பரியத்திற்குத் தமிழ் அளித்துள்ள பங்களிப்புக்குரிய தேசிய அங்கீகாரம்' என்று குறிப்பிட்ட வாரியத் தலைவர். நடுவண் பல்கலைக்கழகங்களில் செம்மொழித் தமிழாய்வு இருக்கைகள் ஏற்படுத்தவும் திட்டப்பணிகளைச் செயல்படுத்த வல்லுநர் குழுக்களை அமைக்கவும் குறுகிய காலத் திட்டப்பணிகளை மேற்கொள்ளும் அறிஞர்களுக்கு நிதி உதவி அளிக்கவும் ஆவன செய்ய வேண்டுமென்று மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தைக் கேட்டுக்கொண்டார்.

வாரியத் தலைவரின் உரையைத் தொடர்ந்து உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

உலக அளவிலும் தேசிய அளவிலும் நடத்தப்படும் மாநாடுகளும் கருத்தரங்குகளும் இந்திய நாகரிகத்தையும் பண்பாட்டையும் தமிழ்வழி அறிந்துகொள்வதற்குத் துணைபுரிய வேண்டும் எனவும் இந்திய இலக்கிய வளத்திற்கும் இந்தியத் தத்துவ மரபிற்கும் தமிழின் பங்களிப்பை



CICTArchives

மதிப்பீடு செய்வதாக நிகழ்ச்சிகளின் ஆய்வுப் பொருள்கள் அமைதல் வேண்டும் எனவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. கூட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் க. இராமசாமி நன்றிகூறினார்.

## இரண்டாவது கூட்டம்

தமிழ் மொழி மேம்பாட்டு வாரியத்தின் இரண்டாவது கூட்டம் 2006 சூலை 14, 15 ஆகிய நாட்களில் மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் நடைபெற்றது. வாரியத் தலைவர் பேராசிரியர் வா. செ. குழந்தைசாமி தலைமைதாங்கினார். நடுவண் அரசின் நிதித் துறை இயக்குநர் திரு எஸ். மோகன் வரவேற்புரையாற்றினார்.

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர் பத்து முதன்மைத் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து விரிவாகப் பேசினார். 'அறிஞர்கள் நிதி உதவி கோரி விண்ணப்பித்துள்ள திட்டப்பணிகளை வல்லுநர் குழு ஆய்வுசெய்த பிறகு நிதி உதவி வழங்க முடிவு செய்யப்படும்' என்றார்.

செம்மொழித் தமிழ்த் திட்டத்தின்கீழ் வழங்கப்படவிருக்கின்ற தொல்காப்பியர் விருது, திருவள்ளுவர் விருது ஆகியவற்றின் பரிசுத்தொகை ஐந்து லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும் என்றும் விருதுகள் குடியரசுத் தலைவரால் வழங்கப்பட வேண்டும் என்றும் வாரியத்தினர் முன்வைத்த கோரிக்கைகளை மனித வள மேம்பாட்டு அமைச்சகத்திற்குப் பரிந்துரைத்து அனுப்புவதாக இயக்குநர் தெரிவித்தார்.

வாரியத் தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டவை:

* செம்மொழித் தமிழாய்வில் அயல்நாட்டுத் தமிழறிஞர்களையும் ஈடுபடுத்த வேண்டும்.
* அயல் நாடுகளில் பாதுகாக்கப்படும் ஓலைச் சுவடிகளைத் திரட்டிக்கொணர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
* சமஸ்கிருத மொழிக்கு இந்திய அரசு வழங்கும் நிதிக்கு இணையாகத் தமிழ் மொழி மேம்பாட்டிற்கும் நிதி உதவிபெற முயலவேண்டும்.
* பழந்தமிழ் நூல்களுக்குச் சொல்லடைவு, பொருளடைவு ஆக்கும் பணிகளுக்கு நிதி உதவி கோரிப்பெற வேண்டும்.
* செம்மொழித் தமிழ்த் திட்டத்தின் கீழ் வெளிவரும் செம்பதிப்பு நூல்கள் உலகத் தரம், நம்பகத்தன்மை, துல்லியம் உடையனவாகப் பதிப்பிக்கப்பட வேண்டும்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில், பத்து முதன்மைத் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்துத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அறிக்கை அளித்தனர்.

வாரியத் தலைவர் தமிழ் இணையத்தளத்தைத் தொடங்கிவைத்துச் 'செம்மொழி' என்னும் ஆங்கிலச் செய்தி மடலை வெளியிட்டார்.

வாரியத்தினரும் விருந்தினரும் செம்மொழித் தமிழ் உயராய்வு மையத்தின் உள்கட்டமைப்பு வசதிகளையும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள செம்மொழித் தமிழ் நூலகத்தையும் பார்வையிட்டுப் பாராட்டினர்.

ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் க. இராமசாமி நன்றிநவிலக் கூட்டம் நிறைவுற்றது.

## மூன்றாவது கூட்டம்

தமிழ் மொழி மேம்பாட்டு வாரியத்தின் மூன்றாவது கூட்டம் 2007 மார்ச்சு 10, 11 ஆகிய நாட்களில் சென்னையில் உள்ள அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

பேராசிரியர் வா.செ.குழந்தைசாமி கூட்டத்திற்குத் தலைமையேற்க, நடுவண் அரசின் நிதித் துறை இயக்குநர் திரு எஸ்.மோகன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

புதிய உறுப்பினர்களாகப் பொறுப்பேற்ற நியமன உறுப்பினர் முனைவர் ஐராவதம் மகாதேவன், அலுவல்சார் உறுப்பினர் முனைவர் ம. இராசேந்திரன் ஆகியோரை வாரியத் தலைவர் அவையினருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர், முதன்மைத் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்துக் குறிப்பிடுகையில் நாற்பத்தொரு நூல்களின் செம்பதிப்புப் பணியும் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணியும் தற்பொழுது நடைபெற்று வருவதாகவும் செம்பதிப்பு நூல்களின் வரைவுப் படிகளை வல்லுநர்கள் மதிப்பாய்வு செய்துவருவதாகவும் அவை விரைவில்



CICTArchives



வெளியிடப்படும் என்றும் கூறினார். தமிழின் தொன்மையைப் புலப்படுத்தும் வகையில் சிறந்த பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பன்னாட்டு மாநாடுகள். கருத்தரங்குகள் நடத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

வாரியத் தலைவர் தமது தலைமையுரையில் செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் திட்டப்பணிகளை இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநரும் மையத்தலைவரும் சீரிய முறையில் செயல்படுத்திக் கொண்டிருப்பதைப் பாராட்டினார். பன்னாட்டு விருதும் தேசிய விருதும் வழங்குவதற்கு நடுவண் அரசு இணங்கியுள்ளதை வரவேற்றுப் பேசிய வாரியத் தலைவர். சென்னையில் செம்மொழித் தமிழ் நடுவண் நிறுவனம் அமைக்க மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

பத்து முதன்மைத் திட்டப்பணிகளின் ஆய்வு முன்னேற்றம் குறித்துத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அறிக்கை அளித்தனர்.

கூட்டத்தைச் சிறப்பான முறையில் நடத்த ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் கூட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் க. இராமசாமி நன்றி தெரிவித்துக்கொண்டார்.

## நான்காவது கூட்டம்

தமிழ் மொழி மேம்பாட்டு வாரியத்தின் நான்காவது கூட்டம் 2007 நவம்பர் 3. 4 ஆகிய இரு நாட்கள் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வாரியத் தலைவர் பேராசிரியர் வா. செ. குழந்தைசாமி தலைமைதாங்கினார். நடுவண் அரசின் நிதித்துறை இயக்குநர் திரு எஸ். மோகன் தமது வரவேற்புரையில் செம்மொழித் தமிழ் உயராய்வு மையத்தின் செயற்பாடுகள் குறித்து மனித வள மேம்பாட்டு அமைச்சகம் மன நிறைவு கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர் கடந்த பத்தொன்பது திங்கள்களில் நடைபெற்ற திட்டப்பணிகளின் வளர்ச்சி நிலைகளை எடுத்துரைத்தார். பல்வேறு ஆய்வு நிறுவனங்களைச் சார்ந்த தகுதியுள்ள இருபது முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் ஏழு முனைவர் பட்ட மேலாய்வாளர்களுக்கும் உதவித் தொகை வழங்கப்பட்டிருப்பதாகவும் ஏழு குறுகிய காலத் திட்டப்பணிகளுக்கு நிதி உதவி அளித்திருப்பதோடு மேலும் இருபத்தேழு திட்டப்பணிகளுக்கு நிதி உதவி வழங்க வழிவகைசெய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

கூட்டங்கள். கருத்தரங்குகள். மாநாடுகள் குறித்து விளக்கமளித்த இயக்குநர் இதுவரை ஐம்பத்தொன்பது நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன என்றும் நவம்பர் 2007 முதல் மார்ச்சு 2008 வரை பதினெட்டு நிகழ்ச்சிகளை நடத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

வாரியத் தலைவர் தமது தலைமையுரையில் செம்மொழித் தமிழ் உயராய்வு மையத்தின் பணிகள் நிறைவளிப்பதாகப் பாராட்டியதோடு குறள்பீடம். தொல்காப்பியர் விருதுகளுக்குரிய பரிசுத்தொகையை ரூபாய் ஐந்து லட்சமாகவும் இளம் அறிஞர்களுக்கு ரூபாய் ஒரு லட்சமாகவும் உயர்த்தியமைக்கு வாரியத்தின் சார்பில் நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார்.

2005-06. 2006-07ஆம் ஆண்டுகளுக்கான பன்னாட்டு விருதாகிய குறள்பீடம் விருது நான்கும் தேசிய விருதாகிய தொல்காப்பியர் விருது இரண்டும் இளம் அறிஞர்களுக்கான விருது பத்தும் இந்தியக் குடியரசுத் தலைவரால் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார். செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் நடத்திய மாநாடுகள். கருத்தரங்குகள் பற்றிக் குறிப்பிட்ட வாரியத் தலைவர் இந்நிகழ்ச்சிகள் வழி ஏறத்தாழ 1500 ஆய்வு மாணவர்களும் 100 இளம் படைப்பாளர்களும் பயன்பெற்றுள்ளனர். இஃது உண்மையிலேயே பாராட்டத்தக்க சாதனையாகும் என்று கூறினார்.

கூட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் க.இராமசாமி கருத்துரை வழங்கிய வாரியத் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் நன்றிதெரிவித்தார்.

CICTArchives

# முதன்மைத் திட்டப்பணிகள்

செம்மொழித் தமிழின் பழம்பெருமைகளை மீட்டெடுத்து அவற்றை இளைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தும் பெரும்பணியைச் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் செவ்வனே செய்துவருகிறது. அறிஞர்களின் ஒருமித்த கருத்திணக்கவும் தமிழ் மொழி மேம்பாட்டு வாரியச் செயற் குறிப்புக்களின்படியும் திட்டப்பணிகள் முடிவுசெய்யப்பட்டுள்ளன. அனைத்துத் திட்டப்பணிகளும் கி. பி. 6ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய செம்மொழித் தமிழை மையப்படுத்தியே அமைய வேண்டும் எனத் தீர்மானித்துச் செம்மொழித் தமிழின் தொன்மையையும் தனித்தன்மையையும் நன்கு புலப்படுத்தும் நோக்கில், உடனடியாகச் செயற்படுத்த வேண்டிய பத்து முதன்மைத் திட்டப்பணிகள் வகுக்கப்பெற்றன.

அவையாவன :

- பழந்தமிழ் நூல்களின் செம்பதிப்பு
- பழந்தமிழ் நூல்களை மொழிபெயர்த்தல்
- வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணம்
- தமிழின் தொன்மை-ஒரு பன்முக ஆய்வு
- தமிழ் வழக்காறுகள் ஆய்வுத் திட்டம்
- இந்தியா-ஒரு மொழியியல் பரப்பு
- பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம்
- இணையவழிச் செம்மொழித் தமிழ் கற்பித்தல்
- பழந்தமிழ் நூல்களுக்கான தரவகம்
- பழந்தமிழ்க் காட்சிக் குறும்படங்கள்

### 1. பழந்தமிழ் நூல்களின் செம்பதிப்பு

தொன்மைக் காலம் தொடங்கிக் கி.பி.6ஆம் நூற்றாண்டு வரையிலான 41 நூல்கள், பழந்தமிழ் நூல்கள் என வரையறுக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியம்

பத்துப்பாட்டு (10)

எட்டுத்தொகை (8)

பதினெண் கீழ்க்கணக்கு (18)

சிலப்பதிகாரம்

மணிமேகலை

முத்தொள்ளாயிரம்

இறையனார் களவியல்

இப்பழந்தமிழ் நூல்களுக்கு இன்றுவரை எத்தனையோ பதிப்புகள் வெளிவந்துள்ளன. எனினும் பதிப்புகளில் மூலபாடங்கள் சிற்சில பாடவேறுபாடுகளைக் கொண்டுள்ளன என்பதை அறிஞர் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர். பழந்தமிழ் நூல்களின் பதிப்புக்களையும் மூலச் சுவடிகளையும் ஆராய்ந்து பாடவேறுபாடுகளைத் தொகுத்தும் பிழையுள்ள பாடங்களைக் களைந்தும் மூலபாடங்களைச் செம்மைப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இந்நோக்கில் பழந்தமிழ் நூல்களின் மூலபாடங்களைச் செம்பதிப்புக்களாக வெளியிடும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்படும். முதற்கட்டமாகப் பழந்தமிழ் நூல்களுக்கு மரபுவழி மூலபாடச் செம்பதிப்பு வெளியிடப்படும். செம்பதிப்பு புணர்ச்சி - யாப்பு விதிகளுக்கு உட்பட்டும் பாட வேறுபாட்டுத் தரவுகளின் அடிப்படையில் பாடத் தெரிவு செய்யப்பட்டும் செப்பமாக உருவாக்கப்படும்.

இரண்டாம் கட்டமாகப் பழந்தமிழ் நூல்களின் மூலபாடம் சந்தி பிரிக்கப்பட்டு விரிவான எளிய உரையுடன் வெளியிடப்படும். முதற்கட்டப் பணியில் 26 பழந்தமிழ் நூல்களுக்குரிய செம்பதிப்புப் பணி முடிக்கப்பெற்றுத் தற்பொழுது மதிப்பீட்டுப் பணி நடைபெற்றுவருகிறது.

CICTArchives

### 2. பழந்தமிழ் நூல்களை மொழிபெயர்த்தல்

இப்பணியை மூன்று கட்டங்களாக நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக நாற்பத்தொரு பழந்தமிழ் நூல்களுக்கும் கிடைக்கக்கூடிய மொழி பெயர்ப்புக்கள் தொகுக்கப்பட்டு வெளியிடப்படும் (பா வடிவில் இரு மொழிபெயர்ப்புகளும் உரைநடை வடிவில் ஒரு மொழிபெயர்ப்பும் ஒவ்வொரு தொகுப்பிலும் இடம்பெறும்).

இரண்டாம் கட்டமாகப் புதிதாக ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் திட்டம் செயல்படுத்தப்படும். இப்பணியை ஆங்கிலத்தைத் தாய்மொழியாகக் கொண்ட ஆங்கில அறிஞர் ஒருவரும் தமிழறிஞர் ஒருவரும் இணைந்து மேற்கொள்வர்.

மூன்றாம் கட்டமாக இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கும் பணியும் படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

மொழிபெயர்ப்புத் திட்டத்தின் முதற் பணியாகத் திருக்குறள் அறத்துப்பாலின் 18 ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் கொண்ட ஒரு தொகுப்பு முடிக்கப்பட்டுள்ளது. அத்தொகுப்பு மூன்று தொகுதிகளாக வெளியிடப்படும். பத்துப் பழந்தமிழ் நூல்களுள் ஒவ்வொன்றுக்கும் கிடைத்துள்ள மூன்று மொழிபெயர்ப்புக்களுக்கு மதிப்பீட்டுப் பணி முடிந்துள்ளது.

முதற் பதிப்பு


உ
கணபதி துணை.
எட்டுத்தொகையுளொன்றாகிய
நற்றிணை
பின்னத்தூர்
அ. நாராயணசாமிஐயர் அவர்கள்
எழுதிய உரையுடன்
சென்னபட்டணம்
சைவவித்தியாநுபாலனயந்திரசாலையில்
அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.
இராக்ஷஸ ௵ வைகாசி ௴.] [விலை ரூபா ௫.

### 3. வரலாற்றுமுறைத் தமிழ் இலக்கணம்

செம்மொழித் தமிழின் தொன்மையையும் பழம்பெருமையையும் நிலைநிறுத்துவதற்கு வரலாற்றுமுறையில் தமிழ் இலக்கணத்தை ஆய்வு செய்தல் இன்றியமையாததாகும். வரலாற்று முறையில் தமிழ் இலக்கணம் எழுதப்பட்டுத் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் நூலாக வெளியிடப்படும். வரலாற்றுமுறையில் இலக்கணம் தொடர்பாகக் கிடைக்கப்பெறும் செய்திகள் தொகுக்கப்பெறும். பொழுது இலக்கியங்கள், உரைநடைகள், கல்வெட்டுக்கள் ஆகியவற்றின் மொழிநடைகளும் கருத்தில் கொள்ளப்பெறும். இவ்வாய்வு, பழந்தமிழ் இலக்கியக் காலம், இடைக்காலம், தற்காலம் ஆகிய காலப் பகுப்புக்களைக் கொண்டிருக்கும்.

இத்திட்டத்தின் முதற்கட்டப் பணி நிறைவுறும் நிலையில் உள்ளது.

### 4. தமிழின் தொன்மை – ஒரு பன்முக ஆய்வு

தமிழின் தொன்மையை நிலைநாட்டும் வகையில் இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுக்கள், நாணயங்கள், மட்பாண்ட ஓடுகள், பொன் நகைகள், முத்திரைகள் ஆகியவை மின்பதிப்பாக்கிப் பாதுகாக்கப்படும். கொடுமணல், அழகன்குளம், கொற்கை முதலிய இடங்களில் அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

சிந்துவெளி எழுத்துக்களின் பொருளறிந்து தமிழின் தொன்மையையும் தமிழர்தம் பண்பாட்டுப் பெருமையையும் உலகறியச்செய்யத் திட்டம் தீட்டப்பட்டுப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

### 5. தமிழ் வழக்காறுகள் ஆய்வுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் வட்டாரம், தொழில்சார்ந்த தமிழ் வழக்காறுகள் தொகுக்கப்படும். உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழர்கள் பற்றிய புள்ளிவிவர ஆய்வும் மேற்கொள்ளப்படும்.

**முதற் பதிப்பு**


கணபதி துணை.

எட்டுத்தொகையுள் ஒன்றாகிய

பதிற்றுப்பத்துமூலமும்,

பழையவுரையும்.

இவை,

வே. சாமிநாதையரால்

சென்னபட்டணம்:

வைஜயந்தி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

1904.

Copyright Registered.

தமிழ் வழக்காறுகள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுவருகிறது. அகர முதலிகளில் இடம்பெறாத ஏறத்தாழ ஒரு லட்சம் வழக்குச் சொற்களைத் திரட்ட இலக்கு இடப்பட்டுத் தற்பொழுது 40,000 சொற்கள் கணினியாக்கம் செய்யப்பட்டுள்ளன. 1500 வினாக்கள் அடங்கிய வினாநிரல் பட்டியலுடன் 30 ஆய்வாளர்கள் களப்பணி மேற்கொண்டுள்ளனர்.

## 6. இந்தியா – ஒரு மொழியியல் பரப்பு

திராவிட மொழிகளின் வாழ்விடமாக விளங்கும் இந்திய நிலப்பரப்புப் பல மொழிகளின் கூட்டுறவால் பன்மொழித் தோற்றம்பெற்றுள்ளது.

தமிழைப் பிற இந்திய மொழிகளோடும் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த குறுமொழிகளோடும் ஒப்பிட்டு ஆராய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாய்வின் வழித் தமிழ் - இந்திய மொழிகள் என்னும் பன்மொழி அகரமுதலி ஒன்றும் உருவாக்கப்படும்.

## 7. பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம்

செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் உலக அறிஞர்களும் ஆய்வாளர்களும் பயன்பெறும் வகையில் பழந்தமிழ் ஆய்வுக்கெனப் புதிய அறிவியல் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய மிகப்பெரிய நூலகம் ஒன்றை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. அரிய சுவடிகள், கையெழுத்துப் படிகள், நூல்கள் ஆகியவற்றைத் தேடிக் கண்டுபிடித்து மின்பதிப்பாக்குவதோடு உலகில் எவரும் தமக்கு வேண்டிய ஆய்வுத் தரவுகளை எளிதில் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாகவும் இந்நூலகம் வடிவமைக்கப்படுகிறது. இதன் தொடக்கநிலைப் பணிகள் தற்பொழுது நிறைவுபெற்றுள்ளன.

தமிழில் வெளியாகும் அனைத்துப் படைப்புகளும் தமிழ் தொடர்பான பிறமொழிப் படைப்புகளும் இந்நூலகத்தில் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களை இசைவடிவிலும் உரைவடிவிலும் படக்கோப்புடன் கண்டும் கேட்டும் மகிழலாம்.

மின்நூலக வடிவமைப்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதுவரை பழந்தமிழ் தொடர்பான அரிய பதிப்புக்களாக 3,850 நூல்களும் ஓலைச் சுவடிகளை மின்பதிப்பாக வெளிக்கொணரும் திட்டத்தின் கீழ்ப் பல குறுந்தகடுகளும் மின்நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

## 8. இணைய வழிச் செம்மொழித் தமிழ் கற்பித்தல்

செம்மொழித் தமிழின் சிறப்பை உலகம் முழுவதும் பரப்பும் நோக்குடன் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பழந்தமிழ் நூல்களை எளிய முறையில் பயில விரும்புவோர் இணையம் வழியே கற்றுப் பயன்பெறலாம்.

பழந்தமிழ் இலக்கியப் பாடத்திட்டம் நான்கு பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் 30 மணி நேரம் என 120 மணிநேரம் பாடங்கள் கற்பிக்கப்படும். பயில்வோரை மதிப்பீடுசெய்ய முதல்நிலை, தொகுநிலை என்ற இரண்டு கட்டங்களுக்குப் பன்னிரண்டு மணிநேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. பயனாளர்தம் எண்ணிக்கைக்கும் கருத்திற்குமேற்ப இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

CICTArchives

### 9. பழந்தமிழ் நூல்களுக்கான தரவகம்

செம்பதிப்புக்களாக வெளிவரும் 41 பழந்தமிழ் நூல்களும் அவற்றுக்கான எழுத்துப்பெயர்ப்பு, மொழிபெயர்ப்பு, உரைகள், அருஞ்சொற் பொருள்கள், இலக்கணக் குறிப்புக்கள் ஆகியனவும் கணினியில் உள்ளீடுசெய்யப்படும்.

தரவக வடிவமைப்பில் பழந்தமிழ் நூல்களைப் பற்றிய எந்த ஒரு குறிப்பையும் எளிதில் கண்டறியப் பலவகையில் தேடிக்கண்டறியும் தொழில்நுட்ப வசதிகளும் உருவாக்கப்படும்.

### 10. பழந்தமிழ்க் காட்சிக் குறும்படங்கள்

இத்திட்டத்தின்கீழ்த் தமிழின் அரிய வரலாற்றுக் கருவூலங்களாகிய இலக்கணம், இலக்கியம், கல்வெட்டு, நாணயங்கள், கலைகள், வழிபாடுகள், அயலகத் தமிழ் உறவுகள் ஆகியன குறித்து நூறு காட்சிக் குறும்படங்கள் உருவாக்கப்படும். இவற்றுக்கான முன்வரைவுப் பணிகள் நிறைவுற்றுள்ளன.

செம்மொழித் தமிழின் மேன்மைக்கு ஆற்ற வேண்டிய அரும்பணிகளாக இம்முதன்மைத் திட்டப்பணிகள் திகழ்கின்றன. இப்பத்து முதன்மைத் திட்டப்பணிகளையும் நிறைவேற்றத் தகுதிவாய்ந்த அறிஞர்கள் திட்டப்பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இத்திட்டப்பணிகளில் அவ்வத்துறை சார்ந்த அறிஞர்கள் அறிவுரைக்குழுவில் இடம் பெற்றுள்ளனர். திட்டப்பணிகளில் அயலகத் தமிழறிஞர்களையும் ஈடுபடுத்தச் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் திட்டமிட்டுவருகிறது.

## செம்மொழித் தமிழ் இணையத்தளம்

## www.ciil-classicaltamil.org



CICTArchives

# நிகழ்வுகள்

**2005 நவம்பர் 18, 19**
முதல் தேசியக் கலந்தாய்வுக் கூட்டம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

**2006 சனவரி 10, 11**
இரண்டாவது தேசியக் கலந்தாய்வுக் கூட்டம்
தேசியத் தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

**2006 பிப்ரவரி 1, 2**
பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம்
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

**2006 பிப்ரவரி 11**
தமிழ் வழக்காறுகள் ஆய்வு
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

**2006 பிப்ரவரி 17**
தமிழின் தொன்மை - ஒரு பன்முக ஆய்வு
சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறை
சென்னை

**2006 பிப்ரவரி 18**
பழந்தமிழ் நூல்களுக்கான தரவகம்
சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறை
சென்னை

**2006 பிப்ரவரி 22, 23**
பழந்தமிழ் நூல்களின் மொழிபெயர்ப்பு
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்

**2006 பிப்ரவரி 24, 25**
வரலாற்று முறைத் தமிழ் இலக்கணம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்

**2006 பிப்ரவரி 27, 28**
பழந்தமிழ் நூல்களின் செம்பதிப்பு
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்

**2006 மார்ச்சு 2, 3**
இந்தியா - ஒரு மொழியியல் பரப்பு
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்

**2006 மார்ச்சு 6, 7**
பழந்தமிழ்க் காட்சிக் குறும்படங்கள்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**2006 மார்ச்சு 8, 9, 10**
இணைய வழிச் செம்மொழித் தமிழ் கற்பித்தல்
கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை
திருவனந்தபுரம்

**2006 சூன் 5, 6**
செம்பதிப்பு - கலந்தாய்வு
சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறை
சென்னை

**2006 சூன் 11**
பழந்தமிழ் நூல்களுக்கான தரவகம்
சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறை
சென்னை

**2006 சூன் 26, 27**
பழந்தமிழ் நூல்களின் மொழிபெயர்ப்பு
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**2006 சூலை 28**
பழந்தமிழ் நூல்களின் மொழிபெயர்ப்பு
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

**2006 அக்டோபர் 11, 12**
பழந்தமிழ் நூல்களின் செம்பதிப்பு
சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறை
சென்னை

**2006 நவம்பர் 28**
ஆய்வுத் திட்டங்களுக்கு நிதி உதவி
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்

CICTArchives

## 2006 நவம்பர் 29

நூல் வெளியீடு - கலந்தாய்வு
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்

## 2006 நவம்பர் 30

கருத்தரங்குகள், மாநாடுகள் நடத்த நிதி உதவி
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்

## 2006 திசம்பர் 30

நிறுவன உருவாக்கக் குழுக் கூட்டம்
அண்ணா பல்கலைக்கழகம்
சென்னை

## 2007 பிப்ரவரி 20, 21

பழந்தமிழ்ப்பாக்கள்
மரபு வழிப் படித்தலும் பாடுதலும்
இசைக் குறுந்தகடுகள் உருவாக்கம்
கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

## 2007 மார்ச்சு 21, 22, 23

செம்பதிப்பு மூலபாட ஆய்வு
தொல்காப்பியம், இறையனார் களவியல்
சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறை
சென்னை

## 2007 மார்ச்சு 28, 29, 30

செம்பதிப்பு மூலபாட ஆய்வு
சிலப்பதிகாரம், மணிமேகலை
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்

## 2007 ஏப்ரல் 2

நூல் வெளியீடு - கலந்தாய்வு
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்

## 2007 ஏப்ரல் 27

பழந்தமிழ் நூல்களின் மொழிபெயர்ப்பு
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## 2007 ஏப்ரல் 27, 28

செம்பதிப்பு மூலபாட ஆய்வு
பதிற்றுப் பத்து
சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறை
சென்னை

## 2007 சூன் 21, 22, 23

செம்பதிப்பு மூலபாட ஆய்வு
பரிபாடல், ஐங்குறுநூறு
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்

## 2007 சூன் 26

பழந்தமிழ் ஆய்வுக்கான மின் நூலகம்
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்

## 2007 ஆகஸ்டு 23

பழந்தமிழ்க் காட்சிக் குறும்படங்கள்
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்

## 2007 செப்டம்பர் 17

கருத்தரங்கு மாநாடுகள் நடத்த நிதி உதவி
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

## 2007 செப்டம்பர் 18

குறுகிய காலத் திட்டப்பணிகளுக்கு நிதி உதவி
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

## 2007 செப்டம்பர் 20

பழந்தமிழ்க் காட்சிக் குறும்படங்கள்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

## 2007 செப்டம்பர் 21

பழந்தமிழ்க் காட்சிக் குறும்படங்கள்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை

**2007 செப்டம்பர் 22**
பழந்தமிழ்க் காட்சிக் குறும்படங்கள்
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

**2008 மார்ச்சு 24, 25, 26**
செம்மொழித் தமிழ் - பாடத்திட்டம்
பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை
கோயமுத்தூர்

**2008 மார்ச்சு 31 முதல் ஏப்ரல் 7 வரை**
தொல்காப்பியம் முற்றோதல்
குறுந்தகடு உருவாக்கம்
கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

## பணியரங்குகள்

**இணைய வழிச் செம்மொழித் தமிழ் கற்பித்தல்**

**2006 ஏப்ரல் 17 முதல் 23 வரை**
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்

**2006 சூலை 28 முதல் ஆகஸ்டு 3 வரை**
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்

**2007 பிப்ரவரி 3 முதல் 9 வரை**
ஸ்காட் கிருத்துவக் கல்லூரி
நாகர்கோயில்

**2007 மே 3 முதல் 12 வரை**
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மைசூர்

**2007 சூன் 23 முதல் சூலை 2 வரை**
எஸ்.டி. இந்துக் கல்லூரி
நாகர்கோயில்

**2008 சனவரி 28 முதல் பிப்ரவரி 6 வரை**
எஸ்.டி. இந்துக் கல்லூரி
நாகர்கோயில்

**2008 மார்ச்சு 24 முதல் 31 வரை**
எஸ்.டி. இந்துக் கல்லூரி
நாகர்கோயில்

## இசைக் குறுந்தகடுகள்

பழந்தமிழ்ப் பாக்கள்
மரபுவழிப் படித்தலும் பாடுதலும்




தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை

தொல்காப்பியம் முற்றோதல்



CICTArchives

# தொல்காப்பியர் காலம்

பேராசிரியர் க. வெள்ளைவாரணன்

உலக வழக்கும் இலக்கியத் தொன்மையும் வாய்ந்த தமிழ் மொழியை இனிய. எளிய இலக்கண வரம்பு கோலிப் போற்றி வளர்த்தவர் ஆசிரியர் தொல்காப்பியனார் ஆவர். அவர் வாழ்ந்த காலம் இதுவென அறிதற்குப் பனம்பாரனார் இயற்றிய தொல்காப்பியச் சிறப்புப் பாயிரமும் இறையனார் களவியலுரையும் அதனை அடியொற்றி இளம்பூரனார் முதலிய பழைய உரையாசிரியர்கள் எழுதிய உரைக் குறிப்புக்களும் சான்றுகளாக உள்ளன. தொல்காப்பியத்திற் காணப்படும் தமிழிலக்கண அமைப்பும் அதனை அவ்வாறே அடியொற்றியும் காலப்போக்கில் சிறிது வேறுபட்டும் அமைந்த திருக்குறள். சங்கச் செய்யுட்கள். சிலப்பதிகாரம் முதலிய பழைய தமிழிலக்கியங்களின் சொற்பொருளமைதியும் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆசிரியர் தொல்காப்பியனார் வாழ்ந்த காலப்பகுதி இதுவெனத் துணிதற்குரிய சிறந்த ஆதாரங்களாக அமைந்துள்ளன. பண்டைக் காலத்துப் பாண்டியர்கள் கல்வி வளர்ச்சி கருதிப் புலவர் பலரையும் ஒருங்கழைத்துத் தமிழ்ச் சங்கங்களை மும்முறை நிறுவித் தமிழ் வளர்த்த வரலாறு இறையனார் களவியலுரையில் விரித்துரைக்கப் பெற்றுள்ளது. கடல் கொள்ளப்பெற்ற தென்மதுரையில் முதற் சங்கமும். கபாடபுரத்தில் இரண்டாவது சங்கமும். கபாடபுரம் கடல்கோளால் அழிவுற்ற நிலையில் இப்பொழுதுள்ள கூடலம் பதியாகிய மதுரையில் மூன்றாவது சங்கமும் நிகழ்ந்தன எனவும். தலைச்சங்கம் 4440 ஆண்டும். இடைச்சங்கம் 3700 ஆண்டும். கடைச்சங்கம் 1800 ஆண்டும் நிலைபெற்றிருந்தன எனவும். இடைச்சங்கத்திலிருந்து தமிழாராய்ந்தாருள் ஆசிரியர் தொல்காப்பியனாரும் ஒருவர் எனவும். அவரால் இயற்றப்பெற்ற தொல்காப்பியம் இடைச் சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் இலக்கண நூலாயிற்று எனவும் களவியல் உரையாசிரியர் தெளிவாகக் குறித்துள்ளார்!

பாண்டியர்க்குரிய தலைநகரம் கபாடம் எனவும். அது தாமிரபரணிக்குத் தெற்கேயுள்ளதெனவும். வடமொழி ஆதிகாவியமாகிய வான்மீகி ராமாயணம் கூறும் குறிப்பு மேற்குறித்த முச்சங்க வரலாற்றுக்கு அரண் செய்யும் முறையில் அமைந்துள்ளமை காணலாம்.

தொல்காப்பியர் காலத்தில் வடக்கே வேங்கடமும். தெற்கே குமரியாறும் தமிழகத்தின் எல்லைகளாக அமைந்திருந்தன என்பது. 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து' எனவரும் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத் தொடரால் இனிது புலனாம். தொல்காப்பியர் காலத்தில் தெற்கெல்லையாக விளங்கிய குமரியாறு அவர் காலத்திற்குப் பின் நிகழ்ந்த கடல்கோளால் அழிவுற்றது. இக் கடல்கோள் இடைச் சங்கத்தின் இறுதியில் முடத்திருமாறன் காலத்தில் நிகழ்ந்திருத்தல் வேண்டும். இச்செய்தி. 'அக்காலத்துப் போலும் பாண்டியனாட்டைக் கடல் கொண்டது' என இடைச்சங்க வரலாற்றின் இறுதியிலும். அவர்களைச் 'சங்கம் இரீஇயினார். கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதியீறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப' - எனக் கடைச் சங்க வரலாற்றிலும் களவியலுரையாசிரியர் குறித்துள்ளமையாற் புலனாம். தொல்காப்பியர் காலத்திற்குப் பின் நிகழ்ந்த இக் கடல் கோளால் குமரியாறு அழியவே தமிழ் நாட்டின் தெற்கெல்லையாகக் குமரிக்கடல் அமைவதாயிற்று.

> நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்
> தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாட்டு
>
> *(சிலப். வேனிற். 1. 2)*

என இளங்கோவடிகள் தம் காலத் தமிழகத்தின் எல்லையைக் குறித்துள்ளார். 'நெடியோன் குன்றம் - வேங்கடமலை. தொடியோள் பௌவம் - குமரிக் கடல்' என்பது அரும்பதவுரையாசிரியர் குறிப்பு. நெடியோன் குன்றமும் தொடியோள் நதியும் என்னாது. பௌவம் என்றது என்னையெனின். முதலூழியிறுதிக்கண் தென்மதுரைத் தலைச்சங்கத்து...... நிலந்தரு திருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇயினான். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலிமுகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி என்னும் ஆற்றிற்கும் குமரி என்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காவதவாறும். இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும். ஏழ்மதுரை நாடும். ஏழ்முன்பாலை நாடும். ஏழ்பின்பாலை நாடும். ஏழ்குன்ற நாடும். ஏழ்குணகாரை நாடும். ஏழ்குறும்பனை நாடும் என்னும் நாற்பத்தொன்பது நாடுகளும். குமரி. கொல்லம் முதலிய பன்மலை நாடும் காடும் நாடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி

CICTArchives

வடபெருங்கோட்டின்காறும் கடல்கொண்டு ஒழிதலாற குமரியாகிய பௌவம் என்றார் என்றுணாக. இஃது என்னை பெறுமாறு எனின்.

> வடிவே லெறிந்த வான்பகை பொறாது
> பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
>
> *(சிலம்பு. காடுகாண். 18-20)*

என்பதனானும். கணக்காயர் மகனார் உரைத்த பொருளுரையானும். உரையாசிரியராகிய இளம்பூரண அடிகள் முகவுரையானும். பிறவாற்றானும் பெறுதும் என்பது அடியார்க்குநல்லார் கூறும் விளக்கமாகும்.

தமிழ் நாட்டின் தென்பகுதியிற பஃறுளியாறும் குமரியாறும் ஓடின என்பதும். அவ்விரு பேராறுகளின் இடையே எழுநூற்றுக்காவத அளவில் 49 நாடுகள் அமைந்திருந்தன என்பதும். தெறகிலிருந்து மீதூர்ந்து வந்த கடல் பஃறுளியாற்றுடன் பல மலை யடுக்கங்களையும் உள்ளடக்கிக் குமரியாற்றின் வடகரையளவும் பரவி அழித்தமையால் தமிழ் நாட்டின் தென்னெல்லை குமரிக்கடலாயிற்று என்பதும் மேற்குறித்த இளங்கோவடிகள் வாய்மொழியாலும் அடியார்க்குநல்லார் உரையாலும் இனிது புலனாதல் காணலாம்.

கி. மு. நான்காம் நூற்றாண்டில் சந்திரகுப்த மன்னனுக்கு அமைச்சராக விளங்கிய சாணக்கியா. தமது பொருள் நூலில் முத்துக்கள் கிடைக்கும் இடங்களைக் கூறுமிடத்துப் 'பொருநையாறு' 'பாண்டிய கபாடம்' என்னும் இடங்களைக் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பினை உற்று நோக்குங்கால் அவா காலத்திற பாண்டிய நாட்டுக் கபாடபுரத்துக் கடற்றுறையில் முத்துக்கள் எடுக்கப்பெற்ற செய்தி நன்கு விளங்கும்.

கயவாகு என்னும் பெயருடைய வேந்தா இருவா இலங்கையில் ஆட்சி புரிந்துள்ளார்கள். அவ் விருவருள் முதற் கயவாகுவின் காலம் கி. பி. 71-193 என்பது ஆராய்ச்சியாளா துணிபு.[2] செங்குட்டுவன் கண்ணகிக்குத் திருவுருவமைத்துக் கடவுள் மங்கலஞ் செய்த நாளில். இக் கயவாகு வஞ்சி நகரத்திறகு வந்து கண்ணகியன்னையை வழிபட்டுச் சென்ற செய்தியைச் செங்குட்டுவன் தம்பியாகிய இளங்கோவடிகள் குறித்துள்ளார். எனவே. இளங்கோவடிகள் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டென்பது நன்கு தெளியப்படும். இளங்கோவடிகளும் அவா காலத்தும் அவர்க்கு முன்னும் வாழ்ந்த கடைச்சங்கப் புலவர்களும் திருக்குறளிலுள்ள சொற்றொடர்களையும். கருத்துக்களையும் தம் செய்யுட்களில் எடுத்தாண்டுள்ளார்கள். ஆகவே. திருவள்ளுவா காலம் கி. மு. முதல் நூற்றாண்டெனக் கொள்ளுதல் பொருத்தமுடையதாகும்.

திருவள்ளுவா தொல்காப்பிய இலக்கணத்தினை வரம்பாகக் கொண்டே திருக்குறளை இயற்றியுள்ளார். உலக மககளால் கருதத்தக்க பொருள்கள் அறம். பொருள். இன்பம் என்னும் இம்மூன்றுமே என்பதனை. 'அந்நிலை மருங்கின் அற முதலாகிய மும்முதற் பொருள்'[3] என்ற தொடராற் குறித்த தொல்காப்பியா. அறத்தினாற் பொருளை ஈட்டி அப்பொருளால் இன்பம்


தொல்காப்பியம்.
இஃது
தொல்காப்பியமகாரிஷியினால்
நச்சினார்க்கினியரால்
மகாலிங்கையரவர்களால்
வீரபத்திரையரால்
1847

CICTArchives

நுகரும் வாழ்க்கை முறையினை 'மூன்றன பகுதி'[4] என முப்பால்களாகப் பகுத்துள்ளார். தொல்காப்பியர் கூறும் இப்பகுப்பு முறையினை அடிப்படையாகக்கொண்டே அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனத் திருக்குறளை முப்பால்களாகத் திருவள்ளுவர் வகுத்தமைத்தார்.

தொல்காப்பியர் வாய்மொழியினை அவ்வாறே எடுத்தாண்ட பகுதிகள் திருக்குறளிற் காணப்படுகின்றன. 'எழுத்தெனப் படுப அகர முதல னகர விறுவாய்' எனத் தொல்காப்பியர் தமது நூலைத் தொடங்கியுள்ளார். திருவள்ளுவரும் 'அகர முதல எழுத்தெல்லாம்' - என அகர முதலாகத் தொடங்கிக் 'கூடி முயங்கப் பெறின்' என னகர இறுதியாகத் திருக்குறளை அமைத்துள்ளார். 'நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்தும் கலந்த மயக்கம் உலகம்' என்றார் தொல்காப்பியர். 'சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின் வகைதெரிவான் கட்டே யுலகு' (திருக்.27) என்றார் திருவள்ளுவர். 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப' (தொல். செய்யுளியல் -171) என வரும் நூற்பாவினை அடியொற்றி அமைந்தது 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்'(28) என வரும் திருக்குறளாகும். 'அருள்முந் துறுத்த அன்புபொதி கிளவி'.[5] என வரும் தொல்காப்பியத் தொடர்ப்பொருளை, 'அருளென்னும் அன்பீன் குழவி'(757) என வரும் திருக்குறள் இனிது புலப்படுத்துகின்றது. இவ்வாறு தொல்காப்பியச் சொற்றொடர்களையும், கருத்துக்களையும் திருக்குறள் தன்னகத்தே கொண்டு விளங்குதலால் தொல்காப்பியர் திருவள்ளுவர்க்குக் காலத்தால் முந்தியவர் என்பது நன்குபெறப்படும்.

ஒரு மொழிக்கு இலக்கண நூல் செய்யும் ஆசிரியர், தம் காலத்திலுள்ள எல்லா இலக்கியங்களையும் இலக்கணங்களையும் நன்கு ஆராய்ந்த பின்னரே அந்நூல்களிற் காணப்படும் மொழியியல்புகளைத் தொகுத்தும் வகுத்தும் உரைப்பது இயல்பு. ஆசிரியர் தொல்காப்பியர், கபிலர், பரணர், நக்கீரர் முதலிய சங்கப் புலவர்கட்கும் திருவள்ளுவர்க்கும் காலத்தால் பிற்பட்டவராயின் இப்புலவர் இயற்றிய நூல்களில் அமைந்த மொழியியல்புக்குப் பொருந்தும் முறையில் தாம் இயற்றும் தொல்காப்பியத்தில் விதிகளை அமைத்திருப்பார். தொல்காப்பிய நூலில் விதந்து கூறப்பட்ட விதிகட்கும் சங்கச் செய்யுட்களிலும் திருக்குறளிலும் அமைந்த மொழி நடைக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படுவதொன்றே தொல்காப்பியர் கடைச் சங்கப் புலவர்கட்கும் திருவள்ளுவர்க்கும் பன்னூறாண்டுகள் முற்பட்டவர் என்பதற்குப் போதிய சான்றாகும்.

தொல்காப்பிய விதிகட்கு மாறான சொல்வழக்குகள் சில சங்கச் செய்யுட்களிலும், திருக்குறளிலும் காணப்படுகின்றன. தொல்காப்பியர் காலத்தில் 'கள்' என்னும் பன்மை விகுதி அஃறிணையில் மட்டுமே வழங்கியதென்பது

கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே

*(தொல். பெயரியல் -5)*

என்ற நூற்பாவால் அறியப்படும். இவ்விதிக்கு மாறாக, 'பூரியர்கள்' (910), 'மற்றையவர்கள்' (263) எனத் திருக்குறளிலும், 'ஐவர்கள்' (26) எனக் கலித்தொகையிலும் உயர்திணையிற் கள் விகுதி வழங்கப்பெற்றுளது.

தொல்காப்பியத்திற் காணப்படாத புது வழக்குகள் சில சங்கநூல்களிலும், திருக்குறளிலும் காணப்படுகின்றன.

'அல்லால்' (377), 'சூழாமல்' (1024), 'அல்லனேல்' (386), 'வேபாக்கு' (1128) எனத் திருக்குறளிலும், 'பொருளல்லால்'(14) 'கூறாமல்' (1), 'கேளாமை' (108) எனக் கலித்தொகையிலும் ஆல், ஏல், மல், மை, பாக்கு என்னும் இறுதியையுடைய வினையெச்சங்கள் பயின்று வழங்குகின்றன. இவை தொல்காப்பியத்திற் கூறப்படாத புதிய வினையெச்ச வாய்பாடுகளாகும்.

சங்கச் செய்யுட்களில் அருகிக் காணப்படும் சமய விகற்பங்களைப்பற்றிய குறிப்புக்கள் தொல்காப்பியத்தில் இடம் பெறவில்லை. மாயோன், சேயோன், வருணன், வேந்தன் என்னும் நானிலத் தெய்வங்களுடன் வெற்றி விளைக்கும் கொற்றவையையும் எல்லா நிலத்திற்கும் உரிய நிலையிற் கடவுள் என்னும் பெயரையும் தொல்காப்பியர் தம் நூலிற் குறிப்பிடுகின்றார். சங்கச் செய்யுட்களில் காரியுண்டிக் கடவுள், மணிமிடற்றோன், முக்கணன் என இறைவனை உருவநிலையில் வைத்து வழிபடும் வழிபாடு காணப்படுகிறது. திருமால் வழிபாட்டில் செங்கட்காரி (வாசுதேவன்), கருங்கண்வெள்ளை (சங்கருடணன்), பொன்கட்பச்சை (பிரத்தியும்நன்), பைங்கண்மால் (அநிருத்தன்) ஆகிய நால்வகை வியூகமும் பரிபாடலிற் கூறப்பட்டுள்ளன.

இதுகாறும் எடுத்துக்காட்டியவற்றால் இயற்றமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம், சங்க இலக்கியத்திற்கும் திருக்குறளுக்கும் பன்னூறாண்டு முற்படத் தோன்றிய தொன்மையுடையதென்பது நன்கு துணியப்படும்.

பாணினீயம் என்னும் வடமொழி இலக்கணம் கி. மு. ஆறாம் நூற்றாண்டளவிற் பழைமை கூறப்படுகின்றது. பாணினி முனிவர் காலம் கி. மு. 900 என, சி. வி. வைத்தியா என்பவர் 'வேதகால சமஸ்கிருத இலக்கிய வரலாறு' என்னும் நூலிற் கூறியுள்ளார். வினைகளே எல்லாச் சொற்களுக்கும் முதனிலை (தாது) என விளக்கி, ஒரு முதனிலையிற் பிறந்த பல சொற்களுக்கு இலக்கணம் கூறும் முறையில் அமைந்தது பாணினியார் இயற்றிய அஷ்டாத்தியாயி என்னும் வியாகரணமாகும். இம்முறை தொல்காப்பியத்திற் காணப்படவில்லை. தொல்காப்பியரது வடமொழி இலக்கணப் பயிற்சியைப் பாராட்டக் கருதிய ஒரு சாலை மாணாக்கராகிய பனம்பாரனார், 'ஐந்திரம்

CICTArchives

# தொல்காப்பியர் காலம்

நிறைந்த தொல்காப்பியன்' என அவரது ஐந்திர வியாகரணப் பயிற்சியைச் சிறப்பித்துள்ளார். வடமொழி வியாகரணங்களில் தலைசிறந்து விளங்குவது பாணினி முனிவர் இயற்றிய வியாகரணமே என்பது பலரும் அறிந்தது. தொல்காப்பியர் பாணினிக்குக் காலத்தாற் பிற்பட்டவராயின் வடமொழி வியாகரணங்களில் தலைசிறந்து விளங்கும் பாணினீயத்தைக் கற்றுவல்லவர் தொல்காப்பியர் என்றே பனம்பாரனார் அவரைப் பாராட்டியிருப்பர். அங்ஙனங் கூறாது 'ஐந்திர நிறைந்த தொல்காப்பியன் எனத் தன்பெயர் தோற்றி' என ஐந்திர நூற் பயிற்சியொன்றையே சிறப்பித்துக் கூறுதலால். வட மொழியிற் பாணினி முனிவர் வியாகரணத்தினை இயற்றுதற்கு முன்னரே தமிழில் தொல்காப்பியம் இயற்றப்பெற்றதென்பதும். எனவே பாணினி முனிவர் காலத்திற்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர் தொல்காப்பியர் என்பதும் நன்கு துணியப்படும்.

இனி. பனம்பாரனார் குறித்த ஐந்திரம் என்பது வைதிக சமயத் தொடர்பில்லாத பிறிதொரு நூல் என்றும். அது சமணர்களால் இயற்றப்பெற்றதென்றும். அந்நூலினைப் பயின்ற தொல்காப்பியர் பாணினிக்குக் காலத்தால் பிற்பட்டவரென்றும் அறிஞர் வையாபுரிப் பிள்ளையவர்கள் கருதுவர்.[6] இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திர நூற்பயிற்சியைப் பராசரன் என்னும் வேதியன் பாராட்டிப் போற்றினன் எனவும். கவுந்தியடிகள் என்னும் சமனத் துறவி ஐந்திர நூற்பயிற்சியைப் புறக்கணித்துத் தம் சமண சமய நூலாகிய பரமாகம நூற்பொருளைப் பாராட்டி உரைத்தனர் எனவும். இளங்கோவடிகள் அவ்விருவர் மனநிலையினையும் இனிது புலப்படுத்துகின்றார்.[7] ஆகவே ஐந்திர வியாகரணம் வைதிகரல்லாத புறச் சமயத்தாரார் போற்றிப் பயிலப்பெற்ற பிறகாலத்து நூல் என்னும் கருத்து பொருந்தாமை காணலாம்.

பாண்டியர்க்குரிய தலைநகரமாகிய கபாடபுரம் தாமிரபரணிக்குத் தெற்கேயுள்ளது என வான்மீக முனிவர் குறித்துள்ளார். மகாபாரதத்தில் பாண்டியர் தலைநகராக மணலூர் குறிக்கப்பெற்றது. பாரத காலத்திற் பாண்டியர் கடற்றுறையூராகிய கபாடபுரத்தின் பாதுகாப்பின்மையைக் கூர்ந்துணர்ந்து மணலூர் என்னும் மற்றொரு பேரூரினைத் தலைநகராக அமைத்துக் கொண்டனர் எனத் தெரிகிறது. கபாடபுரமும். குமரியாறும் கடல்கோளால் அழிந்துபடுவதன் முன் வாழ்ந்தவர் தொல்காப்பியர் என்பது தொன்றுதொட்டு வழங்கும் வரலாறாதலால். அவ்வாசிரியர் பாரத காலத்துக்கு முற்பட்ட காலத்தவர் என்பது நன்கு தெளியப்படும். பாரத காலம் கி.மு. 1500 ஆண்டுகளுக்கு முன் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு. எனவே. பாரத காலத்திற்கு முன் வாழ்ந்த தொல்காப்பியர் கி.மு. 1500 ஆண்டுக்குப் பிற்பட்டிருத்தல் இயலாது என்பது நன்கு துணியப்படும்.

கடைச்சங்கத்தின் இறுதிக்காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கம் என்பது ஆராய்ச்சியாளர் துணிபாகும்.[8]



இறையனார் களவியலுக்கு நக்கீரனார் கூறிய உரை வழிவழியாகப் பாடஞ் சொல்லப்பெற்று வந்து இப்பொழுதுள்ள வடிவில் எழுதப்பெற்ற காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டென்பர் ஆராய்ச்சியாளர். இறைக்கு 1200 ஆண்டுகட்கு முற்பட்ட அந்நூலிற் கண்ட முச்சங்க வரலாற்றின்படி நோக்குங்கால் இடைச்சங்கம் கி. மு. 5000 ஆண்டுகட்கு முன் தொடங்கப் பெற்றதெனக் கொள்ள வேண்டியுளது. அங்ஙனம் கொள்ளுமிடத்து. தலைச்சங்கத்திறுதியிலும் இடைச்சங்கத் தொடக்கத்திலும் வாழ்ந்தவராகிய தொல்காப்பியர் காலத்தின் மேலெல்லை கி.மு. 5000 எனக் கொள்ளவேண்டிவரும். இக்காலவெல்லை ஆராய்ச்சியாளர் சிலர்க்கு வியப்பாகத் தோன்றக்கூடும். இடைச் சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் இலக்கண நூலாக விளங்கியது தொல்காப்பியம் என்னும் உண்மை மேற்காட்டிய சான்றுகளால் நன்கு வலியுறுத்தப் பெற்றமையின். ஆசிரியர் தொல்காப்பியர் வாழ்ந்த காலம் கி. மு. நான்காம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தொன்மையுடையதென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

தமிழிலக்கிய வரலாற்றில் நெடுங்காலமாக வழங்கி வரும் இம்முடிவுக்கு மாறாகத் தொல்காப்பியர் கடைச்சங்க காலத்திற்குப்பின் கி. பி. 4 அல்லது 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் தாம் எழுதிய 'தமிழ்ச் சுடர்மணிகள்' என்னும் நூலிற் பல்வேறு காரணங்களைக் காட்டி முடிவுகட்டியுள்ளார்கள். பிள்ளையவர்கள் தமது கொள்கையினை நிறுவுவதற்குக் காட்டியவை யாவும் ஏற்புடைய காரணங்கள் அல்ல என்பது. அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாகிய 'தமிழிலக்கிய வரலாறு-தொல்காப்பியம்' என்ற நூலில் தொல்காப்பியனார் காலம் என்ற தலைப்பில் விரிவாக ஆராய்ந்து விளக்கப்பெற்றுளது.

1. தமிழரது பழைய வரலாற்றினைப்பற்றி இறையனார் களவியலுரையிற் கூறப்பெற்ற இம்முடிபுகள் வரலாற்று நூலாசிரியர் ஆராய்ந்து கண்ட சரித்திர முடிபுகளோடு ஒத்திருக்கின்றன வாகலின் இவை வெறுங்கதைகள் அல்ல என்பதனை அருள்மிகு விபுலானந்த அடிகளார் அவர்கள் உலக புராணம் என்னும் கட்டுரையில் தெளிவாக விளக்கியுள்ளார்கள். (செந்தமிழ். தொ.39.பக்.19-32)
2. சதாசிவ பண்டாரத்தார். தமிழிலக்கிய வரலாறு இருண்டகாலம். ப.3
3. தொல்.செய்.102
4. தொல்.அகத்.44
5. தொல்.கற்பு.20
6. தமிழ்ச் சுடர் மணிகள். பக்.27-32
7. சிலப்பதிகாரம். காடுகாண் காதை
8. சதாசிவ பண்டாரத்தார். தமிழிலக்கிய வரலாறு - இருண்டகாலம். பக்.2-4

- இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டு மலர். 1968 - சென்னை

கயவெள் ளருவி சூழிய உயர்வரை

- அகநானூறு : 38

CICTArchives

# திராவிட மொழிகள் அனைத்திலும் உயர்தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ்...

தமிழ் - திராவிட மொழிகளுள் முதன்முதலில் திருந்திய நிலைபெற்ற மொழி இதுவே. ஐயத்திற்கு இடமில்லா. மிகப்பழைய சொல்லுருவங்களில் சிறந்த சொல்லுருவங்களையும் மிகப் பலவாய சொல்லுருவங்களையும் பெற்றுள்ள வளர்ந்த மொழியும் இதுவே. (ப.11)

திராவிட மொழிகள் அனைத்தினும் உயர்தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ் தன்னிடையே இடம் பெற்றிருக்கும் சமஸ்கிருதச் சொற்களை அறவே ஒழித்துவிட்டு உயிர் வாழ்வதோடு அவற்றின் துணையை ஒரு சிறிதும் வேண்டாமல் வளம் பெற்று வளர்வதும் இயலும். (ப.59)

'ஆங்கிலம் - இலத்தீனுக்குக் கடன்பட்டிருப்பதைப் போலவே, தமிழும் சமஸ்கிருதத்திற்குக் கடன் பட்டிருப்பதாகக் கருதுவது அறவே பொருந்தாது. தமிழ் தான் ஏற்றிருக்கும் சமஸ்கிருதச் சொற்களில் பெரும்பகுதியை, ஏன் அவை அனைத்தையுமே அறவே கைவிட்டு - அவ்வாறே கைவிடுவது ஒன்றினாலேயே, முன்னைய நிலையினும் சிறந்த, உயர்தனிச் செம்மொழியாம் பெருநிலையைப் பெற்றுவிடும். (ப.61)

*திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், 2004*



டாக்டர் கால்டுவெல்

# குட்டுவன் கோதை வெள்ளிக்காசு

இரா. கிருஷ்ணமூர்த்தி
தமிழ்நாடு நாணயவியல்
ஆய்வுக் கழகத் தலைவர்



கரூரில் மன்னன் மாக்கோதை வெளியிட்ட பல வெள்ளிக் காசுகள் ஏற்கெனவே கிடைத்துள்ளன. இக்காசுகளில் முன்பக்கம் மன்னனின் தலையும், தலையின் மேல் மாக்கோதை என்ற சொற்றொடரும் பொறிக்கப் பட்டிருக்கும். இந்தச் சொற்றொடர் தமிழ் பிராமி எழுத்தில் உள்ளது. அதே போன்று வடிவுடைய ஒரு வெள்ளிக்காசு அண்மையில் கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகில் ஒரு கிராமத்தில் கிடைத்திருக்கிறது. இக்காசு கரூர் வணிகர் எம். பாலுசாமியிடம் உள்ளது. இக்காசின் எடை 2.300 கிராம். குறுக்களவு 1.9 செ.மீ. இக்காசு சங்ககாலச் சேர மன்னன் குட்டுவன் கோதையால் வெளியிடப்பட்டது. இதன் எழுத்து தமிழ் பிராமி எழுத்து முறையில் உள்ளது. சொற்றொடர் இடமிருந்து தொடங்குகிறது.

குட்டுவன் கோதை வெளியிட்டுள்ள இந்தக் காசு, அக்காலத்தில் தமிழகத்தில் பெருமளவில் புழக்கத்திலிருந்த ரோமன் வெள்ளி நாணயங்கள் போல் உள்ளது. இக்காசின் காலம் கி.பி. முதல் நூற்றாண்டு.

சங்ககாலச் சேரமன்னர் காசுகள் கரூரிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் கிடைப்பதால் சங்ககாலச் சேரமன்னர்கள் கரூரைத்தான் தலைநகராகக்கொண்டு மேற்குக்கரைச் சேரநாட்டையும் ஆண்டனர் என்று கருத இடமுண்டு.

CICTArchives

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் சென்னை




தொடக்க விழா

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தொடக்க விழா மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் 2007 ஆகஸ்டு 18 அன்று சென்னைக் கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. மாண்புமிகு மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு அர்ஜுன்சிங் விழாவில் கலந்து கொண்டு நிறுவனத்தைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் ஆற்றிய தலைமையுரையிலிருந்து...

'தமிழ் உயர்தனிச் செம்மொழி' என்று முன்மொழிந்த முதல் தமிழறிஞர் பரிதிமாற கலைஞரின் நினைவு அஞ்சல்தலை நேற்றுத்தான் (17.8.2007) சென்னையில் வெளியிடப்பட்டது. இன்று இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க விழாவை நாம் கொண்டாடுகிறோம். இந்திய அரசால் செம்மொழி என அறிவிக்கப்பட்ட முதல் மொழி தமிழ். தமிழர்களின் ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட கனவை நனவாக்கிய இந்தியத் தலைமை அமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங், திருமதி சோனியா காந்தி, திரு அர்ஜுன் சிங் ஆகியோருக்கு உலகெங்குமுள்ள தமிழர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மைசூரில் செம்மொழித் தமிழ் உயராய்வு மையத்தை உருவாக்க உதவியமைக்காக இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர் பேராசிரியர் உதய நாராயண சிங், செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி ஆகியோருக்கு முதலமைச்சர் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்.

மாண்புமிகு மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு அர்ஜுன்சிங் ஆற்றிய சிறப்புரையிலிருந்து...

முதலமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்கத் **தொல்காப்பியர் தேசிய விருது ஒன்று, குறள்பீடம் பன்னாட்டு விருது இரண்டு** ஆக மூன்று விருதுகள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து லட்சம் ரூபாயும், ஐந்து இளம் அறிஞர்கள் விருது ஒவ்வொன்றுக்கும் ஒரு லட்சம் ரூபாயும் ஊக்கத் தொகையாக அளிக்கப்படும் என்று உறுதியளிக்கிறேன். இன்றைய நமது தத்துவ, இலக்கிய, ஆன்மிகப் பாரம்பரியம் என்பது சமஸ்கிருதம், தமிழ் ஆகிய இரண்டு தொன்மொழிகளாகிய இரு பேராறுகளின் சங்கமத்தால் விளைந்தது. கடந்த இரு நூற்றாண்டுகளில் மேலை,கீழை நாடுகளைச் சார்ந்த வரலாற்றாசிரியர்கள், தொல்லியலார், கல்வெட்டறிஞர்கள், மொழியியலார் ஆகியோர் காட்டிய ஆர்வத்தினால் சமஸ்கிருதம் விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது. இந்தியப் பண்பாட்டு ஒருமையை உருவாக்குவதில் சமபங்கு அளிப்பதாகவும், இருபதுக்கும் மேற்பட்ட திராவிட மொழிகளுக்குத் தாயாகவும் விளங்கும் தமிழும் சமஸ்கிருதம் போலவே கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

தமிழக அரசின் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், பேராசிரியர் வா.செ. குழந்தைசாமி, பேராசிரியர் வ.அய். சுப்பிரமணியம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

CICTArchives



# பயிலரங்குகள்

### செம்மொழித் தமிழ் ஆய்வுகள்

**2007 மார்ச்சு 11 முதல் ஏப்ரல் 10 வரை**

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**முனைவர் கா. கோ. வேங்கடராமன்**
**முனைவர் அன்னி தாமசு**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து செம்மொழித் தமிழாய்வுப் பயிலரங்கை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடத்தின.

11.3.2007 அன்று நடைபெற்ற தொடக்க விழாவில், தமிழ் மொழி மேம்பாட்டு வாரியத் தலைவர் பேராசிரியர் வா. செ. குழந்தைசாமி தலைமை உரையாற்றினார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் (பொ.) முனைவர் ம. இராசேந்திரன், அரசு செயலாளர் திரு து. இராசேந்திரன், இ.ஆ.ப. ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர். செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி பயிலரங்கின் நோக்கங்களை எடுத்துரைத்தார்.

ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வுகள் மேற்கொண்டிருக்கும் 105 ஆய்வாளர்கள் இப் பயிலரங்கில் பங்கேற்றனர். பங்கேற்றோர் அனைவருக்கும் சங்க இலக்கியம் முழுவதும் (13 தொகுதிகள்) வழங்கப்பெற்றது. தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர்களாகிய முனைவர் ஔவை நடராசன், முனைவர் சிலம்பொலி செல்லப்பன் மற்றும் தமிழகத்தின் தலைசிறந்த 50 பேராசிரியர்கள் ஆய்வாளர்களுக்குப் பயிற்சியளித்தனர்.

10.4.2007 அன்று நடைபெற்ற நிறைவு விழாவிற்குத் தமிழ் வளர்ச்சித் துறைச் செயலாளர் தலைமைவகித்தார். தமிழக அரசின் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் நிறைவுப் பேருரை நிகழ்த்தியதுடன் பங்கேற்றவர்களுக்குப் பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் (பொ.) முனைவர் ம. இராசேந்திரன், செம்மொழித் தமிழ்



செம்மொழித் தமிழ் ஆய்வுகள்

CICTArchives

உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர்.

செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் கா.கோ. வேங்கடராமன் நன்றிநவிலப் பயிலரங்கம் இனிதே நிறைவுற்றது.

## தொல்காப்பியப் பயிற்சி

**2007 சூலை 2 முதல் 16 வரை**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**

**முனைவர் இரெ. குமரன்**

**முனைவர் சா. கிருட்டினமூர்த்தி**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையமும் தமிழ்ப் பல்கலைக்கழகமும் இணைந்து ஏற்பாடுசெய்த தொல்காப்பியப் பயிலரங்கம் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இப்பயிலரங்கில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொண்டுள்ள 105 ஆய்வாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர். பயிலரங்கில் பங்குகொண்ட அனைவருக்கும் தொல்காப்பியம் (மூன்று தொகுதிகள்) வழங்கப்பட்டது.

2.7.2007 அன்று முற்பகல் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சி. சுப்பிரமணியன் தலைமையில் தொடக்க விழா நடைபெற்றது. துணைவேந்தர் தமது தலைமையுரையில் தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வாளர்களுக்குத் தொல்காப்பியத்தில் சிறப்புப் பயிற்சி அளிக்க நிதி உதவி வழங்கிய செம்மொழித் தமிழ் உயராய்வு மையத்திற்கு நன்றி தெரிவித்துக்கொண்டார். தமிழ்மொழி மேம்பாட்டு வாரியத் தலைவர் தமது தொடக்கவுரையில் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் இதுபோன்ற பயிலரங்கை மேலும் பல பல்கலைக்கழகங்களிலும் நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இப்பயிலரங்கில் 30 இலக்கண அறிஞர்கள் ஆய்வுரை வழங்கியதோடு பயிற்சியும் அளித்தனர். அறிஞர்கள் ஒவ்வோர் அமர்வின் இறுதியிலும் ஆய்வாளர்களோடு கலந்துரையாடி அவர்தம் ஐயங்களை நீக்கித் தெளிவுபடுத்தினர்.

16.7.2007 அன்று பிற்பகல் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் நடைபெற்ற நிறைவு விழாவில் கலந்துகொண்ட பேராசிரியர் ச. அகத்தியலிங்கம், தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் ஒளவை நடராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஆய்வாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கிப் பயிலரங்க நிறைவு உரையாற்றிய செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி செந்தமிழ்க் கருவூலமாகிய தொல்காப்பியம் தமிழர்களுக்குக் கிடைத்த அரிய புதையலாகும் என்று குறிப்பிட்டார்.

செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் இரெ. குமரனின் நன்றியுரையுடன் பயிலரங்கம் இனிதே நிறைவுற்றது.



தொல்காப்பியப் பயிற்சி



தொல்காப்பியப் பயிற்சி

# பயிலரங்குகள்

## தமிழிசையில் பழந்தமிழ்ப் பாக்கள்

**2007 ஆகஸ்டு 8 முதல் 10 வரை**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்**
**முனைவர் இ. அங்கயற்கண்ணி**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையமும் தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையும் இணைந்து இசை ஆசிரியர்களுக்கான பயிலரங்கை நடத்தின.

8.8.2007 அன்று நடைபெற்ற பயிலரங்கத் தொடக்க விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சி. சுப்பிரமணியன் தலைமையேற்றுப் பழந்தமிழ்ப் பாக்களின் இசைக் குறுந்தகடுகளை வெளியிட்டு உரையாற்றினார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் மு.பி. பாலசுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் க. பாஸ்கரன் வாழ்த்துரை வழங்கினார். இப்பயிலரங்கில் தமிழ்நாடு, புதுச்சேரி மாநிலங்களைச் சார்ந்த 38 இசையாசிரியர்கள் பங்குபெற்றனர். ஆறு இசை வல்லுநர்கள் தமிழிசை மரபு குறித்து ஆய்வுரை வழங்கியதுடன் பழந்தமிழ்ப் பாக்களைத் தமிழிசையில் பாடுவதற்குப் பயிற்சியும் அளித்தனர்.

10.8.2007 அன்று பிற்பகல் நிறைவு விழா நடைபெற்றது. தமிழ்ப் பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் முனைவர் இ. அங்கயற்கண்ணி வரவேற்புரை நிகழ்த்தினார். முனைவர் க. பாஸ்கரன் தலைமை வகித்தார். தமிழ்மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் சிறப்புரையாற்றினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் அரிமளம் சு. பத்மநாபன் நன்றி உரையுடன் பயிலரங்கம் இனிதே நிறைவுற்றது.



செம்மொழித் தமிழ் ஓவியம் – சிற்பம்

## செம்மொழித் தமிழ் ஓவியம் – சிற்பம்

**2007 ஆகஸ்டு 20 முதல் செப்டம்பர் 19 வரை**

**அரசு கவின்கலைக் கல்லூரி, சென்னை**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**முனைவர் இரெ. குமரன், முனைவர் கு. பகவதி, திருமதி இராதா**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை அரசு கவின் கலைக்கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து செம்மொழித் தமிழ் ஓவியம் மற்றும் சிற்பப் பயிலரங்கைச் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் நடத்தியது.

சென்னை அரசு கவின்கலைக் கல்லூரியில் முப்பது நாட்கள் நடைபெற்ற இப்பயிலரங்கில் சென்னை அரசு கவின்கலைக் கல்லூரியிலிருந்து 40 மாணவர்கள், மாமல்லபுரம், சிற்பம் மற்றும் கட்டடக் கலைக் கல்லூரியிலிருந்து 20 மாணவர்கள், புதுச்சேரி பாரதியார் பல்கலைக்கூடத்திலிருந்து 20 மாணவர்கள், கும்பகோணம் ஓவியக் கல்லூரியிலிருந்து 20 மாணவர்கள் ஆக 100 மாணவர்கள் சங்க இலக்கியக் காட்சிகளை ஓவியமாகவும் சிற்பமாகவும் வடிக்கும் பயிற்சியில் பங்கேற்றுப் பயன்பெற்றனர். நூறு மாணவர்களுக்கும் சங்க இலக்கியத் தொகுதி முழுவதையும் (என்சிபிஎச் வெளியீடு) செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் வழங்கியது.

20.08.2007 அன்று பிற்பகல் 3.00 மணிக்குத் தமிழ்மொழி மேம்பாட்டு வாரியத் தலைவர் பேராசிரியர் வா. செ. குழந்தைசாமி தலைமையில் நடைபெற்ற தொடக்க விழாவில், செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் (பொ.) முனைவர் ம. இராசேந்திரன், தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறைச் செயலாளர் து. இராசேந்திரன் இ.ஆ.ப., ஆகியோர் உரையாற்றினர். சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்ட எழுத்தாளர் த. ஜெயகாந்தன் சிறப்புரையாற்றினார். கவின் கலைக்கல்லூரி முதல்வர் திரு சந்திரசேகரன் நன்றிகூறினார்.

முப்பது நாட்களும் காலை நேர வகுப்புக்களில் சங்க இலக்கியக் கருத்துக்களை, காட்சிகளை அறிஞர்கள் விளக்கியுரைக்க, மாலை நேரங்களில் மாணவர்கள் அவற்றை ஓவியங்களாகத் தீட்டினர்; சிற்பங்கள், ஓவியங்கள் வடிப்பதற்குக் கவின்கலை வல்லுநர்கள் துணைபுரிந்தனர்.

CICTArchives

சங்க இலக்கியக் காட்சிகளை ஓவியமாகவும் சிற்பமாகவும் வடிப்பதற்கு வேண்டிய மூலப் பொருட்கள் அண்டை மாநிலங்களிலிருந்தும் வரவழைக்கப்பட்டன. ஓவியம் வரைவதற்குப் பண்டைத் தமிழர் பயன்படுத்திய (மண், இலை, சுண்ணாம்பு..... இன்னபிற) இயற்கை வண்ணங்களையே பயிலரங்க மாணவர்களும் பயன்படுத்தினர். ஆளுக்கு ஆறு கதை ஓவியங்கள் என நூறு மாணவர்களும் அறுநூறு கதை ஓவியங்களை உருவாக்கினர். அவற்றுள் சிறந்த இருநூறு கதை ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

18.9.2007 அன்று பிற்பகல் 4.00 மணிக்குச் சென்னை அரசு கவின்கலைக் கல்லூரி முதல்வர் திரு சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற நிறைவு விழாவில் செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி பயிலரங்கச் சிறப்புரை நிகழ்த்தினார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் (பொ.) முனைவர் ம. இராசேந்திரன் வாழ்த்துரைவழங்கினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி கண்காட்சியைத் திறந்துவைத்ததோடு மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கிப் பயிலரங்க நிறைவுப் பேருரையும் நிகழ்த்தினார்.

செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் இரெ. குமரன் நன்றிநவிலப் பயிலரங்கம் இனிதே நிறைவுற்றது.

## தமிழ் வழக்காறுகள் - ஆய்வுத் திட்டம்

**2007 செப்டம்பர் 1 முதல் 9 வரை**

**பாரதியார் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்**

**ஒருங்கிணைப்பாளர் : முனைவர் ச. மனோகரன்**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையம், கோவை பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறையுடன் இணைந்து தமிழ் வழக்காறுகள் ஆய்வுத் திட்டப் பயிலரங்கு ஒன்றை நடத்தியது.

தமிழ் வழக்காறுகள் ஆய்வுத் திட்டத்தில் பணியாற்றுவதற்கு முதுநிலை (5), இளநிலை (22), வல்லுநர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக இப்பயிலரங்கு நடத்தப்பெற்றது. 134 மாணவர்கள் பயிலரங்கிற்கு அழைக்கப்பட்டனர்.

இப்பயிலரங்கு 1.9.07 முதல் 3.9.07 வரை முதுநிலை வல்லுநர்களுக்கென நடைபெற்றது. இதில் 17 மாணவர்கள் பங்குபெற்றனர்.

இளநிலை வல்லுநர் பயிற்சிக்கு 117 மாணவர்கள் அழைக்கப்பட்டனர். மாணவர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு முதல் குழுவுக்கு 4.9.07 முதல் 6.9.07 வரை பயிற்சியளிக்கப்பட்டது. இரண்டாவது குழுவுக்கு 7.9.07 முதல் 9.7.07 வரை பயிற்சியளிக்கப்பட்டது.

பயிற்சிக்குப் பின்னர் வல்லுநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பணியமர்த்தக் குழுவில் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனப் பேராசிரியர்கள் க. இராமசாமி, பொன். சுப்பையா, எல். இராமமூர்த்தி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

9.9.2007 அன்று நடைபெற்ற நிறைவு விழாவிற்குப் பாரதியார் பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் திருமாவளவன் தலைமைவகித்தார். எழுத்தாளர் திரு நாஞ்சில்நாடன் சிறப்புரையாற்றினார். பயிலரங்க நிறைவில் இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனப் பணியமர்த்தக் குழுவின் பரிந்துரைகளுக்கு இணங்க முதுநிலை இளநிலை வல்லுநர்கள் பணி ஆணை பெற்றனர்.

## படைப்பிலக்கிய எழுத்தாளர்களுக்கான சங்க இலக்கியப் பயிற்சி

**2007 செப்டம்பர் 29 முதல் அக்டோபர் 8 வரை**

**நாகமலைப் புதுக்கோட்டை, மதுரை**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**

**முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்,**

**ச. தமிழ்ச்செல்வன்**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையமும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க மாநில மையமும் இணைந்து நடத்திய சங்க இலக்கியப் பயிலரங்கம் நாகமலைப் புதுக்கோட்டையை அடுத்துள்ள பில்லர் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

பயிலரங்கின் தொடக்க விழா 29.9.2007 அன்று நாவலாசிரியர் அருணன் தலைமையில் நடைபெற்றது. ச.தமிழ்ச்செல்வன் வரவேற்புரையாற்றினார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் மு. பி. பாலசுப்பிரமணியன் நோக்கவுரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர் கவிஞர் நன்மாறன், கவிஞர் தேவேந்திரபூபதி ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர்.

இப் பயிலரங்கில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சார்ந்த 100 படைப்பாளர்கள் பங்கேற்றனர். பங்கேற்ற அனைவருக்கும் சங்க இலக்கியம் முழுவதும் (13 தொகுதிகள்) வழங்கப்பட்டது. பயிலரங்க அமர்வுகளைத் தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர்களாகிய கவிக்கோ அப்துல் ரகுமான், கவிஞர் ஈரோடு தமிழன்பன், முனைவர் மா. நன்னன், பேராசிரியர் சாலமன் பாப்பையா மற்றும் முன்னணிப் படைப்பாளர்கள் தொடங்கிவைத்துச் சங்க இலக்கிய ஆய்வுரை நிகழ்த்தினர்.

# பயிலரங்குகள்

பயிலரங்க அமர்வுகளில் சமூகவியல், இசையியல், மொழியியல், வாழ்வியல் மற்றும் சங்க இலக்கியத் திணை, துறை அமைப்புக்கள் முதலான தலைப்புக்களில் பலதுறை அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். ஒவ்வோர் அமர்வுக்குப் பின்னும் கலந்துரையாடல் நிகழ்வும் நடைபெற்றது.



படைப்பிலக்கிய எழுத்தாளர்களுக்கான சங்க இலக்கியப் பயிற்சி



படைப்பிலக்கிய எழுத்தாளர்களுக்கான சங்க இலக்கியப் பயிற்சி

8.10.2007 அன்று நடைபெற்ற நிறைவு விழாவிற்கு இந்திய மொழிகளின் நடுவண் நிறுவன இயக்குநர் பேராசிரியர் உதயநாராயண சிங் தலைமைவகித்தார். "செம்மலர்" ஆசிரியர் எஸ். ஏ. பெருமாள், எழுத்தாளர் மேலாண்மை பொன்னுசாமி ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர். செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி நிறைவுப் பேருரையாற்றினார்.

செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் அரிமளம் சு. பத்மநாபன் நன்றியுரையுடன் பயிலரங்கு இனிதே நிறைவுற்றது.

## திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்குச் செம்மொழித் தமிழ் இலக்கியப் பயிற்சி

**2007 நவம்பர் 20 முதல் திசம்பர் 17 வரை**

**டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படக் கல்லூரி, சென்னை**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**

**முனைவர் அரிமளம் சு. பத்மநாபன், திரு சீனிவாசன், முனைவர் சுப்பையா பிள்ளை**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையம், திரைப்படக் கல்லூரி மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்குச் சங்க இலக்கியப் பயிலரங்கம் ஒன்றைத் திரைப்படக் கல்லூரியில் நடத்தியது.

28 நாட்கள் நடைபெற்ற இப்பயிலரங்கின் தொடக்க விழா 20.11.2007 அன்று காலை நடைபெற்றது. பயிலரங்கைத் திரைப்பட இயக்குநர் திரு சுப. முத்துராமன் தொடங்கிவைத்தார். பேராசிரியர் பொற்கோ சிறப்புரையாற்றினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி திட்ட அறிமுகவுரையாற்றினார். தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறைச் செயலர் திரு ஜி. சந்தானம் இ.ஆ.ப. தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு ஏ.சி.மோகன்தாஸ் இ.ஆ.ப., உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் (பொ.) முனைவர் ம. இராசேந்திரன், திரைப்படக் கல்லூரி முதல்வர் திரு என். இரமேஷ் ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர்.

இப்பயிலரங்கில் 100 மாணவர்கள் பங்கு பெற்றனர். பங்கேற்றோர் அனைவருக்கும் சங்க இலக்கியம் (13 தொகுதிகள்) முழுவதும் வழங்கப்பட்டது. ஊடகத்துறை வல்லுநர்கள், தமிழறிஞர்கள், கவிஞர்கள் எனப் பல்துறை சார்ந்த 22 அறிஞர்கள் மாணவர்களுக்குச் சங்க இலக்கியக் காட்சிகளைப் படமாக்கப் பயிற்சியளித்தனர். மாணவர்களை 18 குழுக்களாகப் பிரித்து ஒரு குழுவுக்கு




திரைப்படக் கல்லூரி மாணவர்களுக்குச் செம்மொழித் தமிழ் இலக்கியப் பயிற்சி

CICTArchives

ஓர் இலக்கியமெனப் பகிர்ந்தளித்துச் சங்க இலக்கியக் காட்சிகள் படமாக்கப்பட்டன. ஒரு குறும்படம் 10 மணித்துளிகள் ஓடக்கூடிய அளவில் 18 குறும் படங்களை மாணவர்கள் உருவாக்கினர்.

17.12.2007 அன்று நடைபெற்ற நிறைவு விழாவிற்குத் தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் தலைமைவகித்தார். திரைப்பட நடிகர் திரு சிவகுமார் மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவுப் பேருரைநிகழ்த்தினார். முனைவர் ம. இராசேந்திரன் வாழ்த்துரைவழங்கினார்.

செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் அரிமளம் சு. பத்மநாபன் நன்றிகூறினார்.

### தமிழ் வழக்காறுகள் ஆய்வுத் திட்டம்

**2007 நவம்பர் 26 முதல் 30 வரை**

**இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்**

**ஒருங்கிணைப்பாளர்: முனைவர் ச. மனோகரன்**

தமிழ் வழக்காறுகள் ஆய்வுத் திட்டத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட முதுநிலை இளநிலை ஆய்வாளர்களுக்காகச் செம்மொழித் தமிழ் உயராய்வு மையத்தில் பயிலரங்கு நடத்தப்பெற்றது.

26.11.2007 அன்று நடைபெற்ற தொடக்க விழாவிற்குப் பேராசிரியர் ப. மருதநாயகம் தலைமைவகித்தார். செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி அறிமுகவுரையாற்றினார். பேராசிரியர் இரா. கோதண்டராமன், பேராசிரியர் வ. ஞானசுந்தரம், பேராசிரியர் கு. சிவமணி ஆகியோர் திட்டச் செயல்முறை விளக்கவுரையாற்றினர்.

சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்ட பேராசிரியர் கோ. சீனிவாச வர்மா, பேராசிரியர் ஆர். பெரியாழ்வார், முனைவர் கா. கோ. வேங்கடராமன், பேராசிரியர் சாம் மோகன்லால் ஆகியோர் கள ஆய்வுப் பணியில் மேற்கொள்ள வேண்டிய நெறிமுறைகள் குறித்து உரையாற்றினர்.

அறிஞர்கள் - ஆய்வாளர்கள் கலந்துரையாடல் நடைபெற்றது. செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் ச. மனோகரன் நன்றிநவின்றார்.

### பழந்தமிழ் இலக்கியமும் நாட்டுப்புற மரபுத் தொடர்ச்சியும்

**2007 திசம்பர் 5 முதல் 19 வரை**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**

**முனைவர் மு. இராமகிருஷ்ணன்**

**பேராசிரியர் ஆறு. இராமநாதன்**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையம், தமிழ்ப் பல்கலைக்கழக நாட்டுப்புறவியல் துறையுடன் இணைந்து தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பயிலரங்கம் ஒன்றை நடத்தியது.

5.12.2007 அன்று நடைபெற்ற தொடக்க விழாவிற்குத் தமிழ்மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் கவிக்கோ அப்துல் ரகுமான் தலைமைவகித்தார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சி. சுப்பிரமணியன் தொடக்கவுரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய முதுநிலை ஆய்வறிஞர் பேராசிரியர் பா. ரா. சுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் ஆறு. அழகப்பன், தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு க. பாஸ்கரன் ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர்.

15 நாட்கள் நடைபெற்ற இப்பயிலரங்கில் 125 மாணவர்கள் பங்கேற்றனர். பங்கேற்றோர் அனைவருக்கும் சங்க இலக்கியம் முழுவதும் (13 தொகுதிகள்) வழங்கப் பட்டது. கலை இலக்கியத்துறை சார்ந்த 20 அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர். மாணவர்களுக்கு நாட்டுப்புறக் கலைகளில் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

19.12.2007 அன்று பயிலரங்க நிறைவு விழா நடைபெற்றது. தமிழ்மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் மு. பி. பாலசுப்பிரமணியன் தலைமையுரையாற்றினார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சி. சுப்பிரமணியன் வாழ்த்துரை வழங்கினார். முனைவர் ஆ. சிவசுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய இணை ஆய்வறிஞர் முனைவர் மு.இராமகிருஷ்ணன் நன்றிகூறினார்.

### திணைக் கோட்பாடு

**2008 சனவரி 2 முதல் 11 வரை**

**ச.கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர் (நாமக்கல்)**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**

**முனைவர் கா. கோ. வேங்கடராமன்**

**பேராசிரியர் ந. சி. சந்திரசேகரன்**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் திணைக் கோட்பாடுபற்றிய பயிலரங்கு ஒன்றினைச் சங்கர கந்தசாமிக் கண்டர் கல்லூரியுடன் இணைந்து நடத்தியது.

2.1.2008 அன்று நடைபெற்ற தொடக்க விழாவிற்குக் கந்தசாமிக் கண்டர் அறநிலையத் தலைவர் மருத்துவர் இர. சோமசுந்தரம் தலைமைவகித்தார். பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் மு. தங்கராசு சிறப்புரையாற்றினார். தமிழ்மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் மு. பி. பாலசுப்பிரமணியன் பயிலரங்கைத் தொடங்கிவைத்து உரையாற்றினார். கல்லூரி முதல்வர் பேராசிரியர் ந. சி. சந்திரசேகரன்

CICTArchives

# பயிலரங்குகள்

வாழ்த்துரைவழங்கினார். பேராசிரியர் பெ. தண்டபாணி நன்றிகூறினார்.

10 நாட்கள் நடைபெற்ற இப்பயிலரங்கில் பெரியார் பல்கலைக்கழகம், கோவை பாரதியார் பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் ஆய்வு மேற்கொண்டுள்ள 68 ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள் பங்கேற்றனர். கந்தசாமிக் கண்டர் கல்லூரித் தமிழ் முதுகலை மாணவர்கள் பார்வையாளராகக் கலந்துகொண்டனர்.

பழந்தமிழரின் திணைக்கோட்பாடு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கிய உள்ளடக்கத் திறனாய்வாகத் தோன்றி வளர்ந்துள்ளமையை இளம் ஆய்வாளர்களுக்குச் சுட்டிக்காட்டி, அவர்களை அக்கோட்பாடு பற்றி நுட்பமாக ஆய்வு செய்யத் தூண்டும் நோக்கில் இப்பயிலரங்கம் நடத்தப்பட்டது. பலவேறு தலைப்புக்களில் திணைக் கோட்பாடு பற்றி 27 அறிஞர்கள் ஆய்வுரைநிகழ்த்தினர்.

11.1.2008 வெள்ளிக்கிழமை பிற்பகல் கந்தசாமிக் கண்டர் அறநிலையத் தலைவர் மருத்துவர் இர.சோமசுந்தரம் முன்னிலையில் நிறைவு விழா நடைபெற்றது. விழாவிற்குத் தலைமைதாங்கிய செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி செம்மொழித் தமிழ் குறித்தும், மையத்தின் திட்டங்கள், செயற்பாடுகள், வேலைவாய்ப்பு ஆகியவைபற்றியும் எடுத்துரைத்தார்.



திணைக் கோட்பாடு

தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் பழந்தமிழின் வளம்குறித்தும், வருங்காலத்தில் பழந்தமிழுக்கு ஆற்றவேண்டிய பணிகள் குறித்தும் சிறப்புரையாற்றினார்.

செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் கா. கோ. வேங்கடராமன் நன்றிநவிலப் பயிலரங்கம் இனிதே நிறைவுற்றது.

### தொல்காப்பியம், சங்க இலக்கியம் – சிறப்புப் பார்வை

**2008 சனவரி 21 முதல் 30 வரை**

**என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**

**முனைவர் கா. உமாராஜ், முனைவர் பி. வேல்முருகன்**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையம், பொள்ளாச்சி நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரித் தமிழ்த் துறையுடன் இணைந்து ஆய்வாளர்களுக்கான பயிலரங்கை நடத்தியது.

21.1.2008 அன்று நடைபெற்ற தொடக்க விழாவிற்குக் கல்லூரிச் செயலர் திரு எஸ். கல்யாணசுந்தரம் தலைமைவகித்தார். செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க.இராமசாமி தொடக்கவுரையாற்றினார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் கவிக்கோ அப்துல்ரகுமான் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் என். இராஜ்குமார், கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர். கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பி. வேல்முருகன் நன்றிகூறினார்.

10 நாட்கள் நடைபெற்ற இப்பயிலரங்கில் பல்வேறு கல்வி நிறுவனங்களைச் சார்ந்த 60 ஆய்வாளர்கள் பங்கேற்றனர். 28 தமிழறிஞர்கள் ஆய்வுரை வழங்கியதோடு பயிற்சியும் அளித்தனர். பங்குபெற்றோர் அனைவருக்கும் சங்க இலக்கியம் (13 தொகுதிகள்), தொல்காப்பியம் (பேராசிரியர் இலக்குவனாரின் ஆங்கில மொழிபெயர்ப்பு) ஆகிய நூல்கள் வழங்கப்பட்டன.

30.1.2008 அன்று பிற்பகல் பயிலரங்க நிறைவு விழா நடைபெற்றது. விழாவிற்குக் கல்லூரி முதல்வர் முனைவர் என். இராஜ்குமார் தலைமைவகித்தார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் நிறைவுப் பேருரைநிகழ்த்தினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் கா. உமாராஜ் நன்றிகூறினார்.

CICTArchives




தொல்காப்பியம், சங்க இலக்கியம் - சிறப்புப் பார்வை

## தொல்காப்பியம், சங்க இலக்கியம்

**2008 பிப்ரவரி 1 முதல் 28 வரை**

**ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**

**முனைவர் அன்னி தாமசு**

**பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியன்**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையமும் தமிழூர் உலகத் தமிழ்க் கல்வி இயக்கமும் இணைந்து ஆய்வு மாணாக்கியருக்கான பயிலரங்கைக் குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் நடத்தின.

1.2.2008 அன்று காலை நடைபெற்ற தொடக்க விழாவிற்குப் பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் தலைமைவகித்தார். ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி முதல்வர் பேராசிரியர் வே. சசிகலா வரவேற்புரை நிகழ்த்தினார். பேராசிரியர் க. ப. அறவாணன் தொடக்கவுரையாற்றினார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியன் நன்றிகூறினார்.

ஆய்வு மாணாக்கியருக்கான இப்பயிலரங்கில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட மாணாக்கியர் (122) பங்குபெற்றனர்.

ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, ஏ. பி. சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி - தூத்துக்குடி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, தூய சவேரியார் கல்லூரி - பாளையங்கோட்டை, சாரா தக்கர் கல்லூரி - பாளையங்கோட்டை, ம. தி. தா. இந்துக் கல்லூரி - திருநெல்வேலி, தெ. தி. இந்துக் கல்லூரி - நாகர்கோயில், தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர், திராவிடவியல் பல்கலைக்கழகம் - குப்பம், காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம் - புதுச்சேரி ஆகியவற்றிலிருந்து மாணக்கியர் தேர்வுசெய்யப்பெற்றனர்.

இப்பயிலரங்கில் 41 அறிஞர்கள் ஆய்வுரை வழங்கினர். ஒவ்வோர் அமர்வும் பயிலரங்க வல்லுநரின் உரைப்பொழிவு ஒன்றரை மணி நேரமாகவும் தொடரும் ஒருமணி நேரம் கலந்துரையாடலாகவும் அமைக்கப்பெற்றது.

பங்கேற்றோர் அனைவருக்கும் சங்க இலக்கியம் (ப.ஆ.: ச.வே.சுப்பிரமணியன்), தொல்காப்பியம் தெளிவுரை - கையடக்கப் பதிப்பு (ப.ஆ.: ச.வே.சுப்பிரமணியன்), பேராசிரியர் வா.செ.குழந்தைசாமியின் 'செம்மொழிகளின் வரிசையில் தமிழ், சங்க இலக்கியம் (13 தொகுதிகள்) ஆகிய நூல்கள் வழங்கப்பட்டன.

28.2.2008 அன்று பிற்பகல் நிறைவு விழா நடைபெற்றது. பேராசிரியர் வே. சசிகலா அனைவரையும் வரவேற்றார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி நிறைவுப் பேருரையாற்றினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் அன்னி தாமசு நன்றிகூறினார்.



தொல்காப்பியம் - சங்க இலக்கியம்

CICTArchives

# பயிலரங்குகள்



சங்க இலக்கிய யாப்பியல், கவிதையியல்

## சங்க இலக்கிய யாப்பியல், கவிதையியல்

**2008 பிப்ரவரி 18 முதல் மார்ச்சு 18 வரை**

**பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**முனைவர் கா. உமாராஜ்**
**பேராசிரியர் இராமர் இளங்கோ**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையமும் பாரதிதாசன் பல்கலைக்கழகப் பாரதிதாசன் ஆய்வு மையமும் இணைந்து சங்க இலக்கியப் பயிலரங்கை நடத்தின.

பயிலரங்கின் தொடக்க விழா 18.2.2008 அன்று காலை பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் பொன்னவைக்கோ தலைமையில் நடைபெற்றது. தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் கவிக்கோ அப்துல் ரகுமான் சிறப்புரையாற்றினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி வாழ்த்துரை வழங்கினார்.

30 நாட்கள் நடைபெற்ற இப்பயிலரங்கில பாரதிதாசன் பல்கலைக்கழக ஆளுகைக்குட்பட்ட கல்லூரிகளைச் சார்ந்த 125 ஆய்வாளர்கள் கலந்து கொண்டனர். இரண்டு வெளிநாட்டுத் தமிழறிஞர்கள் உட்பட 51 அறிஞர்கள் தொல்காப்பியம், சங்க இலக்கியம், மொழியியல், யாப்பியல், கவிதையியல், நாடகவியல் முதலிய இலக்கியத் திறனாய்வுத் தலைப்புகளில் ஆய்வுரைவழங்கினர். பேராசிரியர் வா. செ. குழந்தைசாமியின் 'செம்மொழிகளின் வரிசையில் தமிழ்', பேராசிரியர் இலக்குவனாரின் தொல்காப்பியம் (ஆங்கில மொழிபெயர்ப்பு) ஆகிய நூல்களைச் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் அனைத்து ஆய்வாளர்களுக்கும் வழங்கியது.

18.3.2008 அன்று நடைபெற்ற நிறைவு விழாவிற்குத் தவத்திரு பொன்னம்பல அடிகளார் தலைமையேற்று வாழ்த்துரைவழங்கினார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் ஔவை நடராசன் சிறப்புரையாற்றினார்.

செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் கா. உமாராஜ் நன்றிகூறினார்.

## தொல்காப்பியம்

**2008 மார்ச்சு 3 முதல் 12 வரை**

**சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**முனைவர் அன்னி தாமசு, பேராசிரியர் வீ. அரசு**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையுடன் இணைந்து தொல்காப்பியப் பயிலரங்கை நடத்தியது.

3.3.2008 அன்று நடைபெற்ற தொடக்க விழாவிற்குத் தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் மு. பி. பாலசுப்பிரமணியன் தலைமைவகித்து உரையாற்றினார். ஈழத்துத் தமிழறிஞர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தொடக்கவுரையாற்றினார். பேராசிரியர் வீ. அரசு வரவேற்புரைவழங்கினார்.

இப்பயிலரங்கில ஆசிரியர், எழுத்தாளர், இதழாளர், திரைப்படத் துறையினர், ஆய்வாளர் எனப் பலதுறை சார்ந்த ஐம்பதின்மர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

பங்கேற்பாளர்கள் பயன்பெறும் வகையில் பலதுறை சார்ந்த 24 அறிஞர்கள் ஆய்வுரைநிகழ்த்தினர். அறிஞர்கள் ஆற்றிய உரைகள், தொல்காப்பியத்தைப் பல நோக்கில் அறிமுகம் செய்வதாகவும் செவ்விலக்கியமான சங்க இலக்கியத்துடன் பொருத்திக் காட்டுவதாகவும் அமைந்திருந்தன. பங்கேற்றோர் அனைவருக்கும் தொல்காப்பியம் (கையடக்கப் பதிப்பு), தமிழ் இலக்கணப் பேரகராதி (17 தொகுதிகள்) ஆகியன வழங்கப்பெற்றன. 12.3.2008 அன்று பிற்பகல் நடைபெற்ற நிறைவு விழாவிற்குத் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமையேற்றுப் பங்கேற்றோர்க்குச் சான்றிதழ் வழங்கி உரையாற்றினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் அன்னி தாமசு நன்றிநவின்றார்.



தொல்காப்பியம்

## தொல்காப்பியம்

**2008 மார்ச்சு 31 முதல் ஏப்ரல் 9 வரை**

**சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**முனைவர் கா. கோ. வேங்கடராமன்**
**பேராசிரியர் ந. தெய்வசுந்தரம்**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறையுடன் இணைந்து இப்பயிலரங்கை நடத்தியது. தமிழ் மொழித் துறையில் 31.3.2008 அன்று தொடக்க விழா நடைபெற்றது. பேராசிரியர் ந. தெய்வசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினார். சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். இராமச்சந்திரன் பயிலரங்கைத் தொடங்கிவைத்தார். இப்பயிலரங்கில் முப்பது அறிஞர்கள் தொல்காப்பியத்தை நுணுகி நோக்கி ஆய்வுரைவழங்கினர். அறுபது ஆய்வாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## இளநிலை ஆய்வாளர்களுக்குப் பயிற்சி

**2007 திசம்பர் 6 முதல் 8 வரை**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

**ஒருங்கிணைப்பாளர்:**
**முனைவர் கா. கோ. வேங்கடராமன்**

செம்மொழித் தமிழ்த் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெறும் முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கான நெறிப்படுத்துகை மற்றும் மதிப்பீட்டுக் கூட்டம் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மூன்று நாட்கள் நடைபெற்றது.

பல்வேறு பல்கலைக்கழகங்களில் ஆய்வு செய்துவரும் 19 ஆய்வாளர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். வல்லுநர் குழு, இளநிலை ஆய்வாளர்களை மதிப்பிட்டு ஆற்றுப்படுத்தும் பணியை ஏற்றுச்செயல்பட்டது. வல்லுநர் குழுவில் ஏழு அறிஞர்கள் இடம்பெற்றிருந்தனர்.

6.12.2007இல் நடைபெற்ற முதற்கூட்டம் நேர்காணல் முறையில் அமைந்தது. இளநிலை ஆய்வாளர்கள் பத்தொன்பது பேரும் ஏழு வல்லுநர்கட்குப் பகிர்ந்தளிக்கப்பட்டனர். ஆய்வுத் தலைப்பு, அணுகுமுறை, தரவுப்பட்டியல், கள ஆய்வு எனப் பல்வேறு ஆய்வுத்தளங்களில் ஆய்வாளர்கள் தனித்தனியே விரிவான விளக்கம்தந்தனர். மேலும் ஆய்வுச் சிக்கல்கள் இனங்காணப்பட்டுத் தனித்தனி வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டன.

7.12.2007 அன்று நடைபெற்ற இரண்டாம் நாள் கூட்டம் பொதுக் கலந்தாய்வுக் கூட்டமாக அமைந்தது. வல்லுநர்கள் ஆய்வாளர்களுக்கு வழிகாட்டு நெறி முறைகளைவழங்கி ஊக்கப்படுத்தினர்.

8.12.2007 அன்று நடைபெற்ற நிறைவு நாள் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாகச் செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி, தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சி.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைவழங்கினர். மேலும் ஆய்வாளர்களோடு நேரடிக் கலந்துரையாடலும் நடைபெற்றது. ஆய்வாளர்களிடமிருந்து எழுத்து வடிவில் தனித்தனி அறிக்கை பெறப்பட்டதுடன் ஆய்வாளர்களின் ஆய்வுகள் குறித்த வல்லுநர்களின் மதிப்பீடுகளும் தொகுக்கப்பட்டன. ஒவ்வோர் ஆய்வாளருக்கும் தனித்தனி மதிப்பீட்டு அறிக்கை உருவாக்கப்பட்டு அவற்றில் வல்லுநர்கள் சான்றளித்தனர். பிற்பகல் 5 மணியளவில் நிகழ்ச்சிகள் அனைத்தும் நிறைவுபெற்றன.



இளநிலை ஆய்வாளர்களுக்குப் பயிற்சி

CICTArchives

# தமிழ் வழக்காறுகள் தொன்மைக்காலம் முதல் தற்காலம் வரை [எழுத்திலும் பேச்சிலும்]

**2006 ஆகஸ்டு 23 முதல் 25 வரை**

**பிரஞ்சு இந்தியவியல் நிறுவனம், புதுச்சேரி**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**திரு ஆர். இலங்கையன்**
**திரு எம். கண்ணன்**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையமும் புதுச்சேரி பிரஞ்சு இந்தியவியல் நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்த பன்னாட்டுக் கருத்தரங்கு புதுச்சேரியில் நடைபெற்றது.

23.8.2006 அன்று நடைபெற்ற தொடக்க விழாவில் பிரஞ்சு இந்தியவியல் நிறுவன இயக்குநர் முனைவர் ஜீன்-பியர் முல்லர், திரு எம். கண்ணன், திரு இரா. இலங்கையன் ஆகியோர் கருத்தரங்கின் நோக்கம் குறித்து உரையாற்றினர்.

கருத்தரங்கின் முதல் அமர்வுக்கு முனைவர் ஐராவதம் மகாதேவன் தலைமைவகித்தார். தமிழ் வழக்காறுகள் குறித்து 25 அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகள் அளித்தனர். ஒவ்வோர் அமர்வின் முடிவிலும் கலந்துரையாடல் நிகழ்ந்தது.

28.8.2006 அன்று பிற்பகல் நடைபெற்ற நிறைவு விழாவில் பேசிய முனைவர் ஜீன்-பியர் முல்லர் கருத்தரங்கில் இடம்பெற்ற ஆய்வுக் கட்டுரைகள் நூல் வடிவில் வெளிவர வேண்டுமென விருப்பம் தெரிவித்தார். சிறப்புரையாற்றிய திரு எம். கண்ணன் தமிழ் வழக்காறுகள் குறித்து விரிவான ஆய்வுகள் தேவைப்படுவதால், இதுபோன்று இன்னும் பல கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். திரு இரா. இலங்கையன் நன்றிநவிலப் பன்னாட்டுக் கருத்தரங்கு இனிதே நிறைவுற்றது.

# ஆதிச்சநல்லூர் அகழாய்வுகள்

1876ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் முதன்முதலில் அகழ்வாய்வு மேற்கொண்டவர் செருமானிய மானிடவியலாளர் முனைவர் ஜாகர் (Dr. Jagore a German Anthropologist). இவர் 'பெருங்கற்காலம்' எனும் 'இரும்புக்காலம்' சார்ந்த ஈமத்தாழிகள், பல்வேறு வடிவிலான மட்கலன்கள், இரும்பாலான அரும்பொருள்கள், மனித மண்டையோடுகள், எலும்புகள் போன்ற பல அரிய பொருள்களைக் கண்டெடுத்தார்.

1899 முதல் 1906 வரை இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த அலெக்சாண்டர் ரீ (Alexandar Rea) நிகழ்த்திய அகழ்வாராய்ச்சியில் ஆயிரக்கணக்கான கலை நயமிக்க மட்கலன்கள், இரும்புப் பொருள்கள், வெண்கலப் பொருள்கள், தங்க அணிகலன்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவரது அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட வெண்கலத்தாலான பொருள்கள் மிகவும் சிறப்புவாய்ந்தவையாகும். இவை தென்னிந்தியாவின் தொன்மைச் சிறப்பை அறியத் துணைபுரிகின்றன. ரீ தமது ஆய்வறிக்கையில், வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட மிகப் பழமையான இடம் ஆதிச்சநல்லூர் என்பது கண்டறியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.





பன்னாட்டுக் கருத்தரங்குகள்

# சங்க இலக்கியத்தில் மகளிர் நிலை





**2007 மார்ச்சு 8 முதல் 10 வரை**
**அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்,**
**கொடைக்கானல்**
**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**முனைவர் இரெ. குமரன், முனைவர் என். கலா**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையமும் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகமும் இணைந்து ஏற்பாடுசெய்த உலக மகளிர்நாள் பன்னாட்டுக் கருத்தரங்கு கொடைக்கானலில் நடைபெற்றது. 8.3.2007 காலை 10 மணிக்குப் பல்கலைக்கழகக் கலையரங்கில் பன்னாட்டுக் கருத்தரங்க நிகழ்ச்சிகள் தொடங்கின. மகளிர் ஆய்வு மைய இயக்குநர் முனைவர் என். கலா வரவேற்புரை நிகழ்த்தினார். துணைவேந்தர் முனைவர் த. ஜானகி தலைமையுரையாற்றினார். மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் முனைவர் க. பொன்முடி, திரு ஐ. பெரியசாமி ஆகியோர் தொடக்க விழாப் பேருரை நிகழ்த்தினர்.

தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் ஔவை நடராசன், பேராசிரியர் கவிஞர் மறைமலை இலக்குவனார், டாக்டர் தாரா நடராசன் ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர்.

செம்மொழி இலக்கியங்களில் மகளிர் நிலை, சங்ககாலப் பெண்பாற் புலவர்கள், சங்க இலக்கியங்களில் பெண்ணியம் என்னும் பொதுத் தலைப்புக்களில் 20 அமர்வுகள் இடம்பெற்றன. 220 பேராளர்கள் கட்டுரை அளித்தனர். கட்டுரைகள் நான்கு தொகுதிகளாகத் தொகுக்கப்பெற்று வெளியிடப்பட்டன.

10.3.2007 அன்று காலை 11 மணிக்கு நடைபெற்ற நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராக நடுவண் அரசு விருதுபெற்ற திருமதி சின்னப்பிள்ளை கலந்துகொண்டு வாழ்த்துரைவழங்கினார். தமிழக அரசின் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் டாக்டர் கீதாஜீவன் நிறைவு விழாப் பேருரை நிகழ்த்தினார்.

செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் இரெ. குமரன் நன்றியுரை நவிலப் பன்னாட்டுக் கருத்தரங்கு இனிதே நிறைவுற்றது.

---

1903 - 1904ஆம் ஆண்டுகளில் பாரிஸ் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த இலூயி லாப்பிக் (M.Louis Lapique of Paris University) இங்கு அகழ்வாராய்ச்சி மேற்கொண்டார். இவ்வகழ்வாய்வில் பலவகை மட்கலன்கள், தொங்கு விளக்குகள், தொங்கு விளக்குத் தாங்கிகள், வாள்கள் உள்ளிட்ட இரும்புப் பொருள்கள், வெண்கலப் பொருள்கள் போன்ற பல அரிய பொருள்கள் கிடைத்துள்ளன.

1914இல் ஜே.ஆர். எண்டர்சன (J.R.Henderson) இங்கு அகழ்வாராய்ச்சி மேற்கொண்டு பல அரிய பொருள்களைத் திரட்டினார்.

2004 - 05இல் தியாக. சத்தியமூர்த்தி தலைமையில் அகழாய்வு நடைபெற்றது. இவ்வகழ்வாய்வில் பல்வேறு வடிவிலான சிவப்பு கருப்பு வண்ணத் தாழிகளும், தொல்பழங்கால அரிய பொருள்களும் கண்டெடுக்கப்பட்டன.

CICTArchives

# செம்மொழித் தமிழ் ஆய்வரங்கம்





**2008 சனவரி 17 முதல் 20 வரை**

**ஆசியவியல் நிறுவனம், சென்னை**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**முனைவர் ஜி. ஜான் சாமுவேல்**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையம், சென்னை ஆசியவியல் நிறுவனத்துடன் இணைந்து பன்னாட்டு ஆய்வரங்கம் ஒன்றை நடத்தியது.

17.1.2008 அன்று சென்னை வாணிமகாலில் தொடக்க விழா நடைபெற்றது. ஆசியவியல் நிறுவன இயக்குநர் முனைவர் ஜி. ஜான் சாமுவேல் வரவேற்புரைவழங்கினார். பன்னாட்டு ஆய்வரங்கைத் தொடங்கிவைத்துச் சிறப்புரையாற்றிய தமிழக அரசின் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் செம்மொழித் தமிழின் சிறப்புக்களை இலக்கண இலக்கிய மேற்கோள்களுடன் நயம்பட எடுத்துரைத்ததோடு, செம்மொழி என்னும் சிறப்புத் தகுதியைப் பெறுவதற்குத் தமிழக அரசு மேற்கொண்ட முயற்சிகளையும் விளக்கிக்கூறினார். தலைமை உரையாற்றிய ஆசியவியல் நிறுவனத் தலைவர் மருத்துவர் சி. என். ஏ. பரிமளம், அறிஞர் அண்ணா தமிழுக்கு ஆற்றிய அரும்பணிகளை நினைவுகூர்ந்தார். வாழ்த்துரைவழங்கிய இந்திய மொழிகளின் நடுவண நிறுவன இயக்குநர் பேராசிரியர் உதய நாராயண சிங் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் மேற்கொண்டுள்ள செம்மொழித் தமிழ் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து எடுத்துரைத்தார்.

அயலகத் தமிழறிஞர்களாகிய பேராசிரியர் ஆர். இ. ஆஷர் (ஸ்காட்லாந்து), பேராசிரியர் அலெக்சாண்டர் துபியன்ஸ்கி (இரஷ்யா), பேராசிரியர் டேவிட் சி. பக் (அமெரிக்கா), பேராசிரியர் ஜுங் நம் கிம் (தென் கொரியா), பேராசிரியர் சண்முகதாஸ் (இலங்கை) ஆகியோர் சிறப்பிக்கப்பட்டனர். பேராசிரியர் ப. மருதநாயகம் நன்றிநவிலத் தொடக்க விழா இனிதே நிறைவுற்றது.

ஆய்வரங்க நிகழ்வுகள் யாவும் ஆசியவியல் நிறுவனத்தில் நடைபெற்றன. நான்கு நாட்கள் நடைபெற்ற ஆய்வரங்கில் 22 அமர்வுகள் இடம்பெற்றன. 60 ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. அவற்றுள் செம்மொழி தொடர்பான எட்டுக் கட்டுரைகளோடு சங்க இலக்கியம், மொழிபெயர்ப்பு, வரலாற்றாய்வு, ஒப்பியல் நோக்கு, தமிழிசை ஆகியவை தொடர்பான கட்டுரைகளும் இடம்பெற்றிருந்தன.

அமர்வுகளுக்குப் பின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 'தமிழமுதம்' என்னும் நாட்டிய நிகழ்ச்சியும் 'நாட்டிய மஞ்சரி' என்னும் ஜப்பானியக் குழுவினரின் பரத நாட்டிய நிகழ்ச்சியும் 'தமிழிசை' நிகழ்ச்சியும் குறிப்பிடத்தக்கவையாகும்.

20.1.2008 அன்று பிற்பகல் நிறைவு விழா நடைபெற்றது. முனைவர் பி. நாகராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார். பேராசிரியர் ப. மருதநாயகம் தொகுப்புரை வழங்கினார். சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட நடுவண் அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சக மொழித் துறை இயக்குநர் திருமதி. ரேஷ்மி சௌத்ரி சிறப்புரையாற்றினார். பேராசிரியர் ஆர். இ. ஆஷர் நிறைவுரையாற்றினார். அயலகத் தமிழறிஞர்கள் ஆய்வரங்கம் குறித்த தமது கருத்துக்களை எடுத்துரைத்தனர். செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி நன்றிநவிலப் பன்னாட்டு ஆய்வரங்கம் இனிதே நிறைவுற்றது.

CICTArchives

# பன்னாட்டுக் கருத்தரங்குகள்

## சங்க இலக்கியம் புதிய அணுகுமுறைகள்

**2008 சனவரி 22 முதல் 24 வரை**

**திராவிடவியல் பல்கலைக்கழகம்,**
**குப்பம், ஆந்திர மாநிலம்**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**முனைவர் எஸ். கார்லோஸ்**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையம், திராவிடவியல் பல்கலைக்கழகத்துடன் இணைந்து பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது.

22.1.2008 முற்பகல் கருத்தரங்கத் தொடக்க விழா நடைபெற்றது. விழாவிற்குத் திராவிடவியல் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஜி. லெட்சுமி நாராயணா தலைமைவகித்தார். பேராசிரியர் ச.அகத்தியலிங்கம் சிறப்புரையாற்றினார். மாஸ்கோ பல்கலைக்கழகப் பேராசிரியர் அலெக்சாண்டர் துபியன்ஸ்கி, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரன், தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் மா. நன்னன் ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர். கருத்தரங்கில் பேராசிரியர்கள் அலெக்சாண்டர் துபியன்ஸ்கி (இரஷ்யா), கிரிஸ்டினா கௌரிலக் குடலிங் (போலந்து), சித்ரலேகா (இலங்கை), சுப திண்ணப்பன் (சிங்கப்பூர்) உள்ளிட்ட 100 அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகள் அளித்தனர்.

24.1.2008 பிற்பகல் நிறைவு விழா நடைபெற்றது. திராவிடவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஜி. லெட்சுமிநாராயணா வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சி. சுப்பிரமணியன் தலைமைவகித்து நிறைவுப் பேருரையாற்றினார். பேராசிரியர் சுப.திண்ணப்பன், பேராசிரியர் ஆண்ட்ரூ வில்போர்டு கார்னெல் ஆகியோர் சிறப்புரையாற்றினர். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் பேராசிரியர் ப.மருதநாயகம் நன்றிநவின்றார்.

## எல்லீசன் என்றொரு அறிஞன்

எல்லீசன் என்று தமிழ் ஒலி மரபுக்கேற்பத் தம்மை அழைத்துக்கொண்ட பிரான்சிஸ் ஒயிட் எல்லீஸ் (Francis Whyte Ellis, 1777-1819) என்ற அறிஞரின் பெயர் தமிழுலகம் பரவலாக அறிந்தது. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த முன்னோடி என்ற அளவிலேயே அவர் பெயர் நிலைபெற்றுள்ளது. புறநானூறு, நாலடியார், சீவகசிந்தாமணி, பாரதம், பிரபுலிங்கலீலை முதலான நூல்களைக் கையாண்டு அவர் குறளுக்கு எழுதிய விளக்கவுரையினையும் தமிழுலகம் அறியும். சென்னை அரசாங்கத்தில் வருவாய் வாரியச் செயலாளர், நிலச் சுங்க அதிகாரி, சென்னை மாவட்ட ஆட்சியர் எனப் பல உயர் பதவிகளை வகித்ததால், எல்லிஸ் துரை என்றும் இவர் அறியப்படுவார். தம் பொறுப்பிலிருந்த அரசாங்கத் தங்கச் சாலையில் திருவள்ளுவரின் உருவம் பொறித்த இரண்டு வராகன் தங்க நாணயங்களை வார்த்த பெருமைக்குரியவர்



எல்லிஸ் என்ற செய்தியைப் பேராசிரியர் ஐராவதம் மகாதேவன் கண்டுசொல்லியிருக்கிறார்.

– ஆ. இரா. வேங்கடாசலபதி,
திராவிடச் சான்று, 2007 முன்னுரை, ப.11.

CICTArchives

# பழந்தமிழர் இசை மரபும் உலகத் தொல்லிசை மரபும்






**2008 சனவரி 24, 25**

**கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி**

**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்**
**முனைவர் மார்க்ரெட் பாஸ்டின்**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையமும் கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரியும் இணைந்து பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்றை நடத்தின.

24.1.2008 அன்று நடைபெற்ற தொடக்க விழாவில் நுண்கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் மார்கரெட் பாஸ்டின் வரவேற்புரையாற்றினார். தமிழ்மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் மு.பி.பாலசுப்பிரமணியன் தலைமைவகித்தார். இசைப் பேரறிஞர் ஏ. கே. சி. நடராஜன் கருத்தரங்கைத் தொடங்கிவைத்து உரைநிகழ்த்தினார். முனைவர் எஸ். ஏ. கே. துர்கா பழந்தமிழிசையின் சிறப்புக்களை எடுத்துரைத்தார். கொடைக்கானல் மகளிர் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தர் முனைவர் யசோதா சண்முகசுந்தரம் சிறப்புரையாற்றினார். இரண்டு நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கில், 18 அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகள் அளித்தனர். இசைத்துறை சார்ந்த ஆய்வாளர்கள் முதுகலை மாணவர்கள் மற்றும் சிறப்பழைப்பாளர்கள் உட்பட 150 இசை ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

25.1.2008 பிற்பகல் நிறைவு விழா நடைபெற்றது. கலைக்காவிரி நுண்கலைக் கல்லூரிச் செயலர் அருள்தந்தை எஸ். எம். ஜி. சேகரன் வரவேற்புரை நிகழ்த்தினார். பாரதிதாசன் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் வி.இராதாகிருஷ்ணன் தலைமையுரையாற்றினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் அரிமளம் சு. பத்மநாபன் நன்றிகூறினார்.



மாண்புமிகு தமிழக முதல்வர் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் சீரமைப்புப் பணிகளைப் பார்வையிட 26.06.08 அன்று வருகைபுரிந்தார். மாண்புமிகு அமைச்சர்கள் திரு க. பொன்முடி, திரு ஆர்க்காடு வீராசாமி, திரு கே.என். நேரு, திரு எ.வ. வேலு ஆகியோர் உடன் வந்திருந்தனர்.

# பன்னாட்டுக் கருத்தரங்குகள்

## தமிழ் இலக்கணக் கோட்பாடுகள் - அக வரலாறு நோக்கி





**2008 பிப்ரவரி 29 முதல் மார்ச்சு 2 வரை**
**பிரஞ்சு இந்தியவியல் நிறுவனம், புதுச்சேரி**
**ஒருங்கிணைப்பாளர்:**
**பேராசிரியர் இரா. கோதண்டராமன்**

புதுச்சேரி பிரஞ்சு இந்தியவியல் நிறுவனத்துடன் இணைந்து செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. கருத்தரங்கின் தொடக்க விழா 29.2.2008 அன்று காலை நடைபெற்றது. நிறுவனத் தலைவர் முனைவர் டொமினிக் கூடால் அனைவரையும் வரவேற்றார்.

கருத்தரங்கில் திரு ஜூன் லக் செவில்லாட் (பாரிஸ்), திரு தாமஸ் லேமன் (ஜெர்மனி), திரு டி.தகாகஷி (ஜப்பான்) ஆகிய மூன்று வெளிநாட்டு அறிஞர்கள் உட்பட பதின்மூன்று அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகள் அளித்தனர். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் பேராசிரியர் இரா. கோதண்டராமன் நன்றிநவின்றார்.

## உலகப் பண்பாட்டிற்குப் பக்தி இலக்கியங்களின் பங்களிப்பு







**2008 மார்ச்சு 6 முதல் 8 வரை**
**அ. வ. அ. தன்னாட்சிக் கல்லூரி, மயிலாடுதுறை**
**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**பேராசிரியர் இரா. கோதண்டராமன்**
**முனைவர் தி. நெடுஞ்செழியன்**

செம்மொழித்தமிழ் உயராய்வு மையமும் அ. வ. அ. தன்னாட்சிக் கல்லூரியும் இணைந்து பன்னாட்டுக் கருத்தரங்கு ஒன்றை நடத்தின.

6.3.2008 முற்பகல் கல்லூரிக் கலையரங்கில் தொடக்க விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர்

CICTArchives

# பன்னாட்டுக் கருத்தரங்குகள்

முனைவர் மு.வரதராசன் வரவேற்புரை நிகழ்த்தினார். கல்லூரிச் செயலர் திரு சொ. செந்திலவேல் தலைமை வகித்தார்.

சேலம் பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் மு. தங்கராசு கருத்தரங்க ஆய்வுக்கோவையை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் ச.அகத்தியலிங்கம் கருத்தரங்கைத் தொடங்கிவைத்து உரையாற்றினார். பேராசிரியர் தொ. பரமசிவம் மையக் கருத்துரை வழங்கினார். முனைவர் தி.நெடுஞ்செழியன் நன்றிகூறினார்.

மூன்று நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கில அமெரிக்கா, தென்கொரியா, சிங்கப்பூர், மலேசியா, இலங்கை ஆகிய வெளிநாடுகளிலிருந்தும் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் 68 பேராளர்கள் கலந்துகொண்டு கட்டுரைகள் அளித்தனர். இக்கருத்தரங்கில பேராசிரியர்களும் மாணவர்களும் பங்குகொண்டு பயன்பெற்றனர்.

8.3.2008 பிற்பகல் நிறைவு விழா நடைபெற்றது. கல்லூரித் தமிழாய்வுத் துறைத் தலைவர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அனைவரையும் வரவேற்றார். கல்லூரி முதல்வர் (பொ.) முனைவர் ஜி. வாசுதேவன் தலைமை வகித்தார். தவத்திரு ஊரன் அடிகள் வாழ்த்துரை வழங்கினார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் கவிக்கோ அப்துல் ரகுமான் நிறைவுப் பேருரையாற்றினார். மயிலாடுதுறை சட்டப்பேரவை உறுப்பினர் திரு எஸ். இராஜகுமார் பேராளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி உரையாற்றினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் பேராசிரியர் இரா. கோதண்டராமன் நன்றிநவின்றார்.

## செவ்விலக்கியம் - கிழக்கும் மேற்கும்







**2008 மார்ச்சு 26, 27**
**அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி**
**ஒருங்கிணைப்பாளர்கள்:**
**பேராசிரியர் ப. மருதநாயகம்**
**முனைவர் எம். சோலையன்**

செம்மொழித் தமிழ் உயராய்வு மையமும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக ஆங்கிலத் துறையும் இணைந்து ஏற்பாடு செய்த பன்னாட்டு மாநாடு காரைக்குடியில் நடைபெற்றது.

26.3.2008 அன்று பன்னாட்டு மாநாட்டின் தொடக்க விழா நடைபெற்றது. விழாவிற்கு அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ஆர்.தண்டபாணி தலைமைவகித்தார். பேராசிரியர் கா.செல்லப்பன் வாழ்த்துரைவழங்கினார். பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் திருமதி உமையாள் ராமநாதன் தொடக்கவுரையாற்றினார். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ம. இராசேந்திரன் மையவுரையாற்றினார். பேராசிரியர் பொற்கோ சிறப்புரையாற்றினார். முனைவர் எம். சோலையன் நன்றி நவின்றார்.

கருத்தரங்கில் இருபது அமர்வுகள் இடம் பெற்றன. பேராசிரியர் ஹயோனோக (கொரியா), திரு வி.பரந்தாமன் (இலங்கை), முனைவர் டேபோன் சூன் (மலேசியா), பேராசிரியர் எம். பரமசிவம் (மலேசியா) உள்ளிட்ட 108 அறிஞர்கள் கட்டுரைகள் வழங்கினர். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் ஆற்றிய நன்றியுரையுடன் கருத்தரங்கம் இனிதே நிறைவுற்றது.

CICTArchives

# தேசியக் கருத்தரங்குகள்

## தொல்காப்பியத்தில் இசைக் குறிப்புக்கள்

2006 சூலை 27, 28

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

இரண்டு நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் சி.சுப்பிரமணியன் தொடங்கிவைத்தார். செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி கருத்தரங்கின் நோக்கம் குறித்து உரையாற்றினார். முனைவர் இரா. திருமுருகன் சிறப்புரையாற்றினார். மூத்த இசைக்கலைஞர் திருப்பாம்புரம் எஸ். சண்முகசுந்தரம் வாழ்த்துரைவழங்கினார். தொல்காப்பியத்தில் பண், வண்ணம், தாளம், மெய்ப்பாடு, இசைக்கலைஞர்கள், நாடகக்கலைஞர்கள் போன்ற பலவேறு தலைப்புக்களில் 26 அறிஞர்கள் கட்டுரைகள் அளித்தனர். இசை



வல்லுநர்கள், இசைக் கல்லூரிப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் என அறுபது பேராளர்கள் கலந்துகொண்டனர்.

செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் அரிமளம் சு. பத்மநாபன், தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவர் முனைவர் இ. அங்கயற்கண்ணி ஆகியோர் கருத்தரங்கை ஒருங்கிணைத்து நடத்தினர்.

## சிலப்பதிகாரம்

**2007 பிப்ரவரி 20, 21, 22**

**அரசினர் கல்லூரி, சித்தூர், பாலக்காடு**

கேரள மாநிலம் பாலக்காடு சித்தூர் அரசினர் கல்லூரியில் மூன்று நாட்கள் நடைபெற்ற இத்தேசியக் கருத்தரங்கைத் தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் ஔவை நடராசன் தொடங்கி வைத்து உரையாற்றினார். 'சேரநாடும் சிலப்பதிகாரமும்' என்னும் பொருளில் தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் திருமதி கே.பிரபாவதி வரவேற்புரையாற்றினார்.



காப்பிய அமைப்பு, காப்பியத் திறனாய்வு, சமூகவியல் நோக்கில் சிலப்பதிகாரம், ஒப்பாய்வு எனும் தலைப்புக்களில் நான்கு அமர்வுகளைக்கொண்ட இக்கருத்தரங்கில் 13 அறிஞர்கள் கட்டுரைகள் அளித்தனர். 50 ஆய்வாளர்கள், 100 மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். கருத்தரங்கின் நிறைவில் முனைவர் கே. ஏ. இராஜாராம், முனைவர் அ. பாண்டுரங்கன், முனைவர் கே. சம்பத்குமார், முனைவர் இரா. மோகன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர். கருத்தரங்க நிகழ்ச்சிகளைக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் என். ஞானப்பழம், செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் இரெ. குமரன் ஆகியோர் ஒருங்கிணைத்து நடத்தினர்.

CICTArchives

# சங்ககால நாட்டுப்புற மரபுகள்

**2007 பிப்ரவரி 23, 24**

**புனித சேவியர் கல்லூரி, பாளையங்கோட்டை**



பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரி நாட்டாரியல் துறையில் சங்ககால நாட்டுப்புற மரபுகள் என்னும் தலைப்பில் தேசியக் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளைச் சார்ந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் என 200 பேர் கலந்துகொண்டனர். பல்துறை சார்ந்த 19 அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினர். கருத்தரங்கிற்குக் கல்லூரி முதல்வர் அருள்தந்தை முனைவர் ஏ. அந்தோணிசாமி தலைமைவகித்து உரையாற்றினார். அருள்தந்தை முனைவர் அந்தோணி ஏ. பாப்புராஜ, அருள்தந்தை முனைவர் லியோ அந்தோணி தாகூர், முனைவர் எஸ்.டி.லூர்து ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர். முனைவர் பா.ரா. சுப்பிரமணியம் கருததரங்க சிறப்புரையாற்றினார். கருததரங்க நிறைவு விழாவில், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ம.இராசேந்திரன் கலந்துகொண்டு நிறைவுப் பேருரையாற்றினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய இணை ஆய்வறிஞர் முனைவர் மு. இராமகிருஷ்ணன், புனித சேவியர் கல்லூரி நாட்டாரியல் துறைத் தலைவர் முனைவர் ஆ. தனஞ்செயன் ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயலாற்றினர்.

# சங்க இலக்கியங்களில் சமூகம்

**2007 மார்ச்சு 15, 16**

**இராணி மேரி கல்லூரி, சென்னை**



சென்னை இராணி மேரி கல்லூரியில் இரண்டு நாட்கள் நடைபெற்ற தேசியக் கருத்தரங்கத் தொடக்க விழாவிற்குக் கல்லூரி முதல்வர் தலைமை வகித்தார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் கருத்தரங்கைத் தொடங்கி வைத்தும் ஆய்வுச் சுருக்க மலரை வெளியிட்டும் சிறப்புரையாற்றினார். ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி. பதமினி நன்றிகூறினார்.

கருத்தரங்கில் ஆறு அமர்வுகள் இடம்பெற்றன. 50 அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகள் அளித்தனர். நாட்டின் பல பகுதிகளிலிருந்து பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். மார்ச்சு 16ஆம் நாள் பிற்பகல் நடைபெற்ற நிறைவு விழாவில் முனைவர் ஐராவதம் மகாதேவன் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கி நிறைவுப்பேருரை நிகழ்த்தினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் கா. கோ. வேங்கடராமன் நன்றிநவிலக் கருத்தரங்கம் இனிதே நிறைவுற்றது.

# செம்மொழித் தமிழ்

**2007 மார்ச்சு 22, 23**

**எம்.ஜி.ஆர். கல்லூரி, ஒசூர்**



22.3.2007 அன்று 'செம்மொழித் தமிழ்' தேசியக் கருத்தரங்கம் எம்.ஜி.ஆர். கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. கருத்தரங்கத் தொடக்க விழாவிற்குக்

CICTArchives

# தேசியக் கருத்தரங்குகள்

கல்லூரி முதல்வர் தலைமையேற்றார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் சிறப்புரையாற்றினார். ஆறு அமர்வுகள் நடைபெற்ற இக்கருத்தரங்கில் 40 ஆய்வுக் கட்டுரைகள் அளிக்கப்பட்டன. ஆய்வாளர்களும் மாணவர்களும் ஆர்வத்துடன் பங்குகொண்டு பயன்பெற்றனர். கருத்தரங்க நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் தலைமையுரையாற்றினார். முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கி நிறைவுப் பேருரை நிகழ்த்தினார்.

செம்மொழித் தமிழ் உயராய்வு மைய இணை ஆய்வறிஞர் முனைவர் மு. இராமகிருஷ்ணன் நன்றிகூறினார்.

## பன்முக நோக்கில் சங்க இலக்கியம்

**2007 மார்ச்சு 23, 24, 25**

**புதுவை மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனம், புதுச்சேரி**







மூன்று நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கைத் தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் தொடங்கிவைத்து உரையாற்றினார். முனைவர் தொ. பரமசிவம் சிறப்புரையாற்றினார். நிறுவன இயக்குநர் முனைவர் எம். சுதர்சன் கருத்தரங்க நோக்கவுரையாற்றினார். ஏழு அமர்வுகளைக்கொண்ட இக்கருத்தரங்கில் சங்க இலக்கியத்தின் அக, புறக் கூறுகள் மிக விரிவாக ஆராயப்பட்டன. அமர்வுகளில் 22 அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகள் அளித்தனர். முனைவர் த. பழமலய், முனைவர் க. நெடுஞ்செழியன், முனைவர் அ. தட்சிணாமூர்த்தி, முனைவர் ஆ.சிவசுப்பிரமணியன், முனைவர் இராஜகுமார், முனைவர் பெ. மாதையன், முனைவர் ஆ. தனஞ்செயன் ஆகியோர் அமர்வுகளை நெறிப்படுத்தினர். ஆய்வரங்கில், பல்கலைக்கழக, கல்லூரிப் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் பங்குகொண்டு பயன்பெற்றனர்.

25.3.2007 அன்று பிற்பகல் நடைபெற்ற நிறைவு விழாவில் புதுவை அரசின் மாண்புமிகு கல்வியமைச்சர் எம். ஓ. எச். எப். ஷாஜகான் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனப் பேராசிரியர் முனைவர் எஸ். பக்தவத்சலபாரதி, செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் இரெ. குமரன் ஆகியோர் கருத்தரங்கை ஒருங்கிணைத்து நடத்தினர்.

## வரலாற்று முறையில் தமிழ் இலக்கணம்

**2007 மார்ச்சு 27, 28**

**பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறை, கோயமுத்தூர்**

கருத்தரங்கின் தொடக்க விழா 27.3.2007 முற்பகல் பல்கலைக்கழகப் பேரரங்கில் நடைபெற்றது. முனைவர் வே. தயாளன் வரவேற்புரைநிகழ்த்தினார். பேராசிரியர்



CICTArchives

செ. சண்முகம் கருத்தரங்க நோக்கவுரையாற்றினார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் க. திருவாசகம் தலைமைவகித்து உரையாற்றினார். பேரூராதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார் வாழ்த்துரைவழங்கினார். பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் சிறப்புரையாற்றினார்.

ஐந்து அமர்வுகள் நடைபெற்ற இக்கருத்தரங்கை முனைவர் இரா. கோதண்டராமன். முனைவர் க.முருகையன். முனைவர் தி. முருகரத்தினம். முனைவர் பெ. மாதையன். முனைவர் சி. மா. இரவிச்சந்திரன் ஆகியோர் வழி நடத்தினர். 40 ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பெற்றன. பங்குபெற்ற (500) ஆய்வாளர்களும் மாணவர்களும் கலந்தாய்வில் ஆர்வமுடன் கலந்துகொண்டனர்.

28.3.2007 பிற்பகல் கருத்தரங்க நிறைவு விழா நடைபெற்றது. முனைவர் வே. தயாளன் வரவேற்புரையாற்றினார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் திருமாவளவன் தலைமை வகித்தார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் நிறைவுரையாற்றினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் கா. உமாராஜ் நன்றிநவின்றார்.

## வரலாற்றிலும் இலக்கியத்திலும் தமிழ்ப் பண்பாடு

**2007 நவம்பர் 28, 29**

**பாத்திமா கல்லூரி, மதுரை**



பாத்திமா கல்லூரித் தமிழ்த்துறையும் வரலாற்றுத் துறையும் செம்மொழித் தமிழ் உயராய்வு மையத்துடன் இணைந்து இக்கருத்தரங்கை நடத்தின. கருத்தரங்கின் தொடக்க விழா 28.11.2007 அன்று முற்பகல் கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. கல்லூரிச் செயலர் அருட்சகோதரி எஸ்தர் மேரி அனைவரையும் வரவேற்றார். அருட்சகோதரி பாத்திமா அந்தோணி தலைமைவகித்தார். முனைவர் ஐராவதம் மகாதேவன் சிறப்புரையாற்றினார். முனைவர் பொன்னட்டே நன்றிகூறினார். இரண்டு நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கில் முனைவர் ஆர்.வேங்கடராமன். முனைவர் த. இராசாராம். முனைவர் வேதாசலம். முனைவர் பா. வளனரசு. முனைவர் வ. சுப்பிரமணியன். முனைவர் இ. முத்தையா. முனைவர் பக்தவத்சலபாரதி. முனைவர் எம். ஏ. சுசிலா ஆகியோர் அமர்வுகளுக்குத் தலைமைவகித்தனர். அமர்வுகளில் 15 அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றன. நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வாளர்களும் மாணவர்களும் பங்குகொண்டு பயன்பெற்றனர்.

29.11.2007 பிற்பகல் நடைபெற்ற நிறைவு விழாவில் செல்வி விசாலாட்சி வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் தலைமைவகித்து உரையாற்றினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி நிறைவுப் பேருரையாற்றினார். முனைவர் ச. வே. சுப்பிரமணியன் வாழ்த்துரைவழங்கினார். முனைவர் சூ. மரியபாக்கியம் நன்றிநவின்றார்.

## இந்தியப் பழங்குடிப் பண்பாடும் தமிழ்ப் பண்பாடும்

**2007 டிசம்பர் 18, 19**

**தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்**

18.12.2007 முற்பகல் கருத்தரங்கத் தொடக்க விழா நடைபெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் அ. மரியசூசை அனைவரையும் வரவேற்றார். கல்லூரி முதல்வர் முனைவர் சி. அந்தோணிராஜ தலைமையுரையாற்றினார். பேராசிரியர் க. ப. அறவாணன் சிறப்புரையாற்றினார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்.



முனைவர் கா.கோ.வேங்கடராமன் நன்றிகூறினார்.

கருத்தரங்கு நடைபெற்ற இரண்டு நாட்களிலும் ஆறு அமர்வுகள் இடம்பெற்றன. 14 அறிஞர்கள் ஆய்வுரைவழங்கினர். ஒவ்வோர் ஆய்வுரைஞரும் ஆய்வுரைவழங்கி முடித்தவுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கருத்தரங்கில் 175 மாணவர்கள் பங்குகொண்டு பயன்பெற்றனர்.

19.12.2007 பிற்பகல் நிறைவு விழா நடைபெற்றது. கல்லூரிப் பொருளாளர் முனைவர் சேவியர் வரவேற்புரைநிகழ்த்தினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் கா.கோ.வேங்கடராமன் தலைமைவகித்து உரையாற்றினார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் சிறப்புரையாற்றினார். முனைவர் கி.பார்த்திபராஜா நன்றிநவின்றார்.

## புதிய நோக்கில் பதினெண்கீழ்க்கணக்கு

**2007 திசம்பர் 27, 28**

**அறிஞர் அண்ணா அரசினர் கலைக்கல்லூரி, நாமக்கல்**

27.12.2007 அன்று முற்பகல் நடைபெற்ற தொடக்க விழாவிற்குக் கல்லூரி முதல்வர் பேராசிரியர் ஜம்புநாதன் தலைமைவகித்தார். எழுத்தாளர் கோவை ஞானி சிறப்புரையாற்றினார். ஆய்வறிஞர் முனைவர் கா.கோ.வேங்கடராமன் நன்றிகூறினார்.

முதல் நாள் நடைபெற்ற இரண்டு அமர்வுகளில் எழுத்தாளர் ஜெயமோகன், முனைவர் எம். வேதசகாய குமார், முனைவர் டி. என். இராமச்சந்திரன், பேராசிரியர் பெ. மாதையன் ஆகியோர் ஆய்வுரைவழங்கினர். இரண்டாம் நாள் அமர்வுகளில் புலவர் பி. வேலசாமி, முனைவர் க. பூரணச்சந்திரன், திரு பி. சரவணன், முனைவர் காசி மாரியப்பன், பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன், முனைவர் பெருமாள் முருகன் ஆகியோர் ஆய்வுரைவழங்கினர். கல்லூரி மாணவர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.



28.12.2007 அன்று பிற்பகல் நிறைவு விழா நடைபெற்றது. முனைவர் கா. கோ. வேங்கடராமன் வரவேற்புரை நிகழ்த்தினார். சேலம் பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் மு. தங்கராசு தலைமையுரையாற்றினார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன் சிறப்புரையாற்றினார். தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் எஸ். நிர்மலா நன்றிநவின்றார்.

செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் கா. கோ. வேங்கடராமன், கல்லூரித் தமிழ்த் துறை இணைப்பேராசிரியர் முனைவர் சு. துரை ஆகியோர் கருத்தரங்கை ஒருங்கிணைத்து நடத்தினர்.

## பன்முக நோக்கில் சிலப்பதிகாரம்-மணிமேகலை

**2008 பிப்ரவரி 4, 5, 6**

**பெரியார் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை, சேலம்**

4.2.2008 அன்று காலை தொடக்க விழா நடைபெற்றது. பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் பெ. மாதையன் வரவேற்றுப் பேசினார். பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் மு. தங்கராசு தலைமையேற்று உரையாற்றினார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் சிறப்புரையாற்றினார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய



CICTArchives

உறுப்பினர் கவிக்கோ அப்துல் ரகுமான் வாழ்த்துரை வழங்கினார். முனைவர் தமிழ்மாறன் நன்றிகூறினார்.

மூன்று நாட்கள் நடைபெற்ற இக்கருத்தரங்கில் ஆறு அமர்வுகள் இடம்பெற்றன. முனைவர் இராம.சுந்தரம், முனைவர் எ. சுப்பராயலு, முனைவர் இரா. திருமுருகன், பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி, முனைவர் தே. லூர்து, முனைவர் பீ. மு. மன்சூர் ஆகியோர் அமர்வுத் தலைமையேற்று நடத்தியதுடன் ஆய்வுக் கட்டுரைகளையும் அளித்தனர். மேலும் 14 அறிஞர்கள் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர். பலகலைக்கழகம் மற்றும் கல்லூரிகளைச் சார்ந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் 200 பேர் பங்குகொண்டு பயன்பெற்றனர்.

6.2.2008 அன்று மாலை நிறைவு விழா நடைபெற்றது. பலகலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் பெ. மாதையன் வரவேற்புரையாற்றினார். துணைவேந்தர் முனைவர் மு. தங்கராசு தலைமையுரையாற்றினார். பலகலைக்கழகப் பதிவாளர் முனைவர் கோ. குணசேகரன் கருத்தரங்க நோக்கவுரையாற்றினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி சிறப்புரையாற்றினார். இணைப்பேராசிரியர் முனைவர் பெரியசாமி நன்றிநவின்றார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் இரெ. குமரன், பேராசிரியர் பெ மாதையன் ஆகியோர் கருத்தரங்கை ஒருங்கிணைத்து நடத்தினர்.

# பக்தி இலக்கியங்களில் சங்க இலக்கியத்தின் செல்வாக்கு

### 2008 பிப்ரவரி 16, 17
### ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை அறிவியல் கல்லூரி - மயிலம்

16.2.2008 அன்று காலை நடைபெற்ற தொடக்க விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் சு. திருநாவுக்கரசு வரவேற்புரைநிகழ்த்தினார். பொம்மபுர ஆதீனம் குருமகாசந்நிதானம் தவத்திரு ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அருளுரை வழங்கினார்கள். செம்மொழி தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் பேராசிரியர் கு சிவமணி தொடக்கவுரையாற்றினார். பேராசிரியர் க. ப. அறவாணன் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி, பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் ஆகியோர் இலக்கியப் பேருரைநிகழ்த்தினர். ஒருங்கிணைப்பாளர் முனைவர் இரா. இலட்சாராமன் நன்றிகூறினார்.

பிற்பகல் தொடங்கிய கருத்தரங்க அமர்வுகளை முனைவர் சு. வேங்கடராமன், முனைவர் செவை சண்முகம், பேராசிரியர் கு. சிவமணி ஆகியோர் தலைமையேற்று நடத்தினர்.

17.2.2008 அன்று மூன்று அமர்வுகள் இடம்பெற்றன. முனைவர் பழ. முத்தப்பன், முனைவர் ம. சா. அறிவுடைநம்பி, முனைவர் க. பஞ்சாங்கம் ஆகியோர் தலைமையேற்று அமர்வுகளை நெறிப்படுத்தினர். கருத்தரங்கில் 34 அறிஞர்களின் கட்டுரைகள் இடம்பெற்றன. ஒவ்வோர் அமர்வு முடிவிலும் கலந்துரையாடல் நடைபெற்றது.





பிற்பகல் நடைபெற்ற நிறைவு விழாவிற்குப் பேராசிரியர் ஆ. சிவலிங்கனார் தலைமைவகித்தார். தமிழ்மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் கவிஞர் ஈரோடு தமிழன்பன் நிறைவுப்பேருரை நிகழ்த்தினார். முனைவர் அ. அறிவுநம்பி, கல்லூரிச் செயலாளர் திரு குமார சிவ. இராசேந்திரன் ஆகியோர் வாழ்த்துரைவழங்கினர். முனைவர் இரா.இலட்சாராமன் நன்றிநவின்றார்.

CICTArchives

# தேசியக் கருத்தரங்குகள்

## இந்திய இலக்கிய வளர்ச்சியில் தமிழ் மொழியும் இலக்கியமும்

**2008 பிப்ரவரி 26, 27, 28**

**பாரதியார் பல்கலைக்கழக மொழியியல் துறை கோயமுத்தூர்**

26.2.2008 முற்பகல் கருத்தரங்கத் தொடக்க விழா நடைபெற்றது. முனைவர் சி. சிவசண்முகம் வரவேற்புரைநிகழ்த்தினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் பேராசிரியர் ப. மருதநாயகம் தலைமையுரையாற்றினார். தமிழ் மொழி மேம்பாட்டு வாரிய உறுப்பினர் முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன் சிறப்புரையாற்றினார்.

முதல் நாள் முற்பகல்முதல் அமர்வுகள் தொடங்கின. முதல் அமர்வுக்குப் பேராசிரியர் ப. மருதநாயகம் தலைமை வகித்து ஆய்வுக் கட்டுரையும் அளித்தார். இரண்டாம் அமர்வுக்கும் அவரே தலைமையேற்றார். இரண்டு அமர்வுகளிலும் ஐந்து ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றன.

இரண்டாம் நாள் நடைபெற்ற இரண்டு அமர்வுகளுக்கு முறையே முனைவர் என்.கிருபானந்தம், பேராசிரியர் எம். சிவதாசன் ஆகியோர் தலைமையேற்றனர். முதல் அமர்வில் எட்டுக் கட்டுரைகளும் இரண்டாம் அமர்வில் ஏழு கட்டுரைகளும் இடம்பெற்றன.



மூன்றாம் நாள் நடைபெற்ற முதல் அமர்வுக்கு முனைவர் ஏ. கார்த்திகேயன் தலைமையேற்றார். இரண்டாம் அமர்வுக்கு முனைவர் என். பிரேமானந்தன் தலைமையேற்றார். இரு அமர்வுகளிலும் பத்து ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றன. பல்கலைக்கழக ஆய்வாளர்களும் மாணவர்களும் கருத்தரங்கில் பங்குகொண்டு பயன்பெற்றனர்.

28.2.2008 பிற்பகல் நிறைவு விழா நடைபெற்றது. முனைவர் சி. சிவசண்முகம் அனைவரையும் வரவேற்றுப்பேசினார். தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் சி. மா. இரவிச்சந்திரன் நிறைவுப் பேருரை நிகழ்த்தினார். முனைவர் பி. செல்வகுமார் வழங்கிய நன்றியுரையுடன் கருத்தரங்கம் நிறைவுற்றது.

## இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழின் பங்களிப்பு

**2008 மார்ச் 13, 14**

**அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறை, அண்ணாமலை நகர்**

கருத்தரங்கத் தொடக்க விழாவில் தமிழியல் துறைத் தலைவர் முனைவர் துரை. பட்டாபிராமன் வரவேற்புரைநிகழ்த்தினார். துணைவேந்தர் முனைவர் மா. இராமநாதன் தலைமையேற்றுக் "கருத்தரங்க நினைவலைகள்" என்னும் நூலை வெளியிட்டு உரையாற்றினார். பேராசிரியர் ச. அகத்தியலிங்கம் வாழ்த்துரைவழங்கினார். புதுவைப் பல்கலைக்கழக மொழிப்புல முதன்மையர் முனைவர் அ. அறிவுநம்பி.



CICTArchives

செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் பேராசிரியர் இரா. கோதண்டராமன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ.சிவபெருமான் நன்றிகூறினார்.

கருத்தரங்கில் இடம்பெற்ற நான்கு அமர்வுகளுக்கு முறையே பேராசிரியர் ச. அகத்தியலிங்கம், முனைவர் வ. ஜெயதேவன், பேராசிரியை பா.மாலினி, பேராசிரியர் செ. வைத்தியலிங்கன் ஆகியோர் தலைமையேற்றனர். அமர்வுகளில் 21 அறிஞர்களின் கட்டுரைகள் இடம்பெற்றன. கருத்தரங்கம், ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரிதும் பயன்நல்கியது.

கருத்தரங்கின் நிறைவு விழாவிற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் மா.இரத்தினசபாபதி தலைமைவகித்து உரையாற்றினார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் பேராசிரியர் கு. சிவமணி சிறப்புரையாற்றினார். முனைவர் தி. குமார் நன்றிகூறினார்.

## இந்தியப் பண்பாட்டிற்கும் பக்தி இலக்கியத்திற்கும் சங்கம் மருவிய நூல்களின் பங்களிப்பு

**2008 மார்ச்சு 21, 22, 23**

**தூய நெஞ்சக் கல்லூரி, கொடைக்கானல்**



கருத்தரங்கின் தொடக்க விழா, 21.3.2008 முற்பகல் கல்லூரிக் கலையரங்கில் பேராசிரியர் தி. முருகரத்தினம் தலைமையில் நடைபெற்றது. செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் பேராசிரியர் ப.மருதநாயகம் "இந்தியப் பண்பாட்டிற்குத் தமிழின் பங்களிப்பு" என்னும் பொருளில் சிறப்புரையாற்றினார்.

முதல் நாள் இடம்பெற்ற இரண்டு அமர்வுகளுக்கு முறையே பேராசிரியர் இரா. கோதண்டராமன், பேராசிரியர் ப. மருதநாயகம் ஆகியோர் தலைமை வகித்தனர். அமர்வுக்கு ஐவர் எனப் பத்து அறிஞர்கள் கட்டுரைகள் அளித்தனர். இரண்டாம் நாள் நடைபெற்ற முதல் அமர்வில் பேராசிரியர் க. நெடுஞ்செழியன் தலைமையில் ஐந்து அறிஞர்கள் கட்டுரைகள் அளித்தனர். இரண்டாம் அமர்வில் பேராசிரியர் கே.முருகையன் தலைமையில் ஐந்து அறிஞர்கள் கட்டுரைகள் படித்தனர். மூன்றாம் நாள் முதல் அமர்வுக்குப் பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தியும் இரண்டாம் அமர்வுக்குப் பேராசிரியர் கா. செல்லப்பனும் தலைமையேற்க, இவ்விரு அமர்வுகளிலும் பத்து அறிஞர்கள் கட்டுரைகள் அளித்தனர். கட்டுரையாளர்களுடன் பங்கேற்பாளர்கள் கலந்துரையாடித் தெளிவுபெற்றனர். பேராசிரியர் ப. மருதநாயகம் நிறைவுரையாற்றினார். பேராசிரியர் இரா.கோதண்டராமன் நன்றிகூறினார்.

## டாக்டர் பி.சா.சுப்பிரமணிய சாஸ்திரியார் தமிழிலக்கணப் பணியும் மொழிநூற் பணியும்

**2008 மார்ச்சு 25, 26**

**மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழாய்வுத் துறை, மதுரை**

அமெரிக்கன் கல்லூரிக் கருத்தரங்க அறையில் 25.3.2008 முற்பகல் தொடக்க விழா நடைபெற்றது. கல்லூரித் தமிழாய்வுத் துறைத் தலைவர் முனைவர் தி.நா. பிரணதார்த்திஹரன் வரவேற்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சின்னராஜ் ஜோசப் ஜெயக்குமார் தலைமைவகித்தார். செம்மொழித் தமிழ் உயராய்வு மைய ஆய்வறிஞர் முனைவர் கா.கோ.வேங்கடராமன் தொடக்கவுரையாற்றினார். பேராசிரியர் அ.தாமோதரன், திரு. சாஸ்திரியாரின் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி உரையாற்றினார். கருத்தரங்க அமர்வுகளில் 13 அறிஞர்கள் கட்டுரைகள் அளித்தனர். திரு. சாஸ்திரியாரின் தொல்காப்பியப் புலமைபற்றியும் வடமொழி இலக்கணத்தோடு தமிழ் இலக்கணத்தை வரலாற்றடிப்படையில் ஒப்பிட்டு ஆராய்ந்த திறன்

CICTArchives



பற்றியும் கால்டுவெல் இடறிய இடங்கள் அவற்றுக்கான மாற்றுக் கருத்துக்கள் ஆகியவைபற்றியும் ஆய்வாளர்கள் விளக்கமாக எடுத்தியம்பினர்.

26.3.2008 பிற்பகல் நடைபெற்ற நிறைவு விழாவிற்குக் கல்லூரித் துணை முதல்வர் முனைவர் ஜார்ஜ செல்வகுமார் தலைமைவகித்தார். பேராசிரியர் இராம. சுந்தரம் சிறப்புரையாற்றினார். திரு சாஸ்திரியாரின் புதல்வர் பேராசிரியர் பி. சு. கிருஷ்ணன் தொகுப்புரை வழங்கினார். முனைவர் தி. நா. பிரணதார்த்திஹரன் நன்றிநவின்றார்.

## திருக்குறள் உணர்த்தும் வாழ்வியற் கோட்பாடுகள்

### 2008 மார்ச்சு 29, 30

### நெய்வேலித் தமிழ்ச் சங்கம், நெய்வேலி



29.3.2008 அன்று காலை நடைபெற்ற ஆய்வரங்கத் தொடக்க விழா நிகழ்ச்சிக்குப் பேராசிரியர் ச.வே.சுப்பிரமணியன் தலைமைவகித்தார். செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க.இராமசாமி வரவேற்புரையாற்றினார். நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனக் காவல்துறைக் கூடுதல் தலைவர் திரு வெ. நாராயணன், இ.கா.ப., சிறப்புரையாற்றினார். நெய்வேலித் தமிழ்ச் சங்கச் செயலர் நன்றிநவில முற்பகல் நிகழ்வுகள் நிறைவுற்றன.

இரண்டு நாட்கள் நடைபெற்ற கருத்தரங்க நிகழ்வுகளில் ஐந்து அமர்வுகள் இடம் பெற்றன. அமர்வுகளுக்கு முறையே பேராசிரியர் இ. சுந்தரமூர்த்தி பேராசிரியர் தமிழண்ணல், பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியன், முனைவர் நா. சுவாமிநாதன், நீதிபதி மூ. புகழேந்தி ஆகியோர் தலைமையேற்றனர். 15 அறிஞர்கள் கட்டுரை அளித்தனர். தமிழ் ஆர்வலர்கள், பொறியாளர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் என 150 பேர் கலந்துகொண்டு அமர்வுகளைச் சிறப்பித்தனர்.



30.3.2008 அன்று மாலை நெய்வேலித் தமிழ்ச் சங்க அரங்கில் நடைபெற்ற நிறைவு விழாவிற்குத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு கோவி. கோபாலகிருட்டினன் தலைமைவகித்தார். செந்தமிழ் அந்தணர் இரா.இளங்குமரனார் நிறைவுப்பேருரை நிகழ்த்தினார். பேராசிரியர் க. ப. அறவாணன் சிறப்புரையாற்றினார். ஜவகர் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் மருதூர் அரங்கராசன் கருத்தரங்க நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்துச் செயலாற்றினார். நெய்வேலித் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் கலை நிகழ்ச்சிகள் வழங்கினர். முனைவர் இரெ. குமரன் நன்றிநவிலக் கருத்தரங்கம் இனிதே நிறைவுற்றது.

CICTArchives

பிப்ரவரி 19



# டாக்டர் உ.வே.சா. பிறந்தநாள் விழா

17.02.08 - 24.02.08

## சங்க இலக்கிய வாரம்

### மக்கள் இயக்கம்



உ

கணபதி துணை

எட்டுத்தொகையு ளொன்றாகிய

புறநானூறு மூலமும்

உரையும்

இவை

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதராகிய

உத்தமதானபுரம்

வே. சாமிநாதையரால்

பல பிரதிரூபங்களைக்கொண்டு

பரிசோதித்து

சென்னை

வெ. நா. ஜூபிலி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1894

Copyright Registered.

விலை ரூபா. ௩







CICTArchives

தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் பிறந்த நாளை மையமாகக் கொண்டு பிப்ரவரி 17 முதல் 24 வரை எட்டு நாட்கள் சங்க இலக்கிய வாரம் கொண்டாடப்பட்டது. செம்மொழித் தமிழ் உயராய்வு மையமும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் இணைந்து தமிழ்நாடெங்கும் நடத்திய சங்க இலக்கிய வாரம் ஒரு மக்கள் இயக்கமாக நடத்தப்பெற்றது.

மதுரையில் பிப்ரவரி 17 அன்று டாக்டர் உ. வே. சா. சிலை அமைந்துள்ள தல்லாகுளத்தில் சங்க இலக்கிய வாரத் தொடக்க நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மாநிலத் துணைப் பொதுச்செயலாளர் கே. வேலாயுதம் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கினார். மதுரை மாவட்ட ஆட்சியர் திரு ஜவஹர். செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி. பேராசிரியர் தமிழண்ணல். மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் திரு பொ. மோகன். மதுரை கிழக்குத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு ந. நன்மாறன். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மாநிலப் பொதுச்செயலாளர் திரு ச. தமிழ்ச்செல்வன் ஆகியோர் உ. வே. சா. திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தபின் நிகழ்ச்சிகள்தொடங்கின.

சங்க இலக்கிய வாரத் தொடக்க விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரைவழங்கிய மதுரை மாவட்ட ஆட்சியர் திரு ஜவஹர் ஆற்றிய உரையிலிருந்து... ***'தாய்மொழி தாய்ப்பால் போன்றது' வளம் தரும் உரம் போன்றது. நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் வேண்டும். தாய் மொழியில் பேசுகிறபோது கிடைக்கிற மகிழ்ச்சி வேறு எந்த மொழி பேசுகிறபோதும் கிடைக்காது.***

அடுத்து. வாழ்த்துரைவழங்கிய திரு பொ. மோகன் ஆற்றிய உரையிலிருந்து... ***மத்திய அரசு, தமிழைச் செம்மொழியாக ஏற்று அறிவிக்க வேண்டும் என்பதாக இருந்தது எனது முதலாவது நாடாளுமன்ற உரை.***

செம்மொழித் தமிழ் உயராய்வு மையத் தலைவர் பேராசிரியர் க. இராமசாமி ஆற்றிய உரையிலிருந்து... ***தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் இலக்கியங்கள் தமிழகத்திற்கு மட்டுமல்ல இந்தியாவுக்கே ஒரு பாரம்பரியச் சொத்தாக ஆகியுள்ளன.***

சட்டமன்ற உறுப்பினரும் மாநிலத் துணைத் தலைவருமான திரு ந. நன்மாறன் ஆற்றிய உரையிலிருந்து... ***மகாமகோபாத்தியாய உ. வே. சா. வின் பேரப்பிள்ளைகள் நாம். இங்கு உள்ள உ. வே. சா. சிலை சுற்றிலும் அழகுபடுத்திப் பாதுகாக்கப்பட வேண்டும்.***

தமிழறிஞர் பேராசிரியர் தமிழண்ணல் ஆற்றிய உரையிலிருந்து... ***தமிழுக்கு மீண்டும் மறுமலர்ச்சிக் காலம் ஏற்பட்டுள்ளது. இந்த மறுமலர்ச்சியை நிலைநிறுத்தத் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் முன்வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. பொதுவுடைமை நாடுகள்தாம் தாய் மொழியை முதன்மைப்படுத்தின. தமிழுக்காகச் சட்டமன்றத்தில் அன்றே குரல் கொடுத்தவர்கள் பொதுவுடைமை இயக்கத்தின் தலைவர்கள் ஜீவா, இராமமூர்த்திதான்.***

மாநிலப் பொதுச்செயலாளர் ச. தமிழ்ச்செல்வன் ஆற்றிய உரையிலிருந்து... ***சங்க இலக்கியங்களைப் படியுங்கள் என்று மக்களிடம் சென்று சொல்லப் போகிறோம். தமிழகமெங்கும் இந்த மக்கள் இயக்கத்தில் இருபதாயிரம் மாணவர்களை ஈடுபடுத்தியுள்ளோம். மேலும் பல்வேறு அமைப்புக்களும் சேர்ந்து தமிழுக்குத் தொண்டாற்ற வேண்டும். இது வரலாற்றுக் கடமை.***

நிகழ்ச்சியின் நிறைவாகச் செம்மொழித் தமிழ் உயராய்வு மையத்தின் ஆய்வறிஞரும் இசையறிஞருமான அரிமளம் சு. பத்மநாபன் சங்கத் தமிழை அடையாளப்படுத்தும் வகையில். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனத் தொடங்கும் கணியன் பூங்குன்றனாரின் பாடலைப் பாடி மகிழ்வித்தார். தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மூன்று ஊர்களைத் தெரிவு செய்து மொத்தம் 115 இடங்களில் சங்க இலக்கிய வார நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. சங்க இலக்கியம் குறித்து மாணவர்களுக்குக் கட்டுரை. பேச்சு. ஓவியம். இசை. நாட்டியம் ஆகியவற்றில் போட்டிகள் நடத்தப்பெற்றன. புதுச்சேரி நடுவண் ஆட்சிப் பகுதியில் பத்து ஊர்களில் பலவேறு கருத்தரங்குகள். உரையரங்குகள். போட்டிகள். கலைநிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன.

'சங்கத் தமிழைக் கற்போம்: நம் சொந்த மரபைக் காப்போம்' என்று அச்சிடப்பட்ட ஒட்டிகளை வீடுகளின் கதவுகளில் வீட்டுச் சொந்தக்காரரின் ஒப்புதலுடன் ஒட்டியது இதுவரை யாரும் மேற்கொள்ளாத ஒரு புதிய அணுகுமுறையாக இருந்தது. உ. வே. சா. படம் போட்ட 'சங்க இலக்கிய அறிமுகம்' என்னும் கையேடு ஒரு லட்சத்துப் பதினைந்தாயிரம் படிகள் அச்சிடப்பட்டுத் தமிழ்நாடு முழுவதும் இலவயமாக வழங்கப்பட்டது.

தமிழகமெங்கும் 115 மையங்களில் கொண்டாடப்பட்ட சங்க இலக்கிய வார விழாவில் அறிஞர் பெருமக்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர். டாக்டர் உ. வே. சாமிநாதையர் பிறந்த ஊரான உத்தமதானபுரத்தில் அவரது நினைவில்லத்தில் நடைபெற்ற விழாவில் ஊர்ப் பொதுமக்கள் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

CICTArchives

# ஆய்வு உதவித்தொகை

பழந்தமிழ் நூலகளில் ஆயவை ஊககபபடுத்தும் நோக்கில் இளம் ஆயவாளாகளுக்குச் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் உதவித்தொகை வழங்கிவருகிறது. இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறத் தோநதெடுககபபெற்ற ஆயவாளாாகள்

## 2006-07 முனைவர் பட்ட மேலாய்வாளர்கள்

முனைவா மு. இராமகிருஷ்ணன்
முனைவா இலக்குமி தத்தை

## 2007-08 முனைவர் பட்ட மேலாய்வாளர்கள்

முனைவா சீ. மாணிக்கம்
முனைவா இரா. இராசலட்சுமி
முனைவா ந. தேவி
முனைவா க. அமுதா
முனைவா குப்புசாமி

## 2006-07 முனைவர் பட்ட ஆய்வாளர்கள்

| | |
|---|---|
| திரு என். கரிகாலன் | சென்னைப் பல்கலைக்கழகம் |
| திரு இ. எழில்வசந்தன் | புதுவை மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனம், புதுச்சேரி |
| திரு ஜெ அரங்கராஜ | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் |
| திரு டி. இராஜா | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் |
| திரு என். மோகன்குமார் | சென்னைப் பல்கலைக்கழகம் |
| செல்வி அனிஷா பா்வின் | அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி |
| திரு பி. சேதுராமன் | தேசியக் கல்லூரி, திருச்சி |
| திரு பி. சுரேஷ்குமார் | பெரியார் பல்கலைக்கழகம், சேலம் |
| திரு ஜெ முத்துச்செல்வன் | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை |
| திரு கே. பாலதண்டாயுதம் | காஞ்சி மாமுனிவா் பட்ட மேற்படிப்பு மையம், புதுச்சேரி |

## 2007-08 முனைவர் பட்ட ஆய்வாளர்கள்

| | |
|---|---|
| செல்வி ஏ. தீபா | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் |
| திரு இ. இனியன் | சென்னைப் பல்கலைக்கழகம் |
| திரு ஆர். ஐயப்பன் | பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி |
| செல்வி ஜே. பிரீத்தி | மதுரை காமராசா் பல்கலைக்கழகம் |
| செல்வி பி. சாமினா | புதுவை மொழியியல் பண்பாட்டு ஆய்வு நிறுவனம் |
| திரு ஜே. இரவி | அருள்மிகு வெங்கடேஸ்வரா கலையியல் கல்லூரி, திருப்பதி |
| செல்வி ஜி. சத்தியதேவி | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் |
| திரு ஆர். செல்வன் | சென்னைப் பல்கலைக்கழகம் |
| செல்வி ஆர். செல்வி | தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் |
| திரு அ. அறிவுமொழி | பாரதியார் பல்கலைக்கழகம், கோயமுத்தூர் |



தொன்மையான தமிழ் இலக்கியம் முற்றும் தனித்தன்மை கொண்டது. முன் மாதிரிகளுக்கெல்லாம் முன் மாதிரியானது. அதன் பாடு பொருளும் சிந்தனை வளமும் தனிச்சிறப்புடையவை. (திராவிடத் தன்மை கொண்டது என்று சொல்லலாமாயினும் தமிழ் இலக்கியம் பற்றிப் பேசும்போது 'திராவிட' என்ற சொல்லைக் கையாள நான் விரும்பவில்லை.)

தமிழ்ப் பாண்பாடு மட்டுமே யாப்பு, கவிதையியல், சொல்லாடற்கலை ஆகியவை பற்றிய அரிய, தூய்மையான, தனித்தன்மை கொண்ட, பிறவற்றிற்குக் கடன்படாத ஓர் இலக்கியக் கோட்பாட்டை உருவாக்கியிருக்கிறது.

பேராசிரியர் கமில் சுவெலபில், முருகனின் புன்சிரிப்பு (ஆங்கில நூல்) ப.4

CICTArchives

# விருதுகள் நெறிமுறைகள்

செம்மொழித் தமிழ்த் திட்டத்தின் சார்பில் தகுதியுள்ள அறிஞர்களுக்குக் கீழ்க்காணும் விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுகள் இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்படும்.

1. **தொல்காப்பியர் விருது:** மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஐந்து லட்சம் ரூபாய்ப் பரிசுத்தொகை ஆகியவை இவ்விருதினுள் அடங்கும். ஒவ்வோர் ஆண்டும் ஓர் இந்திய அறிஞருக்குரியது.
2. **குறள்பீடம் விருது:** மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஐந்து லட்சம் ரூபாய்ப் பரிசுத்தொகை ஆகியவை இவ்விருதினுள் அடங்கும். ஒவ்வோர் ஆண்டும் இரு விருதுகள் - அயல்நாட்டவருக்கு ஒன்று, அயல் நாடுவாழ் இந்தியருக்கு ஒன்று.
3. **இளம் அறிஞருக்கான விருது:** மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஒரு லட்சம் ரூபாய்ப் பரிசுத்தொகை ஆகியவை இவ்விருதினுள் அடங்கும். ஒவ்வோர் ஆண்டும் ஐந்து விருதுகள் - முப்பதிலிருந்து நாற்பது வயதிற்குட்பட்ட இந்திய இளம் அறிஞர்களுக்குரியது.

கீழ்க்காணும் நெறிமுறைகளைக் கருத்தில்கொண்டு விருதுகளுக்குரிய அறிஞர்களைப் பரிந்துரைக்கலாம்.

1. பண்டைக்காலம் தொடங்கி கி.பி. 600 வரையிலான தமிழியல் சார்ந்த இலக்கியம், இலக்கணம், மொழியியல், மொழிபெயர்ப்பு, வரலாறு, நுண்கலைகள், கட்டடவியல், தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் விருதுபெறத் தகுதியுடையவை. இத்தகைய ஆய்வுகள் 1950க்கும் 2007க்கும் இடையில் நூல் வடிவில் வெளியீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
2. அயல்நாட்டுக் கடவுச்சீட்டு உடையவர் அயல் நாட்டவர் எனக் கருதப்படுவார்.
3. இந்தியாவில் பிறந்ததற்கான பிறப்புச் சான்றிதழும் அயல்நாட்டுக் கடவுச்சீட்டும் உடையவர் அயல்நாடுவாழ் இந்தியர் எனக் கருதப்படுவார்.
4. பரிந்துரைக்கப்படுபவரைப்பற்றிக் கீழ்க்காணும் தகவற் குறிப்புகள் பரிந்துரையில் இடம்பெற வேண்டும்.




அ. பெயர், அஞ்சல் முகவரி, தொலைபேசி எண்(கள்), மின்னஞ்சல் முகவரி

ஆ. பிறந்த நாள்

இ. ஏற்கெனவே வகித்த அல்லது இப்போது வகிக்கும் பதவி

ஈ. ஆய்வுக் கண்ணோட்டத்துடன் வெளியிட்டுள்ள நூல்களின் பட்டியல்

உ. கி. பி. ஆறாம் நூற்றாண்டு வரையிலான தமிழியல் தொடர்பாக ஆற்றியுள்ள சீரிய ஆய்வுப் பணிபற்றி ஒரு பக்க அளவில் சுருக்க உரை

ஊ. பரிந்துரை செய்பவரின் பெயர், அஞ்சல் முகவரி, தொலைபேசி எண்(கள்), மின்னஞ்சல் முகவரி ஆகியவை தரப்படவேண்டும்.

CICTArchives

# குறுகிய காலத் திட்டப்பணிகளுக்கு நிதி உதவி

செம்மொழித் தமிழாய்வை ஊக்கப்படுத்தும் நோக்கில் பல்துறை சார்ந்த அறிஞர்களின் ஆய்வுப் பணிகளுக்குச் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் நிதி உதவி அளித்து வருகிறது.

2006-07ஆம் கல்வி ஆண்டில் 7 குறுகிய காலத் திட்டப் பணிகளுக்கு ரூபாய் 12,20,000.

2007-08ஆம் கல்வி ஆண்டில் 28 குறுகிய காலத் திட்டப் பணிகளுக்கு ரூபாய் 97,50,000.

## 2006-07

| | ஆய்வறிஞர் | திட்டப்பணி | நிதி உதவி |
|---|---|---|---|
| 1. | முனைவர் வ. ஜெயதேவன் | பெருங்கதை, சீவகசிந்தாமணி சொற்றொகுதி, தொடரடைவு கணினியில் உருவாக்குதல் | 2,04,000/- |
| 2. | பேரா. எஸ். டி. லூர்து | தமிழ்ச் செவ்விலக்கியங்களில் பழமொழிகள்: குறியியல் அணுகுமுறை | 2,46,000/- |
| 3. | முனைவர் பி. பத்மினி | சங்க இலக்கிய அகப் பாடல்களின் உடல் அரசியல் | 1,20,000/- |
| 4. | முனைவர் ஆ. கார்த்திகேயன் | தமிழ்த் திருக்குறளும் பிராகிருத வஜ்ஜாலக்கமும் ஒப்பீடு | 1,48,000/- |
| 5. | முனைவர் ச. இராசேந்திரன் | தமிழ் வினையடிகளின் வரலாற்று மொழியியல் ஆய்வு | 2,81,000/ |
| 6. | முனைவர் டி. தாமராஜ | தமிழ்ச் சமூகத்தில் மொழித் தத்துவம்: தமிழ்க் குறியியலுக்கான முயற்சி | 1,21,000/- |
| 7. | முனைவர் ஆ. தனஞ்செயன் | சங்க இலக்கியம் காட்டும் நாட்டுப்புறவியல் பண்பாட்டுத் தனித்தன்மை மீட்டுருவாக்கம் | 1,00,000/- |

## 2007-08

| | ஆய்வறிஞர் | திட்டப்பணி | நிதி உதவி |
|---|---|---|---|
| 1. | பேரா. வீ. அரசு | பழந்தமிழ் இலக்கிய இலக்கண ஓலைச்சுவடிகள் மின்பதிப்பு | 6,00,000/- |
| 2. | திரு. எம். வி. பாஸ்கர் | பழந்தமிழ்க் கல்வெட்டுக்கள் மின்பதிப்பு (இத்திட்டப்பணிக்குரிய காலம் இரண்டு ஆண்டுகள்) | 25,00,000/- |
| 3. | முனைவர் ஐராவதம் மகாதேவன் | ரோஜா முத்தையா ஆய்வு நூலகத்தில் சிந்துவெளி ஆய்வு மையம் நிறுவுதலும் மேம்படுத்தலும் | 10,00,000/- |
| 4. | பேரா. கி. அரங்கன் | தொல்காப்பிய எழுத்ததிகார முறைமையில் ஒலியனியல் விதிகளை உருவாக்குதல் | 2,50,000/- |
| 5. | முனைவர் தி. முருகரத்தனம் | பழந்தமிழ் இலக்கியம், பண்பாட்டில் மேலைநாட்டார் நோக்குகள் | 2,50,000/- |

CICTArchives

| | | | |
|---|---|---|---|
| 6. | முனைவர் எச். சித்திரபுத்திரன் | பழந்தமிழ் நூல்கள்: விலங்கினப் பெயர்ச் சிறப்பு அகரமுதலி | 2,50,000/- |
| 7. | முனைவர் இரா. மதிவாணன் | தமிழகப் பாறை ஓவியங்களிலும் பானை ஓடுகளிலும் சிந்துவெளிப் பொறிப்புகள்: தொகுத்தலும் அளவிடுதலும் வகைப்படுத்தலும் | 2,50,000/- |
| 8. | முனைவர் முகம்மது அலி ஜின்னா | திருக்குறளும் திருக்குர்ஆனும் ஓர் உயர்நிலை ஒப்பாய்வு | 2,50,000/- |
| 9. | முனைவர் ப. சதாசிவம் | முற்காலப் பாண்டியரின் தொன்மை-பல்லவர்க்கு முற்பட்ட தமிழிலக்கியம் வெளிப்படுத்தும் தொன்மைச் சான்றுகள் - பன்னோக்கு ஒப்பாய்வு | 2,50,000/- |
| 10. | முனைவர் தி. நெடுஞ்செழியன் | தமிழ் முனைவர் பட்ட ஆய்வுகளை (1948-2007) கணினி ஒருங்குறியீட்டில் அட்டவணைப்படுத்தல் | 2,50,000/- |
| 11. | முனைவர் கு. முருகேசன் | கலித்தொகையில் காட்சி மொழியும் நாடகக் கூறுகளும் | 2,50,000/- |
| 12. | பேரா. சே. இராமானுஜம் | சிலப்பதிகாரம்-மணிமேகலை உரையாடல்களில் நாடகப் பாங்கு | 2,50,000/- |
| 13. | முனைவர் சி. பி. கோபால் | தமிழ் இலக்கியத்தில் காலந்தோறும் அகப்பொருள் மரபு மாற்றம் | 2,50,000/- |
| 14. | முனைவர் கு. இராசேந்திரன் | தமிழுக்கும் வடவிந்திய மொழிகளுக்குமான வேர்ச்சொல் இலக்கண உறவுகளை ஆய்தல் | 2,50,000/- |
| 15. | முனைவர் பி. கே. கல்யாணி | சங்ககால மகளிர் - ஐங்குறுநூறு வழி | 1,15,000/- |
| 16. | முனைவர் எம். சந்திரமூர்த்தி | தமிழகப் பாறை ஓவியங்கள் | 2,00,000/ |
| 17. | முனைவர் ஜே. ஆர். இலெட்சுமி | தமிழக வரலாற்றில் கோவில் வாழ் ஔவையும் சங்க இலக்கியமும் | 1,50,000/- |
| 18. | முனைவர் இரா. தாமோதரன் | வரலாற்று நோக்கில் குறுந்தொகை ஆய்வு இயல்புகள் | 1,10,000/- |
| 19. | முனைவர் திருமதி கீதா | சங்க இலக்கியத்தில் அறிவியல் | 2,00,000/- |
| 20. | முனைவர் க. நெடுஞ்செழியன் | சங்க கால ஆசீவகச் சமயமும் ஐயனார் வழிபாடும் | 2,50,000/- |
| 21. | திரு. பெ. சு. மணி | தொலபழங்கால நாகரிகங்களில் பெண் கவிஞர்கள் | 2,50,000/- |
| 22. | முனைவர் அ. அ. மணவாளன் | திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் - தொகுப்பு | 2,50,000/- |
| 23. | முனைவர் அ. தட்சிணாமூர்த்தி | பத்துப்பாட்டு ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் - தொகுப்பு | 2,50,000/- |
| 24. | பேரா. நிர்மல் செல்வமணி | பரிபாடல் மொழிபெயர்ப்புக்கள்-தொகுப்பு | 1,25,000/- |
| 25. | முனைவர் சி. சண்முகம் | இந்திய மொழிப்பரப்பின் உருவாக்கத்திற்குத் தமிழ் இலக்கண மரபின் கொடை | 2,50,000/- |
| 26. | முனைவர் வி. ஞானசுந்தரம் | தமிழகப் பழங்குடியினரின் கிளைமொழிகள்-ஆய்வு | 2,50,000/- |
| 27. | முனைவர் பி. எஸ். சுப்பிரமணியம் | திராவிட வேர்ச்சொல் அகராதி - இணைப்புத் தொகுதி | 2,50,000/- |
| 28. | முனைவர் எம். ஜே. இரபிசிங் | செம்மொழித் தமிழ் வீரயுகப் பாடல்களும் பழைய கிரேக்கம், சுமேரியன் வீரயுகப் பாடல்களும் | 2,50,000/- |

CICTArchives

# இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் | மைசூர்



இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனத்தில் செம்மொழித் தமிழ் உயராய்வு மையம் தொடங்கப்பட்ட நாள் முதல் செம்மொழித் தமிழ்த் திட்டப் பணிகளை முன்னின்று வழிநடத்தியவர் இந்நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் உதய நாராயண சிங்.



பேராசிரியர் உதய நாராயண சிங் செம்மொழித் தமிழ் உயராய்வு மையப் பணிகளை ஒருங்கிணைத்துச் செயலாற்றும் பொறுப்பை இந்நிறுவனத்தின் துணை இயக்குநர் பேராசிரியர் க. இராமசாமியிடம் ஒப்படைத்தார்.

## செம்மொழித் தமிழ் உயராய்வு மையம்

CICTArchives

# பணிக்குழாம்

பேராசிரியர் **க. இராமசாமி**
துணை இயக்குநர்

### முதுநிலை ஆய்வறிஞர்கள்

பேரா. ச. அகத்தியலிங்கம்
*(13.03.2006 - 12.09.2006)*

பேரா. இராம. பெரியகருப்பன்
*(10.03.2006 - 09.09.2006)*

பேரா. செ. வை. சண்முகம்
*(13.09.2006 - 31.03.2007)*

பேரா. சோ. ந. கந்தசாமி
*(10.09.2006 - 31.03.2007)*

பேரா. அ. தாமோதரன்
*(01.05.2007 - 31.03.2008)*

பேரா. பா. ரா. சுப்பிரமணியன்
*(01.05.2007 - 31.03.2008)*

### ஆய்வறிஞர்கள்

பேரா. இர. பன்னீர்செல்வம்
(06.03.06 - 15.05.08)
பேரா. கோ. சீனிவாச வர்மா
(08.03.06 - 09.07.07)
பேரா. ப. மருதநாயகம்
முனைவர் அரிமளம் சு. பத்மநாபன்
முனைவர் கா. கோ. வேங்கடராமன்
முனைவர் இரெ. குமரன்
முனைவர் கா. உமாராஜ
முனைவர் ச. மனோகரன்
முனைவர் அன்னி தாமசு
முனைவர் இரா. கோதண்டராமன்
பேரா. சாம் மோகன் லால்
(03.05.07 - 15.05.08)
முனைவர் பி. பத்மநாபன்
(18.05.06 - 01.11.06)

### இணை ஆய்வறிஞர்கள்

முனைவர் ஏ. ஜேம்ஸ்
(09.03.06 - 16.10.06)
முனைவர் பி. செல்வக்குமார்
(2006 - 2007)
முனைவர் கூ. மு. புவனேஸ்வரி
முனைவர் மு. இராமகிருஷ்ணன்

## தொழில்நுட்பம்

### நிரலாளர்கள்

திருமதி கே. ஜி. இரஞ்சினி
(15.05.06 - 02.04.07)
திரு சு. கார்த்திகேயன்
திரு த. செந்தில்குமார்
திரு எஸ். நாராயணசுவாமி நாயுடு
திரு இரா. அகிலன்
திரு அ. முருக சுவாமிநாதன்

### இணைய வடிவமைப்பாளர்

திரு ச. குணசேகரன்

## அலுவலகம்

### முதுநிலை எழுத்தர்கள்

திரு ஜா. வா. பாஸ்கரன்
திரு கோ. புண்ணியமூர்த்தி

### இளநிலை எழுத்தர்கள்

திரு க. பெருமாள்
திரு மோ. முருகானந்தம்

### உதவி எழுத்தர்

திரு ஏ. என். வெங்கடேஷ்
(18.07.07 - 31.01.09)

### கணக்கர்

திரு நரசிம்மமூர்த்தி

### அலுவலகக் கண்காணிப்பாளர்

திரு வி. பாலசுப்பிரமணியன்

### அலுவலக உதவியாளர்கள்

திரு ஜி. நரேந்திர சுவாமி நாயுடு
(14-08-06 28-02-08)

திரு ஜே. சந்தோஷ்
(14-08-06 28-02-08)

### கணக்காளர்

திரு எஸ். கே. எஸ். அரங்கன்

### செம்பதிப்புப் பணி

பேராசிரியர் கு. சிவமணி

### பதிப்பு

செல்வி ஜே. கலைவாணி

### திருக்குறள் மொழிபெயர்ப்பு

திருமதி சுனிதா சுரேஷ்
(10.09.07 - 29.08.08)

### ஆய்வு வல்லுநர்கள்

முனைவர் கி. ஜெயகுமார்
திரு எம். சுசிலா
திரு கே. சதீஷ் (மின் நூலகம்)
திரு மஞ்சு நாயக்
(20.02.06 - 30.11.06)
திரு ஆர். சத்தியராம்
(07.03.06 - 29.04.06)
திரு வி. இரமேஷ் பாபு
(07.03.06 - 31.03.06)
திரு சி. குப்புசாமி
(09.03.06 - 31.03.07)
திரு பி. விஜயா
(01.05.06 - 31.06.06)
முனைவர் வ. மாரியப்பன்
திரு வி. அம்பிகா
(20.09.06 - 28.02.07)
திரு கோ. செந்தில்நாதன்
திரு ச. இராஜேஷ் குமார்
திரு கி. கண்ணன்
முனைவர் யு. ஜெயபாரதி

### தரவு உள்ளீட்டாளர்கள்

திரு வெ. சிவப்பிரகாசம்
திரு அ. முருகேசன்
திரு க. சங்கர்
திரு ஆர். தேவநாதன்
செல்வி ஆர். ஜெயந்தி
செல்வி வெ. காயத்திரி
செல்வி ஆர். நளினா
செல்வி பி. கல்பனா

### அலுவலக உதவியாளர்

திரு ஆர். பாலாஜி
(20.02.06 - 18.05.08)

## தமிழ் வழக்காறுகள் ஆய்வுத் திட்டம்

### முதுநிலை ஆய்வு வல்லுநர்கள்

முனைவர் க. அமுதா
(2007 - 08)
முனைவர் க. கமலா ஏஞ்சல் பிரைட்
முனைவர் இரா. அருள்மணி
முனைவர் கு. ஜெயகுமாரி
முனைவர் ப. கண்ணதாசன்

### இளநிலை ஆய்வு வல்லுநர்கள்

திரு சு. ஏழுமலை
திரு பெ. முத்துசாமி
திரு கோ. சீனிவாசன்
திரு மு. செல்வதுரை
செல்வி சீ. நாகூரம்மாள்
திரு கு. இராசசேகரன்
செல்வி மோ. அனுசுயா
செல்வி த. லலித மாலா
திரு ச. ஆறுமுகம்
திரு சே. கரும்பாயிரம்
திரு த. சரவணன்
திரு இரா. வெங்கடேசன்
திரு அ. ஆரோக்கியதாஸ்
முனைவர் ம. தமிழ்வாணன்
திரு வே. அழகுமுத்து
திரு ந. பெரியசாமி
திரு இரா. குமாரசாமி
செல்வி மா. சுசிலா
திரு ம. நாகராஜன்
திரு த. பூவை சுப்பிரமணியன்
திரு பா. இராஜா
திரு சி. இராமச்சந்திரன்

### மெய்ப்புத் திருத்துநர்

திரு கோ. இராசதுரை
திருமதி டி. சுபாஷிணி

### திட்ட உதவியாளர்கள்

முனைவர் என். தேவி
திரு ஏ. செந்தில்
திரு கே. டி. முருகேசன்
திரு ஜி. சுந்தரவதனம்
(03.10.06 - பிப்ரவரி 2007)
செல்வி டி. சசிகலா
(01.11.06 - நவம்பர் 2007)
திரு எம். ஜாபர் சாதிக் அலி
(01.09.07 - பிப்ரவரி 2007)
திரு ஜி. யுவராஜ
(19.09.07 - 18-05-08)
செல்வி எஸ். சுஜா
(26.09.07 - பிப்ரவரி 2008)

CICTArchives




**தொல்காப்பியம்**

**எட்டுத்தொகை**

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

**பத்துப்பாட்டு**

- திருமுருகாற்றுப்படை
- பொருநராற்றுப்படை
- சிறுபாணாற்றுப்படை
- பெரும்பாணாற்றுப்படை
- முல்லைப்பாட்டு
- மதுரைக்காஞ்சி
- நெடுநல்வாடை
- குறிஞ்சிப்பாட்டு
- பட்டினப்பாலை
- மலைபடுகடாம்

**பதினெண் கீழ்க்கணக்கு**

- நாலடியார்
- நான்மணிக்கடிகை
- இன்னாநாற்பது
- இனியவைநாற்பது
- கார்நாற்பது
- களவழிநாற்பது
- ஐந்திணைஐம்பது
- ஐந்திணைஎழுபது
- திணைமொழிஐம்பது
- திணைமாலைநூற்றைம்பது
- பழமொழி
- சிறுபஞ்சமூலம்
- திருக்குறள்
- திரிகடுகம்
- ஆசாரக்கோவை
- முதுமொழிக்காஞ்சி
- ஏலாதி
- கைந்நிலை

**சிலப்பதிகாரம்**
**மணிமேகலை**
**முத்தொள்ளாயிரம்**
**இறையனார் களவியல்**

பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
- சிலப். 11: 19-20